கோவிந்தராஜன்.

IB
031,6 (இ
N31
120646.

01

துரைத்தனத்தாரும் அங்கீகரித்தது

# :: தேசிங்கு ராஜன் ::

(சதாவதானம் தே. கிருஷ்ணசாமிப் பாவலர் இயற்றியது.)

8 APR 1931



TB
031,6/8
N31
170666

ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை ::

துரைத்தனத்தாரும் அங்கீகரித்தது

# தேசிங்கு ராஜன்

## சரித்திர ரூபமான வசனம்

(சித்திரப் படங்களுடன் கூடியது)

OFFICE OF THE REGISTRAR
8 APR 1931

சதாவதானம்
தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்
இயற்றியது

விவேக போதினி காரியாலயம்
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்]

[அணா 10

170646

:: கந்தன் புகழ் நூல்கள் ::

| | | | |
|---|---|---|---|
| திருப்புகழ் விருத்தியுரை, முதல் தொகுதி | 8 | 0 | 0 |
| ஷண்முக விஜயம் (கந்தபுராண வசனம்) | 0 | 12 | 0 |
| கந்தரலங்காரம், கந்தரநுபூதி .... | 0 | 3 | 0 |
| திருப்புகழ் ரத்தினமாலை .... .... | 0 | 3 | 0 |
| திருவகுப்பு (25 - வகுப்புகள்) .... | 0 | 5 | 0 |
| கந்தரந்தாதி .... .... | 0 | 2 | 0 |
| திருமுருகாற்றுப்படை .... .... | 0 | 2 | 0 |
| கந்தர் சஷ்டி கவசம் .... .... | 0 | 2 | 0 |
| திருப்புகழ்த் திரட்டு .... .... | 0 | 8 | 0 |
| பால ஷண்முக விஜயம் .... .... | 0 | 8 | 0 |
| மயில் விடு தூது .... .... | 0 | 2 | 0 |
| முருகவேள் பனுவல் திரட்டு .... | 1 | 4 | 0 |
| பாராயணத் திருப்புகழ் .... .... | 0 | 2 | 0 |
| திருப்புகழ் பாராயணத் திருமுறை .... | 1 | 0 | 0 |
| ஷை (கலிகோ பயிண்ட்) .... | 1 | 4 | 0 |

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

2922
894'8113

TB 031,6(8) N31

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தென்னிந்தியாவின் நிலைமை | .... 1 |
| 2. | செஞ்சிக் கோட்டையின் வரலாறு | .... 11 |
| 3. | சிரோப்சிங்கின் மற்றொரு மகன் | ... 17 |
| 4. | தேஜஸ்சிங்கின் வீரச் செயல்கள் | ... 23 |
| 5. | ஷா-ஆலமும் குதிரையும் | ... 32 |
| 6. | தேஜஸ்சிங்கின் பிரயாணம் | .... 37 |
| 7. | குதிரையேற்றமும் விவாகமும் | .... 45 |
| 8. | தேவநாதன் பட்டணத்தில் குழப்பம் | .... 52 |
| 9. | தேஜஸ்சிங்கின் ஆளுகை | .... 62 |
| 10. | சததுல்லாகானின் கலகம் | .... 68 |
| 11. | செஞ்சி ராணுவத்தில் கலகம் | .... 73 |
| 12. | புதிய வீரன் | .... 76 |
| 13. | குடிகளின் முறையீடும், தேஜஸ்சிங்கின் பூஜையும் | .... 92 |
| 14. | மகமத்கானின் விவாகம் | .... 99 |
| 15. | தேஜஸ்சிங் ராணிபாயைப் பார்த்தல் | ...105 |
| 16. | செஞ்சியின் சிதைவு | ....113 |

## சித்திரப் படங்கள்

---

1. தேசிங்கு, சிங்கத்தின் கழுத்தில் கட்டப்பட்ட சிகப்பாடையை அவிழ்த்தல்.
2. தேசிங்கு நீலவேணிக் குதிரையை அடக்கல்.
3. நகை வியாபாரியைப்போல் வேஷம் பூண்ட தாவுத்கான், அங்கிய நாட்டுச் சாமான்களை தேசிங்குக்குக் காண்பித்தல்.
4. தேஜஸ்சிங், திரையை கை வாளினல் கிழித்து, தன் கையை ராணிபாய்க்கு எதிரில் நீட்டுதல்.

# முன்னுரை

தேசிங்கு ராஜனைப்பற்றி அறியாத தமிழர் ஒருவரும் இல்லை. அவன் தமிழ் நாட்டில் மிக்க வன்மையுற்றோங்கிய வீரசிங்கமாக விளங்கி யிருந்ததால், அவனை நாளைக்கும் நம் நாட்டினர் அஞ்சாவீரனுக்கு ஒரு காட்டாக எடுத்துக்காட்டுகின்றனர். அத்தகைய பெரும்புகழ் படைத்த வீரனது உண்மைச்சரிதம் இதுவரை எந்தப் பாஷையிலும் வெளிவரவில்லை. ஆயினும் ஆங்கிலத்தில் மாத்திரம் ஆங்காங்கு இவ்வீராதி வீரனைப்பற்றிய சில குறிப்புகள் வெளிவந்துள்ளன. தமிழில் தேசிங்கு ராஜன் கதையென ஒரு நங்கைப்பாட்டும் வழக்காற்றில் உள்ளது. அதன்கண் இவ்வீரனது கதை ஒருவாறு விளக்கபட் டிருப்பினும், கதையில் சம்பந்தப்பட்டாரது ஊர், பெயர் முதலியன பெரும்பான்மையும் மாறுபட்டிருப்பதுடன் புனைந்துரைக்கும் புலவர் சிருட்டியும் பெரிதும் பெருகியுள்ளதால், உண்மையை உள்ளவாறறிய அது நமக்கு இடந்தரவில்லை. யான் அக்குறையை ஒருவாறு நீக்கக் கதைப்பாட்டையும் மற்றும் பாயிரத்துள் குறித்த பல ஆங்கில நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு இந்நூலை எழுதிமுடித்தேன்.

இக்கதையுள் வந்துள்ள தோன்றமல்லண்ணு என்பவனது உண்மைப் பெயர் ஸ்ரீநிவாசதாஸ ஸ்தோத்ர

மால் ஆகும். அப்பெயரே நாளடையில் தோடர்மாலெனவும் தோன்றமால் எனவும், தோன்றமல்லண்ணு எனவும் திரிந்தது. இது விஷயம் எனக்கு இப்புத்தகம் அச்சான பின்னர், சென்னை சர்வகலாசாலை அங்கத்தினருள் ஒருவராகிய பிரமஸ்ரீ K. V. சுப்பைய்யர், M. A. L. T., அவர்கள் தெரிவித்ததால் இதனை ஈண்டுக்கூறல் ஆவசியக மாயிற்று.

இந்நூல் நண்ணூல் என முகவுரை கூறிய கனம் ஜெ. லாஸரஸ் ஐயர் அவர்களுக்கும், மதிப்புரை கூறிய மதிவாணர்கட்கும் என் மனமுவந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இதனை இனிதின் எழுதி முடிப்பான் எனக்கு அறிவு திரு ஆற்றலை அளித்த செவ்வேள் முருகன் சீரருளை நாளும் சிந்திக்கின்றேன்.

தே. கிருஷ்ணசாமிப் பாவலன்.

# INTRODUCTION

At the request of the author I write a few lines by way of introduction. This little book narrates the story of the life and doings of the popular chieftain of Gingee, Dejas-Sing generally known as Desing Raja. Many new facts and incidents, not generally included in bazaar publications, are supplied, I believe, for the first time. Indian heroism is the moral pointed. The story itself is written in simple sentences and in a good, grammatical style, so as to be understood by young people, whether boys or girls. Its perusal by them is sure to awaken in the rising generation a growing desire for courage, truth and patriotism.

*Rev : J. Lazarus, B. A., D. D.*

(For many years Chief Examiner in Tamil ; Fellow of the University of Madras ; Author of Kural; Dictionary of Tamil Proverbs ; Tamil Grammar etc., etc.)

## OPINIONS

*M. S. H. Thompson Esq.. B. A.,*
Inspector of European
& Govt. Training Schools,
MADRAS.

The story of prince De'Sing by Sathavathanam T. Krishnaswamy Pavalar is a simple, straightforward account of the Prince whose name figures in the popular ballad sung with such interest by the masses. The book gives a correct account, as gathered from the records of Fort St. George, of the Prince and of his exploits, and is *a most entertaining little work. Books of this type are a real contribution to popular literature.*

*T, Chelvakesavaroya Mudaliar, M. A.,*
Professor in Tamil, Pachaiyappa's College,
Madras.

Raja De'Sing has long been in vogue in ballad form, enjoyed only by the illiterate and never used by school boys or schools. Though the story is but two centuries old, it has long ago assumed the form of a romance. This historical romance by Mr. T. Krishnaswamy Pavalar *is written in simple Tamil without any savour of pedantism.* I hope this Pavalar will ere long bring out other South Indian historical romances in Tamil, and thus make the traditional stories and adventures a source of delightful reading ofr our youngfolk.

# தேசிங்கு ராஜன்

## முதல் அத்தியாயம்

## தென்னிந்தியாவின் நிலைமை

உலகில் ஒப்புயர்வற்று விளங்கும் இந்தியாவை, கி.பி. 1707-ம் வருடத்திலிருந்து 1712-ம் வருடம் வரையிலும், அவுரங்கசீபின் மகனாகிய ஷா-ஆலம் என்பவன் பஹதூர்-ஷா என்னும் பெயருடன் ஆண்டுவந்தனன். அவன் தனது முன்னோர்களைப் போலவே, டில்லியைத் தனது ராஜதானிப் பட்டணமாகக் கொண்டு, அதில் வீற்றிருந்து, இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் தனது மேற்பார்வை இருக்கும் வண்ணம், ஆங்காங்குத் தனக்கடங்கிய மகமதிய வீரரை நவாபுகளாக ஏற்படுத்தினன். அந்த நவாபுகள் எல்லோரும் பாதுஷாவின் அதிகாரத்திற் கடங்கி அவன் ஆணையின்படி நடந்து வந்தனர். அவர்களுள், கர்னாடக தேசத்தை யாண்டு வந்தவனும் ஒருவன். அந்தக் கர்னாடக நவாபின் பார்வைக்கு அடங்கிய ராஜ்யம், அக்காலத்தில் பல பிரிவுகளாக இருந்தது. அப் பிரி

வுகள் எல்லாம் அக்காலத்தில் பாளையங்கள் என்னும் பெயருடன் வழங்கி நின்றன. அவற்றை, பல சிற்றரசர்கள், பாளையக்காரர் என்னும் பெயருடன் ஆட்சி செய்துவந்தனர். ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் முதலானோரும் அக்காலத்தில் வியாபாரத்தின் பொருட்டு, முக்கிய இடங்களில் வந்து சேர்ந்து, தங்கள் வியாபாரங்களைக் கவனித்து வந்தனர். அவர்கள் தங்கள் வியாபாரத்திற்குச் சௌகர்யமான சில பட்டணங்களை, அச்சிற்றரசர்களிடம் பெற்று, அவ்வரசர்களுக்கு, அப்பட்டணங்களின் பொருட்டுப் பகுதிப்பணமும் கட்டி வந்தனர். அச்சிற்றரசர்கள் எல்லோரும், கர்னாடக நவாபின் அதிகாரத்திற்கு உட்பட்டவரே யாயினும், அவர்கள் உண்மையில் அப்படி நடந்துகொள்ளவே இல்லை. மேலுக்கு மாத்திரம், அந்த நவாபிற்கு அடங்கியவராக வெளிவேஷம் காட்டிவந்தனர். சிலர், அந்த நவாபை மதிக்காமல், தாமே தனித் தலைவராகவும் இருந்தனர்.

தென்னிந்தியாவில், அக்காலத்தில் சமாதானம் என்பதே இல்லாமல் இருந்தது. அடிக்கடி, அரசர்களின் போரும், கொள்ளையும், ஜனங்களுக்குப் பெரிய பீதியை உண்டுபண்ணின. மகமதியர், பாளையக்காரர், மராட்டியர் முதலானோர், பெரும்பான்மையும் கொள்ளையடிப்பதையே தமது தொழிலெனக் கடைப்பிடித்து வந்தனர். அதனால், ஜனங்கள் எல்லோரும் தத்தம் கைப்பொருளைப் பூமியில் புதைத்துப் பூதம் போற் காத்துவந்தனர். அக்காலத்தில், சௌத் என்றும், சர்தஸ்முகி என்றும் சொல்லப்படும் வருமானவரி

கள், அந்த அரசர்களின் மரியாதைக் கொள்ளையாய் இருந்துவந்தன. சில பாளையக்காரர் மாத்திரம், அத்தகைய கொடுந்தொழிலில் தலையிடாமல், தங்களுடைய குடிகளைத் தங்கள் மக்கள்போலக் காத்துவந்தனர்.

அக்காலத்தில், அந்தணர் ஒழிந்த மற்றைய ஜாதியரெல்லோரும் போரிலே ஆர்வம் உடையவராய் இருந்தனர். அவர்களுக்குப் போரே பெரிய விளையாட்டாக இருந்தது. ஒவ்வொரு சிறுவனும், கல்வி கற்கும்போது, போர்த்தொழிலையும் உடன்கற்று வந்தனன். சிறுவர்கள் போர்த்தொழிலில் தேர்ச்சிபெற, அக்காலத்தில் சிலம்ப வித்தியா சாலைகள் பல ஏற்பட்டிருந்தன. அவற்றில் ஜாதிபேதமும், ஏழை, பணக்காரர் என்ற பேதமுமின்றிப் பலரும் பல வித்தைகளில் பழகிவந்தனர். யானையேற்றங் குதிரையேற்ற முதலியவற்றில் வல்லுநராய் விளங்கிய வீரர்களை அக்காலத்தினர் பெரிதும் பாராட்டி வந்தனர். எவரும் அடக்குதற்கு அருமையான ஒரு குதிரையை, ஒருவன் தன் வன்மையால் அடக்கிவிட்டானாயின், சிறப்புகள் பலசெய்து அவனை ஊர்வலம் கொண்டுவந்து, அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடுவர். அப்பழக்கம் இந்தியருக்கேயன்றி மகமதியர்களுக்கும் இருந்துவந்தது.

போர்த் தொழிலில் ஒவ்வொருவரும் தேர்ச்சி பெற்றிருந்தமையின், அக்காலத்தில் எங்குக் காணினும் ஜனங்களுக்குள் சண்டை சச்சரவுகளும் குட்டிக் கலகங்களும் கூத்தாடத் தலைப்பட்டன. 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்' என்பதற்கு இணங்க, ஆங்

காங்குக் கொலையும் களவும் வியாபித்து வந்தன. அதனால், அவ்வப்பாகத்தினை யாண்டுவரும் அரசர்கள், தாம் அத்தகைய குணம் உடையவராய் இருந்தும், குற்றவாளிகள் சிறு குற்றம் செய்தாலும், அவற்றிற்குப் பெருந் தண்டனையே விதித்து வந்தனர். அற்பக் களவை ஒருவன் செய்தானாயின் அவனது ஒரு பக்கத்துக் காலையும் கையையும் அப்படியே துணித்து விடுவது, அக்காலத்தில் பெரிய வழக்கமாய் இருந்து வந்தது. பெருங்களவிற்கோ, தூக்குத் தண்டனையே தண்டனையாய் விளங்கியது. ஒருவன் ஒரு பெண்ணை அவளது பெற்றோரின் சம்மதம் இன்றி அழைத்துச் சென்று மணஞ்செய்து கொண்டாலும், அந்நியப் பெண்களை அவதூறாகப் பேசினாலும், அவனுக்கும் அந்தத் தண்டனையே முடிவாய் இருந்தது. எவனேனும், ராஜாங்கத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்தாலும், செய்ய நினைத்தாலும், அங்ஙனம் செய்பவருடன் சேர்ந்தாலும், அவனை அக்காலத்து அரசர்கள் கழுவில் ஏற்றிவந்தனர்.

ஜனங்கள் அதிகமாய் நடமாடும் பெரிய பட்டணங்களிலேயே வியாபார முதலியவை நடைபெற்று வந்தன. அவ்விடங்களிலேயே இந்துக்களின் பெரிய கோயில்களும் அமைந்திருந்தன. அவ்விடத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும், தெய்வபக்தி மிகுந்தவராய் வாழ்ந்து வந்தனர். எக்காலத்திலும் அவர்கள் தத்தம் மதாசாரப்படி, ஸ்நான ஜப விரதானுஷ்டானங்களில் சிறிதும் தவறாது இருந்தனர். அங்ஙனம் இருந்தாலும்,

அவர்களிடத்தில் அக்குணத்திற்கேற்ற பூததயை மருந்துக்கும் கிடைப்பதரிதாய் இருந்தது.

அக்காலத்தில், சைவம் வைணவம் என்னும் இரண்டு மதங்களில் வைணவமதமே ஒருவாறு தலைமை பெற்றிருந்தது. பெரும்பான்மையும், அக்காலத்தில் இருந்த பாளையக்காரர் எல்லோரும், அந்த வைணவ மதத்தையே மேற்கொண்டிருந்தனர். என்றாலும், அவர்களுக்குச் சைவத்தின்மீது துவேஷம் என்பதே கிடையாது. சிற்சில இடங்களில், ஜைனர்களும் விசேஷமாய்ப் பரவியிருந்தனர். அவர்களுக்கென, ஆங்காங்குப் பல கோயில்களும் இருந்தன. அவை எல்லாம் மிகப் பழையகாலத்திற் கட்டப்பட்டவை. ஒவ்வொன்றும், கைவன்மை அமைந்த சிற்பிகள் செய்த பலவிதமான சித்திர வேலைப்பாடுடன் அமைந்திருந்தது.

ஆங்கிலேயர், வர்த்தகத்தின் பொருட்டு இப்பாகத்தில் வந்து குடியேறினர் என்று முன்னரே யாம் கூறியுள்ளோம். அவர்களுடன் டச்சுக்காரர், போர்த்துக்கேசியர் முதலான அந்நியரும் வர்த்தகராய் இத்தென்னாட்டில் வந்திருந்தனர். அங்ஙனம் வந்த அந்த அந்நிய ஜாதியாருடன், உள்ளூர் ஜனங்கள் அதிக நேசபாவம் கொண்டு விளங்கினர். மகமதியர்களுள் சிலரும், இந்தியருக்குப் பெருந்துணைவராய் இருந்து, அவர்களுக்குப் பலவாறாய நன்மைகளைப் புரிந்துவந்தனர்.

தனவந்தர்கள், அக்காலத்தில் மிகவும் பெரிய மாளிகையில் வாசம் செய்துவந்தனர். அம்மாளிகை

கள், பெரும்பான்மையும் கருங்கல்லினுல் கட்டப்பட்டவை யாகவே இருந்தன. அவை யாவும் பட்டணங்களில் அதிக ஜனங்கள் நடமாடும் செல்வாக்கமைந்த வீதிகளிலேயே அமைந்திருந்தன. ஏழைகள், மற்றைய இடங்களில் வாசஞ் செய்துவந்தனர். அவர்களுடைய வீடுகள் செங்கல்லினுலும், மண்ணினுலும் கட்டப்பட்டிருந்தன. சிலர், ஓலைக் குடிசைகளிலும் உல்லாசமாய் வாழ்ந்துவந்தனர்.

அந்தணர் வதை செய்து ஒரு ஜீவனைத் தின்னும் வழக்கம் அற்றவராய் இருந்தனர். அவர்களுக்கு அரிசி, காய்கறி, வெண்ணெய், நெய், தயிர், பால், சர்க்கரை முதலியனவே முக்கியமான உணவாய் இருந்தன. அவற்றுடன் அவர்கள், சில சமயங்களில், திராக்ஷை, சிச்சிலி, வாழை, மா, பலா முதலியவற்றின் பழங்களையும், உணவாகக்கொண்டு ஜீவித்து வந்தனர். வீரசைவரும், அந்த அந்தணர்களைப் போலவே, பெரும்பான்மையும் இருந்தனர். அவர்களும், மச்ச மாம்ஸ போஜனம் செய்வது கிடையாது. மற்றைய வகுப்பினர் எல்லாம், ஆடு, மான், புறு, முயல், வாத்து முதலியவற்றின் மாம்ஸங்களைத் தின்றுவந்தனர். அக்காலத்தில், அரசர்களும் தனவந்தர்களும் அடிக்கடி வனத்திற்சென்று வேட்டையாடி, மான், முயல் முதலிய மிருகங்களையும், புறு, கொக்கு, காடை, கௌதாரி முதலிய பக்ஷிகளையும் கொன்று, அவற்றைச் சமைத்துண்டு பேரானந்தம் அடைந்திருந்தனர். தாமே கொன்று வீழ்த்திய பக்ஷிகளைத் தின்பதில், அவர்க

ளுக்கு அத்தகைய ஆனந்தம் பெருகியது. அக்காலத்தில், ஆடுகள் மிகவும் மலிவாய் இருந்தன. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ஆடுகளைக் கடைக்காரர் கொன்று அவற்றை விற்றுவந்தனர். அங்ஙனமாயினும், அக்காலத்தில் கோ வதையே கிடையாது. கோ வதை செய்வது பெரும்பாவம் என்று, அக்காலத்திய இந்தியர் எல்லோரும் எண்ணி, கோக்களைத் தெய்வங்களாகப் பூஜித்துவந்தனர்.

பணக்காரர்கள், இடுப்பில் பல மடிப்பமைந்த ஆடையைக் கட்டிக்கொண்டிருந்தனர்; உடல் மறைப்புண்டாக முழங்கால் வரையிலும் நீண்ட பட்டுச்சட்டைகளையும் தரித்திருந்தனர். சிலர், பருத்தி நூலால் நெய்த சட்டைகளையும் அணிந்திருந்தனர்; தங்கள் புயங்களின்மேல் அங்கவஸ்திரங்களையும் உருமாலாகத் தரித்திருந்தனர்; தலையணியாகப் பெரும்பான்மையும் பட்டினால் செய்த குல்லாவை உபயோகித்து வந்தனர். அவர்கள், காலில் ஒன்றும் அணிவதே கிடையாது; சில சமயங்களில் பாதக்குறடை மாத்திரம் அணிந்து நடந்து செல்லுவர். ஏழைகளுக்கோ, அத்தகைய ஆடம்பரமான ஆடைகள் இல்லை. அவர்கள், தங்கள் இடுப்பில் மாத்திரம் சாதாரணமான ஆடையைத் தரித்திருந்தனர். மற்றைய அவயவங்களை, அவர்கள் ஒன்றும் மறைப்பதே இல்லை. தனவந்தர்கள், விலையுயர்ந்த கடுக்கன், அரைஞாண், மோதிரம், காப்பு, கொலுசு முதலிய ஆபரணங்களை அணிந்திருந்தனர். அவ்வாபரணங்களில் விலைமதிக்கப்படாத ரத்தினங்

களும் இழைக்கப்பட்டிருந்தன. அவர்கள் வெளியே போகும்போது, அவர்களுடன் ஒரு வேலைக்காரனும், அவர்களுக்குப் பட்டுக் குடைபிடித்துப் பின் தொடர்ந்து செல்வான்.

பெண்கள் எல்லோரும் அந்தக் காலத்தில் அநேகமாய் வெளியில் வருவது கிடையாது. அவர்கள் ஆடல் பாடல் முதலியனவெல்லாம், அவர்கள் வீட்டுக்குள்ளாகவே நடந்துவரும். அவர்களுக்கு, அவர்கள் இருக்கும் வீடுகளே, பரந்தகன்ற உலகமாய் இருந்தன. சில பெண்களுக்குத் தங்கள் வீட்டைவிட்டு, வேறு உலகம் ஒன்று உண்டென்பதும் தெரியாது. சீமாட்டிகள், தங்கள் வீட்டைவிட்டு முக்கிய காரணமாக வெளியே போகவேண்டுமானால், பல்லக்கில் ஏறியே வெளிச் செல்வார்கள். அவர்கள் ஏறிச்செல்லும் பல்லக்கும் பட்டுத்துணியால், இடை வெளி தெரியாதபடி மூடப்பட்டிருக்கும். அப்பல்லக்கைச் சுமந்துசெல்பவரும் பெண்களாகவே இருந்தனர். அச்சீமாட்டிகள், விலையுயர்ந்த வெள்ளிய பட்டுப் புடவைகளையே உடுத்தியிருந்தனர். சிலர், பஞ்சாடையிலும் பிரியம் வைத்திருந்தனர். அவர்கள், அணிந்து கொள்ளும் புடவைகளின் நீளம் பதினாறு முழமாகும். அந்தப் பதினாறு முழத்தில், முக்காற்பாகத்தை இடுப்பிற் சுற்றி, மற்றைய காற்பாகத்தை மீட்டும் ஒரு சுற்று இடுப்பிற்சுற்றி, மிகுந்த ஆடையைத் தங்கள் மார்பின் மேற் கொண்டுவந்து, முதுகின் பக்கமாக இறக்கி, முன்றானையை, இடதுபக்கத்து இடுப்பிற் செருகிவந்த

னர். அதனால், அவர்களுடைய ஒரு பக்கத்துப் புயமும் கையும், பார்ப்பவர் கண்ணுக்கு மறைபடாமல் விளங்கி இருந்தன. சிலர் காற்கை அளவுள்ள இரவிக்கையையும் அணிந்திருந்தனர். அவர்கள், தலையில் எவ்வித ஆடையும் தரித்துக் கொள்வதில்லை. நன்ருய்ச் சீவிமுடித்த கூந்தலின் உச்சியில் ஒரு சடைபில்லை என்னும் ஆபரணத்தை மாத்திரம் அணிந்து, அம்முடிச்சியில் வாசனையமைந்த புஷ்பங்களை அணிந்து வந்தனர். அவர்களுடைய மூக்குத்தண்டில், கெட்டி முத்துத் தொங்கப்பெற்று, ரத்தினங்கள் இழைக்கப் பெற்ற புலாக்கு என்னும் ஆபரணம் அழகு செய்திருந்தது. அம்மூக்கின் இரண்டு பக்கங்களிலும் விலை மதிப்பிடக்கூடாத, ரத்தினமிழைத்த திருகாணிகள் இரண்டு, மூக்குத்திகள் என்னும் பெயருடன் விளங்கின. அப்பெண்கள், தமது கழுத்தில் முத்துமாலை பொன்னரிமாலை முதலிய கழுத்தணிகளையும், புயத்தில் வங்கி முதலிய ஆபரணங்களையும், கையில் காப்பு கொலுசு முதலிய நகைகளையும், விரல்களில் பல வடிவமைந்த ரத்தின மோதிரங்களையும், காலில் வெள்ளியாற்செய்த கொலுசு பாதசரம் பாதச்சிலம்பு முதலிய அணிகளையும் ஆவலுடன் அணிந்துவந்தனர்.

அந்தக் காலத்தில், அந்தணர் ஒழிந்த மற்றைய சாதியர் எல்லோரும், பல பெண்களை விவாகம் செய்து வந்தனர். நாயகன் இறந்துவிடின் அக்காலத்தில் அவன் மனைவியும் அவனுடன் உடன்கட்டை ஏறிவிடுவள். அங்ஙனம் உடன்கட்டை ஏறும் தொழில் மிகவும் சிலாக்கியமான புனிதத் தொழில் என அக்காலத்தவர்

எண்ணிவந்தனர். தங்கள் நாயகருடன் உலக வாழ்வே போயது என்று எண்ணி, அக்காலத்துப் பெண்கள் எல்லோரும், அந்நாயகருடன் உடன்கட்டை யேறு வதில் மிகவும் சந்தோஷம் உடையவராய் இருந்தனர். அவர்களிடத்தில், 'நாம் இறக்கப் போகிறோமே' என்ற பயமே இல்லாமல் இருந்தது. அங்ஙனம் இறந்தால், சுவர்க்கலோகத்தில் தங்கள் நாயகருடன் ஆனந்தத்தை அனுபவித்திருக்கும் பெரும்பேறு தங்களுக்குக் கிடைக்கும் என்பது அவர்களுடைய திடமான எண் ணமாய் இருந்தது.

## இரண்டாம் அத்தியாயம்

## செஞ்சிக் கோட்டையின் வரலாறு

தென்னிந்தியாவின்கண் சேஞ்சி என்னும் அணி நகர் ஒன்றுளது. அது தென்னிந்திய சரித்திரத்தில் மிகவும் சிலாக்கியமானது. அந்த நகரத்தில் எவரா லும் தகர்த்தற்கு அருமையான கோட்டை ஒன்றும் இருக்கின்றது. அக்கோட்டை, ஏறக்குறைய அறு நூறடி உயரமுள்ள மூன்று செங்குத்தான குன்று களுக்கிடையில் அமைந்துள்ளது. அம்மூன்று குன்று களுக்கும் முறையே ராஜகிரி, ரத்னகிரி, சிருங்காரகிரி, என்பன பெயராய் அமைந்தன. அம்மூன்றும் முக் கோண வடிவாய் அமர்ந்து, அக்கோட்டைக்குப் பேர ரண்களாய் நிலைபெற்றுள்ளன. அக்குன்றுகளின் அடி வாரத்தில், பெரிய அரண்மனை ஒன்றும் இருக்கின் றது. அத்தகைய வலிவமைந்த செஞ்சிக் கோட் டைக்கு இணையான வேறு கோட்டை ஒன்று, கர்னு டகதேசத்திலேயே இல்லை. அதனைத் தெய்வத்தன்மை அமைந்த பலமுள்ள கோட்டை என்று பூர்வத்தில் இருந்த தென்னிந்தியர் எல்லோரும் எண்ணியிருந்த னர். அக்கோட்டை, இந்தக் காலத்தில் இன்னவரால் கட்டப்பட்டது என்னும் விஷயம் நமது அறிவிற்குப் புலப்படாததாய் உள்ளது.

இங்கிலாந்தில், வெள்ளைரோஜா முத்திரையை யுடைய கக்ஷியாரும், சிவப்புரோஜா முத்திரையை யுடைய கக்ஷியாரும் போர்செய்த (War of White and Red Roses) காலத்தில், தஞ்சாவூரில் அரசாண்ட

சோழ மன்னர்களுக்கு அந்தச் செஞ்சிக் கோட்டை மிகவும் பலம் உள்ள இருப்பிடமா யிருந்ததெனத் தெரியவருகிறது. அந்தச் சோழமன்னர்கள், அக்காலத்தில் கீர்த்தி பெற்றோங்கிய விஜயநகரத் தரசருடன் போர்செய்த காலத்தில், அக்கோட்டையிலேயே வந்திருந்தனர். அது, தனது மலையரணால் அம்மன்னர்களைப் பகைவரின் கைப்படாவண்ணம், பலமுறையும் காத்து வந்தது. கடைசியில் கி. பி. 1500-ம் வருடத்தில், அந்தச் சோழராஜ்யம் செஞ்சிக்கோட்டையுடன், விஜய நகரத்தரசரின் ஆதீனமாயது. சில வருடங்களுக்குப்பின், தென்னிந்தியாவில் பிரபலமுற்றோங்கிய மகமதியர், அந்த விஜயநகரத்தரசருடன் போர்செய்து, அந்த ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். என்றாலும், அந்தப் போரின் பலனாய், செஞ்சிக்கோட்டை மகமதியர்கைக்குப் போகவில்லை. அதனை ஏறக்குறைய கி. பி. 1669-ம் வருடத்தில் பிஜபூர் நவாப் ஒருவன், தனது வசமாக்கிக் கொண்டனன். அதுகண்ட சிவாஜி என்னும் மஹாராஷ்டிர மன்னர் தலைவன் 1677-ம் வருடத்தில், தனது வன்மையினாற் செஞ்சியைத் தன்னுளுகையின் கீழ்ப்படுத்தினன்.

அந்தச் செஞ்சியைத் தங்கள் வசமாக்கிக்கொள்ள அக்காலத்தில் மகமதியர் எவ்வளவோ பிரயத்தினங்களைச் செய்தனர். அவுரங்கசீப் என்பவனும், தனது முழு சைன்யத்தையும் அனுப்பி, அதனைத் தனதாக்கிக் கொள்ள முயற்சிசெய்தான். அப்போது அக்கோட்டையினை, ராஜாராம் என்னும் மஹாராஷ்டிர வீரன், தலைவனுய் இருந்து காத்துவந்தனன். அவன், தன்

ஞல் ஆனவரையிலும் சுமார் நாலைந்து வருஷம்வரை அக்கோட்டை பகைவரது ஆதீனமாகாதபடி, அவரை எதிர்த்து நின்றனன். கடைசியாக, அந்த அவுரங்கசீபின் அதிகாரத்துக்கு அடங்கி, தக்ஷிணதேசத்தில் நவாபாய் விளங்கிய ஸுல்பிர்கர்கான் என்பவன், 1698-ம் வருடத்தில் பெரும் போர்செய்து வெற்றியடைந்தான். அதனால், செஞ்சிக்கோட்டை மகமதியரின் வசமாய் நின்றது. அம்மகமதிய நவாப், அவுரங்கசீபின் உத்திரவின்படி சிரோப்சிங் என்னும் ஒரு ராஜபுத்திர வீரனை, அக்கோட்டைக்குச் சிற்றரசனாக ஏற்படுத்தினன். அந்த ராஜபுத்திர வீரன், அந்தக் கோட்டையையும், அதனைச் சூழ்ந்துள்ள இடங்களையும் மகமதியரின் அதிகாரத்துக்கு அடங்கி ஆட்சி செய்து வந்தனன். அப்போது அவுரங்கசீப் இறந்துவிட்டான். அதனால் இந்தியா முழுவதும் பெருங்குழப்பம் உண்டாயது. உண்டாகவே, அத்தகைய சமயத்தை எதிர்பார்த்திருந்த சிரோப்சிங், மிகவும் வலியமைந்து மகமதியர் அதிகாரத்துக்கு அடங்காதவனாய்த் தானே தனித்தலைவனானன்.

சிரோப்சிங் தனித்தலைமை பூண்டதும், தன் ராஜ்யத்தை உறுதிப்படுத்தும் வண்ணம், பல சீர்திருத்தங்களைச் செய்தனன். முதன் முதலாக அவன் தனது சேனைகளை அதிகமாய்ப் பலப்படுத்தினன், பிறகு, தனது குடிகளுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் ஒருவாறு செய்து முடித்தான். அக்காலத்தில், அவனது ராஜ்யம், வடக்கில் ஆறுகாட்டையும், தெற்கில், திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் என்னும் ஜில்லாக்

களையும் எல்லையாகவுடைய இடங்களி லெல்லாம் வியா பித்திருந்தது. அதனால், புதுச்சேரிக்குப் பதினாறு மைல் தூரத்தில் உள்ளதாகிய செயின்டேவிட் கோட்டை நிலைபெற்றுள்ள தேவநாதன் பட்டணம் என்னும் ஊரும், அவனுக்குச் சொந்தமாக இருந்தது.

சிரோப்சிங் என்பவன் எவர்க்கும் அடங்காப் பெருந்திடம் அமைந்த மஹாவீரன். அவன், தன் காலை மிதித்தவரின் தலையை மிதித்தலே தகுதி யென்று எண்ணியிருந்தவன். அவனைக் கண்டால் மற்றைய பாளையக்காரர்கள் எல்லோரும் அஞ்சி நடுங்குவர். அவனுடைய வார்த்தை அக்காலத்தி லிருந்த சிற்றரசர்களுக்குக் குருவார்த்தையாக இருந்து வந்தது. அவன் தனது இல்லறம் சரிவர நடக்க, ராம் பாய் என்னும் கற்புடை மங்கை ஒருத்தியை மணஞ் செய்துகொண்டான். அந்த மங்கையோ மஹாவுத்தமி. அவள் தன் கணவனையே தன் அருந்தெய்வம் எனப் பாவித்து வழிபட்டு வந்தனள். அவர்கள் இருவரும் அநேக நாளாக இல்லறம் நடத்தி வந்தும், அந்த அறத்தை நிலைநாட்ட அவர்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்தது.

தனக்குப் பின் ராஜ்யத்தை ஆளவும், தன் பெயர் சொல்லவும் தனயன் இல்லையே என்று ஏக்கங் கொண்ட சிரோப்சிங், பற்பல தருமங்களைச் செய்த னன்; புண்ணிய ஸ்தலங்களுக்குத் தன் மனைவியுடன் யாத்திரை செய்தான்; பல பெரிய நதிகளில் நீராடி னன். அங்ஙனம் அவன் செய்த அருந்தவத்தின் பய னாய், அவனுக்கு ஒருசற்புத்திரன் பிறந்தனன். சிரோப்

சிங் தனக்கு மகப்பேறு வாய்த்த சந்தோஷத்தால் தனது ராஜ்யத்தில் மஹோற்சவம் கொண்டாடினுன். தானம் என்று வருபவர்களுக்கு, அவர்கள் மனங்களிக்க வேண்டிய பொருள்களை வாரி வாரிக் கொடுத்தான். தனது குடிகள், அந்த வருஷத்தில் வருமானவரி கட்ட வேண்டியதில்லை என்றும் பறை சாற்றினுன். தங்களைப் பிள்ளைகளைப்போல் பாராட்டி ஆண்டுவந்த அரசனுக்கு புத்திரன் பிறந்தான் என்பதைக் கேட்ட குடிகளும், தங்கள் தங்கள் வீட்டில் உற்சவம் கொண்டாடினர்.

பிறந்த பாலகனுக்கு, சிரோப்சிங் நல்லநாள் ஒன்றில், பெரியோர்கள் எல்லாம் வாழ்த்துக்கூற, **தேஜஸ் சிங்** என்று பெயரிட்டனன். அப்பெயரே நாளடைவில் **தேசிங்கு** என்று மருவி, இக்காலத்தில் வழங்கி வருகிறது. அந்தத் தேஜஸ்சிங் என்னும் பாலன், தனது பெற்ருேர் மகிழ, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனன். தந்தை அவனுக்கு ஐந்தாவது வயது வந்ததும் தக்க உபாத்தியாயரைக் கொண்டு வித்தியாப்பியாசம் செய்து வைத்தனன். அதனுடன், அப்பாலன் போர்த்தொழிலிலும் பழகிவந்தான்.

தேஜஸ்சிங், கல்வியிலும் போரிலும் வல்லவனுய்த் தேர்ந்துவருங் காலமே யாம் முன் அதிகாரத்திற் குறித்த காலமாகும். அக்காலத்தில் பல சிலம்ப வித்யாசாலைகள் இருந்தன என்று முன்னரே அவ்வதிகாரத்தில் யாம் குறித்திருக்கின்ருேம். அந்தச் சிலம்ப வித்யாசாலை ஒன்றில் நமது தேஜஸ்சிங், சிலம்பவித்தை பயின்று வந்தனன். அவன், வயதிற் சிறியவனுய்

இருந்தும் தன் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைக் காட்டிய அளவிலேயே பிடித்துக்கொண்டு, அவற்றை மற்றைய பிள்ளைகளுக்கு **கலிபாவாய்** * விளங்கிக் கற்பித்து வந்தான். அவனுக்கு அக்காலத்தில் உயிர்த் தோழனாக விளங்கியவன் **மகமத்கான்** என்னும் ஒரு மகமதியச் சிறுவன். அந்த மகமத்கானும், ஏறக்குறைய தேஜஸ்சிங்கைப்போலவே, அச்சிலம்பவித்தையில் வல்லவனாக இருந்தான். அவன், எப்போதும் தேஜஸ்சிங்கைவிட்டுப் பிரிவதே கிடையாது. தேஜஸ்சிங், மகமத்கானைத் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அங்குத் தனக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள **தாலீம்கானாவில்,** அவனுடன் தனியாகத் தன் ஆசிரியர் கற்பித்த பாடங்களிற் பழகிவருவான். சிரோப்சிங், தன் மகனுடைய ஆற்றல் நாளுக்குநாள் பலப்பட்டு வருவதைக் கண்டு சந்தோஷித்தவனாய்த் தானே அவனுக்குக் குதிரையேற்றம், யானையேற்றம் முதலியவற்றைக் கற்றுக்கொடுத்து, போரிலும் அவனைத் திறமை உடையவனாகச் செய்தான். மகமத்கானும், தேஜஸ்சிங்குடன் இருந்து அவ்வித்தைகளை அவ்வப்போது கற்றுக்கொண்டான்.

---

* கலிபா = பிரதம மாணவன்

## மூன்றும் அத்தியாயம்

## சிரோப்சிங்கின் மற்ருெரு மகன்

சிரோப்சிங், தன்னுடைய ராணுவத்தில் காதர் என்னும் பெயருடைய போர்வீரன் ஒருவனை வைத்திருந்தனன். அவனுக்கு, சான்ட்பீபி என்னும் அழகுடைய மகள் ஒருத்தி யிருந்தனள். அவள் ஒரு நாள் தன் தந்தையின் வீட்டுக்குப் பின்னுள்ள ஒரு நந்தவனத்தில் தன் தோழிகளுடன் உலாவிக் கொண்டிருந்தனள். சிரோப்சிங், அவ்வழியாக வேட்டையாடிவரும் போது அவளைக் கண்டனன். அவளது பேரழகு அவனுடைய மனத்தை உருக்கியது. அவள், செயற்கை அழகாம் ஆபரணங்கள் முதலியன இல்லாமலே, உலகிற்சிறந்த உருவினளாய் இருத்தல்கண்டு, மன்னவன் அவளை மணம்புரிய எண்ணங் கொண்டான். என்றனும், அவன் முன்னதாகவே ராம்பாயைமணஞ்செய்து கொண்டமையின், அவன் தன் இளமையின் சேஷ்டையால், அப்பெண்ணைப் பிறரறியாதபடி நேசித்து, அவளுடன் வாழ்ந்துவந்தனன்.

சான்ட்பீபி, சில நாட்களுக்குப் பின் ஒரு மகனைப் பெற்றனள். அதை அறிந்த மன்னன், இனி அவளைத் தன்னூரில் வைத்திருப்பது தன்னுடைய கௌரவத்திற்குக் குறைவாகும் என்று அறிந்து, அவளை அவன் தந்தையுடன் வேண்டிய பொருள்களைக் கொடுத்து வேற்றூருக்கு அனுப்பிவிட்டனன். அவள் சென்ற ஒரு வருடத்திற்குப் பின்னரே, ராம்பாய் தேஜஸ்சிங்கைப் பெற்றனள். சான்ட்பீபி தன் தந்தையுடன்

ஹைதராபாக்கத்துக்குச் சென்றாள். அங்குச் சில வருடங்களுக்குப் பின் காதரும் இறந்தான். அவன் மகள் தன் தந்தையின் பிரிவால் வருந்தி, அவ்வருத்தத்தை ஒருவாறு தனது மகனால் மாற்றிக்கொண்டு, அவனைப் பள்ளிக்கு விட்டனள். பள்ளியில், அப்பாலன் மிகவுந் திறமையாய்ப் பாடங்களைப் படித்து அக்காலத்தில் இன்றியமையா வித்தையெனக் கருதப்பட்ட போர்த் தொழிலிலும் பழகிவந்தான். அவனுக்கு, சான்ட்பீபி தாவுத்கான் என்னும் பெயரிட்டனள். தாவுத்கான், இளமையி லிருந்தே அதிக சுறுசுறுப்புடையவனாய், கல்வியிலும் போர்த் தொழிலிலும் அதிக சிரத்தையுடையவனா யிருந்தான்.

அவன், ஒரு நாள் தன்னுடைய தோழருடன் கூடி, கானகத்தில் விளையாடுதற் பொருட்டுச் சென்றான். தோழர் எல்லோரும் பலவாறாகப் பிரிந்து, காட்டில் ஆங்காங்குப் பக்ஷிகளைப் பிடிக்கச் சென்றனர். அங்கு ஓரிடத்தில் தாவுத்கானும் சிறு பக்ஷிகளை வேட்டையாடி நின்றான். அப்போது அவ்வழியாகச் சில அடிமை வியாபாரிகள் வந்தனர். அந்தக் காலத்தில், அடிமை வியாபாரம் பலமாக இருந்தது. மனிதரை, அவர்கள் பெற்றோரின் சம்மதமும், அவர்கள் சம்மதமும் இன்றி, வஞ்சகமாகக் கொண்டுபோய்ப் பிறர்க்கு விற்குங் கூட்டத்தார் பெருகியிருந்தனர். அடிமையாயினார், அக்காலத்திற் பட்டபாடு, எவராலுஞ் சொல்ல இயலாது. தங்களை அடிமை கொண்டோர் பார்வைக்கு அவர்களெல்லோரும் மிருகங்களாகவே காணப்பட்டனர். இக்காலத்தில், நாம் மிருகங்களிடத்திற் கூட

எவ்வளவோ கருணை காட்டி, அவற்றை அன்புடன் பாராட்டி வருகிறோம். அக்காலத்திலோ, ஆறறிவுள்ள மக்களாகிய அடிமைகளை, அவர்கள் எஜமான்மார் மிருகங்களினும் கேடுகெட்ட மிருகங்களென எண்ணி, அவர்களிடத்தில் ஓயாது வேலைவாங்கி, அவர்களை ஹிம்சித்து வந்தனர். அதனால், அடிமைகள் பலர் தங்கள் கஷ்ட நிலைமையை அறிந்து தற்கொலையும் செய்துகொண்டனர்.

அந்த அடிமை வியாபாரிகள், தாவுத்கானைக் கண்டு, அவனை அன்புடன் அழைத்தனர். தாவுத்கான், பதினான்கு வயதும் நிரம்பப்பெறாத இளைஞன் ஆனதால், வியாபாரிகளது அன்பான வார்த்தைக்கு மகிழ்ந்து, அவர்களிடஞ் சென்றான். வர்த்தகர், அவனுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து, தங்களுடன் வருவதானால், அவனைப் பொன்னால் அலங்கரித்து அனுப்புவதாகக் கூறினர். தாவுத்கான், அதை மெய்யென்று நம்பி அவர்களைப் பின்பற்றிச் சென்றான். கடைசியில் அவர்கள், **கோவா** என்னும் ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய், அவனைப் போர்த்துக்கேசியன் ஒருவனுக்கு விற்றனர். அவனை வாங்கிய போர்த்துக்கேசியன், அவனைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு, **கான்ஸ்டான்டிநோபில்** என்னும் நகருக்குக் கொண்டுபோயினன். அங்குத் தாவுத்கானை ஒரு மகமதியன் விலைகொடுத்து வாங்கினன். அம்மகமதியனோ அதிக பணக்காரன். அவன், வெளியூர்களுக்குக் கப்பல் மார்க்கமாய்ச் சென்று, வியாபாரஞ் செய்து வருதலையே தனது தொழிலாகக் கொண்டிருந்தான்.

ஒருநாள், அம்மகமதியன் தாவுத்கானை அழைத்துக்கொண்டு, கப்பல் மார்க்கமாய் வியாபாரத்தின் பொருட்டுச் சென்றனன். கப்பல், அரபிக்கடல் வழியாக வந்தது. அப்போது, இரவு வந்துவிட்டதால், கப்பற் கொள்ளைக்காரர் சிலர், தங்கள் தோணிகளில் வந்து, அக்கப்பலை எதிர்த்தனர். அவர்களைக் கண்டதும், கப்பலில் இருந்தவர் அனைவரும் அச்சங்கொண்டு, செய்வகை அறியாராய்த் திகைத்திருந்தனர். கப்பலுக்குரியவன், தன் பொருளை யெல்லாம் கள்வர் கொள்ளை கொண்டாலும் கொள்ளட்டும், தன் உயிர் நின்றால்போதும் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டான். அந்த நிலைமையில், பதினாறு வயதுடைய தாவுத்கான் தன் எஜமானன் முன்வந்து, 'ஐயா! தயை செய்து என்னைப் பீரங்கி இருக்கும் இடத்திற்கு அனுப்புங்கள். யான் உங்கள் எல்லோரையும் அந்தக் கள்வரிடமிருந்து தப்புவிக்கிறேன்' என்றான். உயிர் பிழைத்தால்போதும் என்று எண்ணியிருக்கும் கப்பற்றலைவன், அவன் இஷ்டத்தின்படியே அவனை அனுப்பினன். தாவுத்கான் பீரங்கியிருக்கும் இடத்திற்சென்று தைரியமாக அப்பகைவர் எதிராகப் பீரங்கியைத் திருப்பி, அவர்கள்மேல் வெடிகளைப் பிரயோகித்தான். கள்வர் எல்லோரும் அப்போது போர்செய்ய ஆயத்தராய் இல்லை. அவர்கள், அக்கப்பலிலுள்ளோர் பணிந்து தம் பொருளைக் கொடுத்துப் போய்விடுவர் என்று எண்ணியிருந்தனர். திடீரென வெடி கிளம்பவே, அவர்கள் அச்சங்கொண்டு, வந்தவழியே திரும்பி யோடினர். அவர்களுள் சிலர், பீரங்கிக் குண்டுக்கு இரை

யும் ஆயினர். அச்சம்பவத்தை யறிந்த கப்பற்றலை வனுக்கு அப்போது எவ்வளவு ஆனந்தம் உண்டா யிருக்கும்! அவன் உடனே வந்து தாவுத்கானை யணைத்து, “இன்று முதல் நீ எனக்கு அடிமையல்ல. என்னுடைய உயிர் நண்பன்” எனக் கூறினன். கப்பல் குறித்த இடத்தில் வந்து, மீண்டும் கான்ஸ்டாண்டி நோபிளுக்குத் திரும்பியது.

கான்ஸ்டாண்டிநோபில் வந்ததும், கப்பற்றலை வன் தாவுத்கானுக்கு வேண்டிய பொருள்களை யெல் லாங் கொடுத்து, அவனைத் தனியாக வியாபாரம் செய் யும்படி விட்டனன். தாவுத்கானுக்கு வியாபாரத்தின் மேல் அவ்வளவு ஆசையில்லை. தானொரு பெரிய வீரனுகிப் பெரும் புகழ் அடையவேண்டும் என்ற எண்ணமே அவன் மனதில் குடிகொண்டிருந்தது. அதனுல், அவன் வர்த்தகத்தில் தன் முழுக் கருத்தை யுஞ் செலுத்தாது, மேலும் மேலும் போர்த்தொழிலி லேயே பயிற்சி செய்துவந்தனன். அவனுக்கு அவ் விடத்தில் தன் தாயின் ஞாபகம் சிறிதும் இல்லா தொழிந்தது. எப்போதும், தன் வீட்டில் போர் வீரரை அழைத்து, அவர்களுக்குப் பலவாருன உப சாரங்களைச் செய்து, அவர்களிடமிருந்து போர்த் தொழிலைக் கற்றுக்கொள்வதே அவனுடைய தினசரி வேலையாக இருந்தது. அதனுல், அவனுடைய பொருள் எல்லாம், நாளுக்கு நாள் குறையத் தலைப்பட் டது. அவன் அதையும் கவனியாமல், தன் கருமத் திலேயே கண்ணுய் இருந்தான்.

தாவுத்கானுக்கு முன் உதவிசெய்த வர்த்தகன், தாவுத்கான் வர்த்தகத்தைக் கவனியாதிருப்பதுகண்டு, அவனிடம் வந்தனன். தாவுத்கான், தனக்குதவிய மஹோபகாரியைக்* கண்டதும் பணிந்து, அவரை வரவேற்றனன். அந்த உபகாரி, தாவுத்கானுக்குப் புத்திமதிகள் கூறி, வியாபாரத்தைக் கவனியாதிருப்பது அழகாகாது என்று சொல்லித் தமது வீடடைந்தனர். அப்போதும், தாவுத்கான் தன் கருமத்தை விடாது, மனம்போன போக்காய் வீரர்களுக்குப் பொருளைச் செலவழித்து, வியாபாரத்தை நடத்தாது விட்டிருந்தான். சிலநாட்களுள் அவனுடைய பொருள் எல்லாம் அழிந்தன. அதனால் அவன் உண்ணும் உணவிற்குங் கதிகெட்டு, முன் தன்னை அடிமை கொண்ட வர்த்தகனிடத்தில் மீண்டுஞ் சென்றனன்.

---

* மஹோபகாரி = பேருபகாரம் செய்தவன்

## நான்காம் அத்தியாயம்

## தேஜஸ்சிங்கின் வீரச் செயல்கள்

தேஜஸ்சிங்கிற்குப் பதினாறு வயதாயது. அவன் ஒரு நாள் வேட்டையாடும் பொருட்டுத் தன்னுடைய தோழன் மகமத்கானுடன் கானகஞ் சென்றான். அவனுடன், சில போர்வீரர்களும் வேடர்களும் துணையாகச் சென்றனர். தேஜஸ்சிங் கானகத்தில் உள்ள மிருகங்களையெல்லாம் வேட்டையாடித் திரும்பும்போது, அறுபதடி வேங்கை யொன்று, அவனெதிராகப் பாய்ந்து, ஒரு போர்வீரனைக் கொல்ல எண்ணியது. அதனைக் கண்ட தேஜஸ்சிங், தன்னுடன் வந்த வீரனுக்கு உண்டான ஆபத்தை அகற்றவேண்டி, தன்னுயிரையும் பொருட்படுத்தாது, விரைவில் அவ்வேங்கையிருக்கும் இடத்தில் பாய்ந்தான். அறுபதடி வரையிலும் பாயும் அந்த வேங்கையைத் தன்னுடைய பாய்ச்சலால், அவன் நெருங்கவில்லை. ஆயினும், தான் பாய்ந்திறங்கிய இடத்தினின்றும் பத்தடி தூரம் ஓட்டமாக ஓடி, அதனைத் தைரியத்துடன் குத்திக்கொன்றனன். அதனைக்கண்ட புலிக்குத் தப்பிய வீரனும் பிறரும், தேஜஸ்சிங்கின் வீரத்தையும், அஞ்சா நெஞ்சையும் மனமாரப் புகழ்ந்தனர். பின்னர், தேஜஸ்சிங், தன்னுடைய பரிவாரங்களுடன், அரண்மனை வந்துசேர்ந்தான்.

தேஜஸ்சிங், அரண்மனை வந்ததும், தான் புலி இருந்த இடத்தில் சரியாய்ப் பாயத் தவறியதற்காக, மிகவும் வருத்தம் அடைந்தான். அவனைக் காட்டில்

புகழ்ந்துகொண்டு வந்த வீரர்களின் புகழ்ச்சி, அவனுடைய ஏக்கத்தால், அவனுக்கு இகழ்ச்சியாகவே தோன்றியது. அதனுல், அவன் அவ்வேங்கையைப் போல், அறுபதடி உயரமும் நீளமும் பாயப் பழக வேண்டும் என்று எண்ணங்கொண்டு, அவனுடைய தாலீம்கானுவில்* உள்ள சுவரொன்றில், அறுபதடி உயரத்தில் ஒரு குறிவைத்து, அக்குறியைத் தொடுவதென்று, மகமத்கானுடன் பழகினன். அவன் சில நாட்களுக்குள், அக்குறியைத் தொட்டு, அங்ஙனம் தான் தொட்டதற்கு அடையாளமாகத் தன் கையில் சந்தனக் குழம்பைப் பூசி, அக்கையால் அக்குறிமேல் அறைந்தனன். அந்த அறை பதிந்த இடத்தில், அவனுடைய ஐந்து விரல்களின் அடையாளமும் அப்படியே படிந்து, நாளைக்கும் நாம் காணும் தோற்றத்தில் இருந்து வருகிறது. அதனை ஆங்குள்ளார் 'தேஜஸ்சிங்கின் பஞ்சா இது' என்று இன்னும் சொல்லி வருகின்றனர். மகமத்கான், தன்னுலான வரையிலும் அவ்வளவு உயரத்தில் பாய முயற்சிசெய்தனன். அவனுல், ஐம்பதடி உயரத்திற்குமேல் பாய இயலாமற் போயிற்று.

ஒரு நாள், சிரோப்சிங் கொலு அமர்ந்திருக்கையில், அயல்நாட்டு வீரன் ஒருவன், 'என்னை மல்யுத்தத்தில் தோற்கடிப்பவன் உலகத்திலேயே இல்லை' என்று கூறி, அவனிடம் சன்மானம் பெறவந்தனன். சிரோப்சிங் அரண்மனையில், வன்மைவாய்ந்த போர்வீரர் பலர்

* தாலீம்கானு=தேகாப்பியாசம் செய்யும் இடம் (கொட்டடி)

இருந்தனர். அவர்கள் எல்லோரும், வந்த வீரனைக் கண்டு மிகவும் பயங்கொண்டனர். அதைக் கண்ட சிரோப்சிங், தன்னுடைய நகரில் அயலானை வெல்லும் வீரன் ஒருவன் இல்லாமற்போயினனே என்று ஏங்கி, வந்த வீரனுக்குப் பரிசளித்து அனுப்பத் தீர்மானஞ் செய்தனன். அருகில் இருந்த தேஜஸ்சிங் அதனை யறிந்து, "அப்பா! யான் இவனுடன் மற்போர் செய்கிறேன்; என்னை வேடிக்கையாக விட்டுப் பாரும்" என்று கூறினன். அரசன், தன் மகனை மல்யுத்தத் திற்கு விட மனம் துணிந்திலன் எனினும், தேஜஸ்சிங் பன்முறையும் வற்புறுத்தியதால், ஒருவாறு அதற்கு இயைந்தனன். அயல்நாட்டு வீரன், அரசன் மக னுடன் மல்யுத்தஞ் செய்ய சந்தோஷங் கொண்டான். எனினும் அவனுக்கு தேஜஸ்சிங்கைத் தோற்கடித்தால் அரசனுக்குக் கோபம் உண்டாகுமே என்ற பயமும் உண்டாயது. தேஜஸ்சிங், வீரனது மயக்கத்தை உணர்ந்து, அவனை நோக்கி, "நீ என்னைத் தோற்கடித் தால், என் தந்தை உனக்கு வேண்டிய பரிசுகளைக் கொடுப்பாரே யல்லது, உன்மீது கோபங்கொள்ளார். முதலில், நீ என்னைத் தோற்கடிக்க முடியுமோ என் பதை எண்ணாது, இத்தகைய விஷயத்தில் உன் மன தை வருத்துதல் நல்லதல்ல. வந்து, உன் வீரத்தை என்னிடம் காட்டுக" என்றான். வீரன், "அப்பா! நீயோ இளைஞன்; யானோ பலமுற்ற பல வீரர்களையும் வெற்றி கொண்டவன். நீ என்னிடம் வந்து எதிர்க்கத் துணிந்தது, சிங்கத்தை ஒரு எலி எதிர்ப்பதுபோ லாகும். வேண்டாம், வீணில் ஏன் துயரத்திற் குள்

ளாகிறாய் ? நீ என் கைக்கு எவ்வளவு ?" என்று கூற, தேஜஸ்சிங்குக்குக் கோபம் பிறந்துவிட்டது. அதனால், அவன் அவ்வீரனை, "ஏட! நீ ஆண்பிள்ளையானால், இத்தகைய வார்த்தை யாடாது, என் எதிராக வந்து நில். இல்லையாயின், உன் விருதுகளை யெல்லாம் இவ்விடம் போட்டு, உயிருடன் உன்னுடைய ஊருக்குப் போய்ச்சேர்" என்று கூறினன். அதைக் கேட்டதும், வீரனுக்குக் கோபம் மூண்டது. அதனால் அவன் யுத்தஞ் செய்ய, தேஜஸ்சிங்கு எதிராக வந்தனன். இருவருக்கும் போர் மூண்டது. பார்த்தவர்கள் எல்லோரும், அரசன் இவ்வளவு பெரிய வீரனிடம் தன் மகனை யுத்தத்திற்கு அனுப்பி இருத்தல் ஆகாதெனக் கூறினர். முதலில், வீரன் தேஜஸ்சிங்கைக் கீழே வீழ்த்தினன். தேஜஸ்சிங், உடனே கோபத்துடன் எழுந்து, வீரன் முன்னாக நின்று, அவனுடைய வலது கழுத்தில் தன்னுடைய இடதுகையை வைத்து, வலது கையால், வீரனுடைய முழங்கையைப் பற்றி மேலெழுப்பி, அவனுக்குப் பின்னால் வந்தனன். அதனால், வீரன் தேஜஸ்சிங் கையில் அகப்பட்டுக்கொண்டான். தேஜஸ்சிங், வீரனின் பின் வந்த சில வினாடிக்குள், அவனை மரம்போல் கீழே வீழ்த்தி, அவனுடைய முதுகை மணலிற் படும்படியாகச் செய்தனன். உடனே, அங்குள்ளவர் எல்லோரும், தேஜஸ்சிங்கை, சந்தோஷத்தால் அப்படியே தூக்கிக்கொண்டனர். தன்னைக் கீழே வீழ்த்தி, முதுகை மண்படச் செய்து தனக்கு அபஜய முண்டாக்கிய தேஜஸ்சிங்கைப் போன்ற வீரன் ஒருவனை இதுவரையில் தான் கண்ட

தில்லை என்று அவ்வீரன் புகழ்ந்தனன். தேஜஸ்சிங், தன்னுடைய தந்தையிடம், அவ்வீரனின் வேலைத் திறமையைக் கூறி, அவனுக்கு விசேஷ சன்மானஞ் செய்யும்படி வேண்டினன். சிரோப்சிங், தன் மகனுடைய இஷ்டத்திற் கிணங்க, அவ்வீரனுக்குப் பலவாய பரிசுகளைத் தந்தான். பிறகு தேஜஸ்சிங், ஒரு வீரனை அவமானஞ் செய்தோமே என்று மனம் நொந்து, அவ்வீரனிடம் வந்து, அவனுக்கு இனிய மொழிகள் பல கூறி அவனை யனுப்பினன்.

அச்சம்பவம் நடந்த சில நாட்களுக்குள் விஜயதசமி வந்தது. அந்தத் தசமியில், அரசன் வீரர்களது திறமைகளைக்கண்டு அவர்களுக்குப் பரிசு கொடுப்பது வழக்கம். அதனால், பல ஊர்களிலும் இருந்து பற்பல வித்தைகளிலும் தேர்ந்த வீரர்கள் பலர், தங்களுடைய வித்தையின் திறமையைக் காட்ட, அன்றைய தினம் வந்து சேர்ந்தனர். அவர்களுள், பிரான்சு தேசத்து வீரன் ஒருவன் ஒரு சிங்கத்துடன் அரசன் கொலு எதிராக வந்தனன். அவனை அங்கிருந்த சபையோர் அதிசயத்துடன் நோக்கினர். அவன் கொண்டுவந்த சிங்கம், பலமுள்ள இருப்புக் கம்பிகள் இடப்பெற்ற ஒரு கூட்டில் இருந்தது. அதன் கழுத்தில், ஒரு சிகப்பு ஆடை சுற்றப்பட் டிருந்தது. அது, பார்வைக்கு மிகவும் பயங்கரமானது. அதன் கர்ஜனை பேரிடியின் முழக்கத்தையுந் தோற்கடிக்கும்.

அந்தப் பிரான்சு தேசத்தான், அரசன் எதிராக வந்து, "என்னையன்றி இச்சிங்கத்தினிடம் செல்வோர் உலகில் ஒருவரும் இல்லை ; அப்படி யாராவது அதனி

டம் போகிறேன் என்று துணிந்து, அதன் கழுத்தில் கட்டியிருக்கும் சிகப்பாடையைக் கழற்றிவரும் பக்ஷத்தில், யான் அவர்களுக்கு அடிமையாய் விடுகிறேன்" என்று சபதங் கூறினன். அப்போது, சிரோப்சிங் பல ஊர்களினுமிருந்துவந்த வீரரையும், தன் அரண்மனை வீரர்களையும் பார்த்து, "உங்களில் யாருக்காவது, இச்சிங்கத்தினிடம் போகும்வன்மை உண்டோ?" எனக் கேட்டனன். ஆங்கு இருந்த வீரர்கள் எல்லோரும், அம்மிருகத்தின் அடங்காக் குணத்தைக்கண்டு, அரசனுக்கு ஒன்றுங் கூறுமல் இருந்தனர். அதைக்கண்ட அரசன், தானே அச்சிங்கத்திடம் செல்வதெனத் தீர்மானித்து, அதனைக் காணப்போயினன். அரசனே வயது தளர்ந்தவன். என்றாலும், அந்நிய நாட்டான் வீரங்கூறி நிற்க, அவனுக்கு இடங் கொடுத்தலாகாது என்பது அவன் எண்ணம். அதனுல் அவன் கூட்டின் அருகே சென்றதும், அவனைத் தன் இரண்டு கால்களையுந் தூக்கிக் கொல்ல, அச்சிங்கம் கர்ஜனையுடன் தாவியது. கூடு, அங்குத் தடையாக இராதிருந்தால், அவனை அஃது அக்கணமே கொன்று சபையையும் ஹதம் செய்திருக்கும். அரசன் அதையுணர்ந்து, தன்னுடைய எண்ணத்தை வெளிக்குக் காட்டாது, மீண்டும் தன் ஆசனத்தில் வருத்தத்துடன் வந்தமர்ந்தான். தேஜஸ்சிங் இவற்றை எல்லாம் பொறுமையுடன் பார்த்திருந்து, கடைசியாக அச்சிங்கத்தினிடம் போவதாகத் துணிந்தெழுந்தான். சிரோப்சிங் அவனை எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். தேஜஸ்சிங், அவன் வார்த்தையைக் கேளாது, ஈட்டி ஒன்றை மாத்திரம் துணையாகக்



தேசிங்கு, சிங்கத்தின் கழுத்தில் கட்டப்பட்ட
சிகப்பாடையை அவிழ்த்தல்

கொண்டு, அந்தக் கூட்டினருகே சென்றான். சிங்கம் முன்போல், பூமி அதிரும் விதமாய்க் கர்ஜித்தது. அதனைக் கேட்டு, அங்கிருந்த எல்லோரும், திக்பிரமை கொண்டனர். தேஜஸ்சிங் மாத்திரம் சிறிதும் அச்சமின்றிக் கூட்டிற் புகுந்தான். கண்டவரெல்லோரும், "தேஜஸ்சிங் இறந்தான். ஏதினி அவன் பிழைப்பது!" என்று வருந்தினர். சிங்கம் தேஜஸ்சிங்கின் மேல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தது. அவனோ, அப்பாய்ச்சலுக்குப் பிழைத்து, ஒரு அடி விலகி, அதன் கழுத்தில் கட்டப்பட்ட சிகப்பாடையை அதன் பக்கமாக இருந்து அவிழ்த்தான். சிங்கம் அவன் பக்கமாகவே திரும்பியது. அவன் அதன் முன்னுகாதபடி, பக்கமாகவே திரும்பித் திரும்பிநின்று, அவ்வாடையை எடுத்துக்கொண்டான். பின்னர், அம் மிருகத்தினின்றும் தப்பி வெளி வருவதெப்படி என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயது. அதனால் அவன் அதன் பக்கமாகவே திரும்பி நின்று ஈட்டியால் அதனைக் குத்தினன். அப்போது சிங்கம் அதிக கோபத்துடன் கர்ஜித்து, அந்த ஈட்டியைக் கடித்தது. தேஜஸ்சிங் அதுவே சமயமென அறிந்து விசையுடன் அந்த ஈட்டியை ஈர்த்துக்கொண்டே வெளி வந்தனன். உடனே சேவகர் கூட்டின் கதவை அதன்மேல் இருந்து மூடினர். தேஜஸ்சிங் தன் ஈட்டியுடன் வெளிவந்து, அந்த ஆடையைத் தன் தந்தையிடம் கொண்டுவந்து கொடுத்து வணங்கி நின்றான். சிரோப்சிங், தன் மகனைப் பெருமகிழ்ச்சியுடன் அணைத்து சந்தோஷத்தில் ஆழ்ந்தனன். பிரான்சு வீரன், தேஜஸ்சிங்கின்

வீரத்தைப் புகழ்ந்து, தன்னிடத்தில் இருந்த கைத் துப்பாக்கியை அவனுக்குப் பரிசாக அளித்துத் தன்னை அடிமையெனக் கொள்ள வேண்டினன். தேஜஸ்சிங், கைத் துப்பாக்கியை அன்புடன் ஏற்று, அந்த அய லானை அடிமைகொள்ளாது விட்டனன். பிறகு சிரோப் சிங், வந்த வீரர்களுக்கெல்லாம் அவரவர் திறமைக்கு ஏற்றபடிப் பரிசுகொடுத்து அனுப்பினன்.

## ஐந்தாம் அத்தியாயம்

# ஷா-ஆலமும் குதிரையும்

ஷா-ஆலம், ஒருநாள் தன் மந்திரி பிரதானிகள் புடைசூழக் கொலு வீற்றிருந்தனன். அப்போது ஒரு சோப்தார்* வந்து, '† ஷா இன்ஷா! யாரோ ஒருவன் தங்களுடைய சந்நிதானத்துக்கு ஒரு குதிரையைக் கொண்டு வந்துள்ளான்; தங்களுடைய உத்தரவை எதிர்பார்க்கிருன்' என்று கூறினன். ஷா-ஆலம் குதிரை என்ருல் உயிர் விடுபவன். அவனுக்குக் குதிரையில் இருந்த பிரியம்போல், உலகில் வேறெந்தப் பொருளினும் இல்லே. அதனல் அவன் அந்தக் குதிரையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலால், தன் சிப்பந்திகளுடன் வெளியே சென்றனன்.

குதிரை தன்னேப் பற்றியுள்ள நூறு ஆட்களேயும் மீறிக்கொண்டு ஓடப் பார்த்தது. அதனுடைய மூர்க்கத்தை அடக்க அந்த நூறு பெயர்களாலும் முடியவில்லே. அதனே நவாபு வெளியே வந்துகண்டு, 'இத்தகைய அடங்காக் குதிரையை யான் என்றுமே கண்டதில்லே' என்று புகழ்ந்தான். குதிரைக் குரியவன் நவாபு முன்பாக வணங்கி நின்று, 'இக்குதிரையைத் தங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தேன். இதனேத் தாங்கள் அங்கீகரிக்க வேண்டும்' என்று அவனே வேண்டினன். நவாப், அதனே அங்கீகரித்த

---

* சோப்தார் = வெள்ளித் தடி பிடிக்கும் சேவகன்.

† ஷா இன்ஷா = ராஜாதி ராஜன்.

தாகக் கூறித் தன்னுடைய ஆட்கள் பலருக்கும் அக் குதிரையைத் தன்னுடைய குதிரைலாயத்தில் கட்டும்படி உத்திரவிட்டு, அந்தக் குதிரையைக் கொண்டுவந்தவனுக்குப் பலவிதமான சன்மானங்களைச் செய்தான்.

அன்று முதல் நவாப்பிற்கு அந்தக் குதிரையை அடக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாயது. அதனால் அவன், தன்னுடைய குதிரைவீரர் எல்லோரையுங் கொண்டு, அதனை அடக்கப் பார்த்தனன். அஃது ஒருவரிடத்தும் அடங்கவில்லை. அதனை அடக்கவேண்டும் என்று வந்தவர்களுள், சிலர் இறந்தும், சிலர் அடிபட்டும் போயினர். நவாப்பிற்கு, அதனால் ஏற்பட்ட ஏக்கம் பெரிதாயிற்று. எவருக்கும் அடங்காத அந்தக் குதிரையை அடக்கி, அதன்மேல் சவாரி செய்ய வேண்டும் என்பது அவன் எண்ணம். குதிரையோ, அவன் கருத்திற்கு இணங்குவதாய்க் காணவில்லை. நவாப் தன்னுடைய கருத்தை எப்படியாவது முடித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால், பல அரசர்களையும் வரவழைத்து, "யார் இந்தக் குதிரையை அடக்கிவிடுகிறாரோ அவருக்கு, சில ஊர்களைப் பரிசாகக் கொடுக்கிறேன்" எனக் கூறினன். அதைக் கேட்ட அரசர்களுள் பலர் அந்தக் குதிரையை அடக்க முயன்றும் முடியாமல், அதனால் உதைபட்டும் சொல்லப்பட்டும் போயினர்.

நவாப், ஒருநாள் தன் கொலுவிலிருந்து, அக்குதிரையை அடக்குவோர் உலகில் உண்டோ என்று சபையோரைக் கேட்டான். சபையில் இருந்தவருள், இராஜ லிங்கபாபு என்னும் முதல் மந்திரி எழுந்து, 'ஷா

இன்ஷா! தம்முடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமானல், செஞ்சிக் கோட்டையை ஆண்டுவரும் சிரோப்சிங்ளன்பவனை வரவழையுங்கள். அவன் குதிரை யேற்றத்தில் மிகவும் வல்லவன்; எப்படிப்பட்ட குதிரையையும் அடக்கும் ஆற்றல் உள்ளவன்' என்று நவாப்பிடம் கூறினன். நவாப், உடனே தன்னுடைய கணக்கப்பிள்ளையை யழைத்து, சிரோப்சிங்குக்குக் கடிதம் எழுதுமாறு கட்டளையிட்டான். கணக்கப்பிள்ளை கடிதம் எழுதி நவாபிடங் கொடுக்க, அதனை அவன் படித்துப்பார்த்துத் தன் கையெழுத்திட்டு ஓர் ஆள் வசம் அனுப்பினன்.

கடிதம் கொண்டுபோன ஆள், செஞ்சிக்கு வந்து சிரோப்சிங்கைக் கண்டு, நவாப்பினுடைய கடிதத்தை அவனிடங் கொடுத்தான். சிரோப்சிங் அதைப் பிரித்துப்பார்த்து, "என்னை நவாப் வரும்படியாக எழுதியிருக்கிருர். நான் இன்றே புறப்படப்போகிறேன்" என்று தன் சபையோர்க்குக் கூறி, தன்னுடைய மனைவி ராம்பாயிடம் சென்ருன். ராம்பாய், தனது நாயகன் கொலுவைவிட்டு வந்ததைக்கண்டு அதிசயித்து, அவனை 'தாம் வந்த காரணம் என்ன?' என்று கேட்டாள். சிரோப்சிங், தான் டில்லிக்குப் போகப் பிரயாணமாவதைப்பற்றி அவளிடங் கூறினன். அவள் அதுகேட்டு வருத்தம் அடைந்து, 'தாம் என்னை விட்டுப்போக மனந்துணிந்தீர் அல்லவா?' என்று அவனைக் கேட்டனள். அரசன், அவளைத் தேற்றி 'நவாப்பினுடைய கட்டளையின்படி நடப்பது நம்முடைய கடமையன்ருே? அன்றியும், அவர் என்னை ஒரு பொரு

ளாக மதித்து, வரும்படியாக மிகவும் வேண்டியுள்ளார். ஆதலால், நான் அவசியம் அங்குப் போகவே வேண்டும். நீ சில நாள் பொறுத்திரு; நான் வந்துவிடுகிறேன்' என்று கூறி டில்லிக்குப் பிரயாணமாயினன்.

ஷா-இன்ஷா, சிரோப்சிங் வருவதை யறிந்து, அவனை அன்புடன் வரவேற்க, தன்னுடைய ஊரில் அலங்காரமுதலியன செய்திருந்தான். சிரோப்சிங்கும், டில்லிக்கு வந்தனன். அவனை, நவாப் அதிக அன்புடன் உபசரித்துத் தன்னுடைய கொலு மண்டபத்திற்கு அழைத்துவந்து தனது ஆசனத்தின் பக்கமாய் அவனுக்கென இடப்பெற்ற ஓராசனத்தில் உட்காரும்படி கூறினன். சிரோப்சிங், நவாப்பிடத்தில் வணக்கங்காட்டி அவன் குறித்த ஆசனத்தில் அமர்ந்து, 'ஷா-இன்ஷா! நீங்கள், என் விஷயமாகச் செய்த இச்சிறப்பை, யான் என்றும் என் மனத்துள் மறவாது வைப்பேன். நீங்கள், என்னை இவ்விடம் அழைத்த காரணம் என்ன? தயைசெய்து சொல்லுங்கள்!' என்ருன். நவாப், அவனைத் தன் குதிரையிடம் அழைத்து வந்து, 'இதோ இக்குதிரை எவருக்கும் அடங்காமல் இருக்கிறது. இதனை அடக்க உனக்கே ஆற்றல் உண்டு என்பதை யறிந்து, உன்னை வரவழைத்தேன். இதனை, எத்தனையோ மன்னர் வந்து அடக்க முயற்சிசெய்தனர். அவர்கள் எல்லோரும் மானபங்கம் அடைந்து சென்ருரே அல்லது, ஒருவராவது தம்முடைய காரியத்தில் வெற்றி கொள்ளவில்லை' என்று அவனிடங் கூறினன். சிரோப்சிங் அந்தக் குதிரையைப் பார்த்து, 'ஷா-இன்ஷா! இதனை யடக்குவது ஒருபெருங் காரியமா? இதோ

அடக்கி விடுகிறேன்; பாரும்' என்று அந்தக் குதிரையிடம் போகும்போது, நவாப், 'சிரோப்சிங்! நீ அதனைச் சாக்கிரதையாகப் பிடிக்கவேண்டும். இல்லாவிடின் அது உன்னையே உதைத்துக் கொன்றுவிடும்' என்று அவனை அழைத்துக் கூறினான். சிரோப்சிங் அதைக் கேட்டு நகைத்து, 'ஷா-இன்ஷா! இதுவோ என்னை உதைக்கும்! பாருங்கள், இதை அடக்கி உங்களுக்குக் கொடுத்து, நான் என்னுடைய ஊருக்குச் செல்லுகிறேன்' என்று கூறி, அக்குதிரையைப் போய்ப் பற்றினன். குதிரை அவனையும் ஏமாற்றி, அவன் பிடித்த பிடியுடன், அவ்வூரையே ஹதமாக்கியது. சிரோப்சிங், அதன்மேல் ஏறவும் இல்லை. என்ன செய்வான் அவன்! தன்னால் ஆனவரையும் அந்தக் குதிரையை அடக்கி அடக்கிப் பார்த்தான். அது அடங்காமல் காற்றாய்ப் பறந்தது. சிரோப்சிங், அதனுடன் ஓட இளைத்து, தன் பிடியை விட்டுவிட்டான். உடனே, வீரர்கள் பலர் அதனை மடக்கி, லாயத்தில் கொண்டுவந்து கட்டினர். சிரோப்சிங் வெட்கமுற்று, அக்குதிரையை அடக்காமல், தன் ஊருக்குத் திரும்புவதில்லை என்று அவ்விடத்திலேயே தங்கியிருந்தனன்.

---

## ஆறும் அத்தியாயம்

## தேஜஸ்சிங்கின் பிரயாணம்

இராணி ராம்பாய், தனது கணவர் வருவார் வருவாரெனப் பல நாட்களாக எதிர்பார்த்திருந்தாள். வாரங்கள் பலவும் சென்றன. சிரோப்சிங் வரவில்லை. அதனால், அவள் அதிக வருத்தம் அடைந்தாள். டில்லியிலிருந்து, அவள் நாயகனைப்பற்றி ஒரு தகவலும் வரவில்லை. அப்படியே மாதங்களும் பல சென்றன. அதனால், சிரோப்சிங்கிற்கு ஏதோ விபத்து ஏற்பட்டு விட்டதென அவள் எண்ணிவிட்டாள். அவள் அந்த எண்ணத்தால் ஏக்கங்கொண்டு பாயும் படுக்கையுமாயினள். தேஜஸ்சிங், தன் தாயினிடம் வந்து, அவளுடைய துயரின் காரணத்தைக் கேட்டான். அவள் வெட்கத்தால் அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. அவள், உணவு கொள்ளுதலின்றிப் பலநாள் இருக்கவே, அவளுக்கு அடிக்கடி பிராணபத்தை உண்டு பண்ணும் மூர்ச்சை உண்டாயது. தன்னுடைய தாய் உணவின்றி இருக்கிறாள் என்பது தேஜஸ்சிங்கிற்குத் தெரியாது. அவனுக்கு, போரும் வீரமுமே பெரிய விளையாட்டாக இருந்துவந்தன. அதனால், அவன் அரண்மனைக் காரியங்களைக் கவனியாமல் இருந்தான்.

ஒருநாள், இராணியின் தோழி ஒருத்தி, கரத்தில் பாலுடன்வந்து இராணியையெழுப்பினள். இராணியெழுந்திருக்கவில்லை. தோழியோ பன்முறை அவளைத் தட்டி எழுப்பினள். பேச்சொன்றும் இல்லை. அதனைத் தோழி பயத்துடன் கண்டு, 'ஓ' என்று அழுதுகொண்டு

அரண்மனையில் உள்ளவர்களுக்கு இராணி இறந்தனள் எனக் கூறினள். அரண்மனைக்கண் இருந்த பெண்கள் பலரும் அவ்விடம் வந்து கூடினர். உடனே வைத்திய னுக்கு ஆள் ஓடினன். தேஜஸ்சிங்கோ, அச்சமயம் ஊரில் இல்லை. அவன் வேட்டையாடுதற் பொருட்டுக் கானகம் சென்றிருந்தான். ஆகவே, அவனுக்கு அவ் விஷயத்தினை அறிவிக்க ஓர் ஆள் சென்றனன்.

தேஜஸ்சிங்கைத் தேடிச் சென்ற ஆள் காடு முழு வதையுஞ் சுற்றினன். தேஜஸ்சிங், கானகத்தில் ஒரு கரடியைக் குத்திக் கிழித்து இளைப்படைந்து, ஒரு மரத்தடியில் நித்திரை கொண்டிருந்தான். அப்போது அவன், பசு ஒன்றை ஒரு புலி கொல்வதாகக் கனவு கண்டனன். கண்டு, திடீரென ஆ! என்று அலறி எழுந்தான். அந்த இரைச்சலைக் கேட்டு அவனைச் சூழ்ந்திருந்தவர் எல்லோரும் பயங்கொண்டனர். அவ னுடைய தோழனாகிய மகமத்கான், அவனைத் தேற்றி, சங்கதி என்ன என்று கேட்டான். தேஜஸ்சிங் அதிக வருத்தத்துடன், 'மகமத்கான், இனி நாம் இவ்விடத் தில் இருப்பது கூடாது. வா, போவோம்' என்று நடுக்கத்துடன் கூறினன். அப்போது அவனைத் தேடிக் கொண்டு வந்த ஆள், அவனையணுகி அரண்மனைக்கண் நடந்துள்ள விஷயத்தைக் கூறினன். தேஜஸ்சிங் அதைக் கேட்டதும் அலறி, "அம்மா!" என்ற சப் தத்துடன் அக்கானகத்தினின்றும் ஓட்டமாக ஓடி அரண்மனை வந்துசேர்ந்தான்.

அப்போது, அரண்மனை வைத்தியன் ராம்பாயை ஒருவாறு தேற்றி, அவளுக்குத் திரியின் புகை கொடுத்-

துக்கொண்டிருந்தான். தேஜஸ்சிங், அவ்விடம் 'அம்மா' என்று அழுதுகொண்டே வந்தான். வைத்தியன் அவனைத் தேற்றி 'இராணியார் உயிருக்கு ஒன்றும் அபாயம் இல்லை. அவர் அநேக நாளாகப் போஜனம் கொள்ளாதிருந்ததால், களைப்பினால் மூர்ச்சையடைந்தனர். இன்னும் சில நிமிஷத்தில் அவர் சுகமடைவார்; பாருங்கள்' என்று கூறினன். தேஜஸ்சிங் அவ்வார்த்தையைக் கேட்டதும், ஒருவாறு தேறித் தன்னுடைய தாயின் பக்கமாக உட்கார்ந்திருந்தான். ராம்பாய் வைத்தியனின் சிகிச்சையால், சிறிது பிரக்ஞையடைந்தாள். உடனே, வைத்தியன் அவளுக்குப் பாலை உணவாகக் கொடுத்து, ஆங்குள்ளோர்க்கு 'இராணியுடன் பேசவேண்டாம், அப்படியே அவர்கள் நித்திரை போகட்டும்' எனக் கட்டளையிட்டுச் சென்றான்.

இராணி, மறுநாள் காலையில் சுகமாய் விழித்தனள். தேஜஸ்சிங் ராணியிடம் வந்து, 'அம்மா நீங்கள் சில நாளாக உணவுகொள்வதில்லை என்று கேள்விப்பட்டேன். அதற்குக் காரணம் என்ன? நீங்கள் உண்மையைச் சொன்னாலாயிற்று; இல்லையேல், இதோ என் உயிரை இந்த வாளிற்கு இரையாக்கிக் கொள்வேன்' என்றான்.

ராம்பாய்:—(அதைக் கேட்டதும்), அப்பா தேஜஸ்சிங், நீ ஏன் என் துயரின் காரணத்தை அறியவேண்டும் என்கிறாய்? நான் சொல்வதைக் கேள். வேண்டாம், நீ அதனை அறியவேண்டும் என்ற ஆசையினை விட்டுவிடு (என்றனள்.)

**தேஜஸ்சிங்:**—அம்மா! விட்டுவிடுவதாவது! நீங்கள் துயருடன் இருக்க, நான் பார்த்துக்கொண்டிருப்பதா? அவையெல்லாம் இருக்கட்டும்; நீங்கள் தயைசெய்து சொல்லுங்கள்.

**ராம்பாய்:**—அப்பா! நீ என் துயரை அறிந்து அதனை நீக்க, என்னைவிட்டுப் பிரிவாய் என்பது எனக்குத் தெரியும். ஆதலால், அதை நான் உன்னிடம் சொல்லமாட்டேன்.

**தேஜஸ்சிங்:**—ஓ! தந்தையாரைப்பற்றிய வருத்தமோ! அம்மா! பாவியாய நான் இதை மறந்தேனே! தந்தையாரை இத்துணைநாள், என் வேடிக்கைப் பராக்கால் மறந்தேன் அன்றோ? சீ, நானும் ஒரு வீரனா? இத்துணை நாளாகியும் அவரைப்பற்றி நான் ஒன்றும் அறியாமல் இருந்துவிட்டேனே? அம்மா, யான் இன்றே, இக்கணமே புறப்பட்டு, என் தந்தையை உம்மிடங் கொண்டுவந்து சேர்க்கிறேன். யான் என் தந்தையை இவ்விடம் கொண்டுவரேனாயின், யான் ஒரு வீரனல்லன். ஒரு வீணன் என என்னை எண்ணுங்கள்.

**ராம்பாய்:**—தேஜஸ்சிங், என்ன வார்த்தைசொல்லினை? நீயோ அறியாப் பாலன். நீ அவரைத் தேடிக் கொண்டு போகிறேன் என்கிறாயே! அவர் சமாசாரமே நமக்குத் தெரியவில்லை. அங்ஙனமாக, நீ அவரை எங்கென்று தேடிச் செல்வாய்?

**தேஜஸ்சிங்:**—அம்மா! அதைப்பற்றி நீங்கள் வருந்த வேண்டாம். அவரைத் தேடிக்கொண்டு வருவது

என்னுடைய வேலை. சீக்கிரம் எனக்கு விடை கொடும் அம்மணி!

**ராம்பாய் :**—கண்ணே! உன் தந்தையைப் பிரிந்தும், உன்னால் நான் ஒருவாறு தேறுதல் அடைந்திருக்கிறேனே! நீயுமா என்னைவிட்டுப் பிரிய மனந் துணிகிறாய்!

**தேஜஸ்சிங் :**—நான் உம்மைவிட்டுப் பிரியவில்லை அம்மணி! சில நாட்களுக்குள், என் தந்தையுடன் வந்து சேர உம்மை விடை கேட்டேனே தவிர வேறில்லை. நீங்கள் ஒரு துயரமுங் கொள்ள வேண்டாம்.

**ராம்பாய் :**—அப்பா வேண்டாம், நீ என்னைவிட்டுப் போகாதே.

**தேஜஸ்சிங் :**—அம்மா! சுத்த க்ஷத்ரிய குலத்தில் உதித்த யானோ, என் தந்தையை இருக்கும் இடம் தெரியாமல் விட்டு, தங்களுக்கு அதனால் நீங்காத் துயரை விளைவிப்பேன்? அம்மா! சத்தியமாக யான் போகத் தீர்மானித்துவிட்டேன்; தயை செய்து தடையொன்றுஞ் சொல்லாது விடையளியுங்கள்.

**ராம்பாய் :**—தேஜஸ்சிங்! யான் என்ன சொல்லியும், நீ ஒரே பிடிவாதமாக இருக்கிறாய். யான் என்ன செய்வது! உன் இஷ்டம்போல் புறப்பட்டு ஜயம் பெற்றுவா. கடவுள்தான் உன் பங்கில் துணையாயிருக்கவேண்டும்.

**தேஜஸ்சிங் :**—அப்படிச் சொல்லுங்கள், 'அம்மணி!' 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' அன்றோ? நான் சென்று, விரைவில் வெற்றியுடன் திரும்பி விடுவேன். அதுவரையில், நீங்கள் பொறுத்துக் கொண்டிருங்கள்.

என்று கூறி, அன்றே தன் துணைவன் மகமத் கானுடன் டில்லிக்குப் பிரயாணமாயினன். செஞ்சிக் கோட்டைக்கு மூன்று மைல் தூரத்தில், ஸ்ரீரங்கவனம் என்னும் ஊர் ஒன்று உளது. அந்த ஊரில், ரங்கநாத சுவாமி பள்ளிகொண்டுள்ள திருக்கோயில் ஒன்றும் உண்டு. தேஜஸ்சிங், அந்தக் கடவுளினிடத்தில், அதிக பக்தியுடையவன். அவன் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினும், அக்கடவுளின் சந்நிதானத்திற் சென்று, அவரை வணங்கிய பிறகே, அதனைத் தொடங்குவான். அஃதேபோல், அன்றும் அவன் போகும் வழியில் உள்ள அக்கோயிலில் வந்து, ரங்கநாதரைத் தரிசித்து, அந்தக் கோயில் அர்ச்சகர் தந்த துளசி முதலிய பிரசாதங்களைப் பெற்றனன். அங்ஙனம் பெற்றது, அவன் செல்லும் காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்னும் குறியை அவனுக்கு உணர்த்துவதாய் இருந்தது. தேஜஸ்சிங், நற்குறி தோன்றிய மகிழ்வால், துணைவனுடன் குதிரையேறிப் புறப்பட்டனன்.

அக்காலத்தில், ஓர் ஊரைவிட்டு ஓர் ஊருக்குச் செல்வதாயின் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள சௌகர்யங்களில் ஒன்றும் இல்லாது, மிகவும் கஷ்டம் அடைந்தே செல்லல் வேண்டும். வழியொன்றும் அக்காலத்தில்

திருத்தப்பட்டிருக்கவில்லை. எங்குக் காணினும் காடும் முட்புதர்களுமே செறிந்திருந்தன. அதனால், பிரயாணம் செய்வோர், தமது பிரயாணத்தில் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவித்திருந்தனர். நமது தேஜஸ்சிங்கும், மகமத்கானுடன் அத்தகைய கஷ்டங்களை யடைந்து காடு மலைகளை யெல்லாம் சிரமத்துடன் தாண்டி, டில்லி வந்துசேர்ந்தான்.

தேஜஸ்சிங், டில்லியை அடைந்ததும், தன்னுடைய தந்தையைப்பற்றி முதலில் விசாரணை செய்தான். அவர் அவ்விடத்திலேயே குதிரையை அடக்கிச் செல்லவேண்டும் என்ற கொள்கையை உடையவராய் உள்ளார் என்பதைக் கேட்டு, ஆநந்தம் அடைந்து, அவ்வேலையைத் தானே செய்துமுடிக்க மனந் துணிந்தான். அவனுக்குத் தன் தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பெரிதும் இருந்தது. எனினும், தன் தந்தையிடஞ் சென்றால், தன் கருத்தை அவர் தடுத்துவிடுவர் என அவன் எண்ணினான். அதனால், அவன் நேராக ஷா - ஆலத்தினிடஞ் சென்று, 'அக்குதிரையை அடக்கித் தருகிறேன். என்னிடத்தில் அக்குதிரையை ஒப்புவியுங்கள்' என்று வணக்கத்துடன் கேட்டான். ஷா-ஆலத்திற்கு தேஜஸ்சிங்கைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவன், தேஜஸ்சிங்கின் திடவார்த்தையைக்கேட்டு மகிழ்வுற்றவனாய், 'அப்பா! அந்தக் குதிரை சாமான்யமானதல்ல. நீயோ சிறுவன். அது எத்தனையோ அரசர்களை மானபங்கஞ் செய்துவிட்டது. ஆதலால், நீ அந்தக் காரியத்திற் பிரவேசிக்க எண்ணாதே' என்று கூறினன்.

**தேஜஸ்சிங் :**—ஷா-இன்ஷா ! மற்றைய அரசர்களைப் பார்த்தீர் அன்றோ? என்னுடைய திறமையை யுஞ் சற்றுப் பாரும்.

**ஷா-இன்ஷா :**—அக்குதிரை மிகவுங் கொடியது. அது உன் உயிரையே பலியாகக் கொள்ளும். வேண்டாம். நீயோ அறியாத பாலன் ! நான் உன்னுடைய தைரியத்திற்காக வேண்டிய பரிசுகளைத் தருகிறேன் ; அதைப் பெற்றுச் செல்.

**தேஜஸ்சிங் :**—யான் தங்களிடம் குதிரையை அடக்கிப் பரிசுபெற வந்தேனே யல்லாது, பிச்சை கொள்ள வந்தவன் அல்லன். தங்களுக்கு, யாவரே யாயினும் குதிரையை அடக்கித்தரும் சக்தி புடையவரன்றோ வேண்டியது ? யான் அதனை அடக்கி விடுகின்றேன். இல்லையேல், யான் உங்களுக்கு அடிமையாய் விடுகிறேன்.

**ஷா-இன்ஷா :**—அப்பா! நீ அறியாக் குணத்தால் இங்ஙனஞ் சொல்கிறாய். நான் என்ன செய்வது ? உன் இஷ்டத்தின்படியே நாளை காலை இங்கு வந்துவிடு.

என்று கூற, தேஜஸ்சிங், நவாபுக்கு வந்தனங்கூறி தோழனுடன் அரண்மனைவிட்டு வெளியே வந்தனன்.

---

ஏழாம் அத்தியாயம்

## குதிரையேற்றமும் விவாகமும்

மறுநாள் காலை தேஜஸ்சிங்கின் திறத்தைக்காண டில்லிமாநகரில், பெருந்திரளான ஜனக்கூட்டம் நெருங்கியது. மேலும், பல ஊர்களினின்றும் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களுள் பலர், "இந்தக் குதிரையையாவது, ஒருவன் அடக்குவதாவது" என்று பேசத் தலைப்பட்டனர். சிலர், "எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? வந்தவன் எத்தகைய வீரனோ? அவன் நவாப் சொல்லியதையும் தடுத்து, ஒரே பிடிவாதமாக அக்குதிரையை அடக்குவதாகக் கூறினனே" என்று பேசிக்கொண்டனர். நவாப் தன்னுடைய ஊரிலேயே இத்தனை நாளாகக் குதிரையேற்றக் காட்சி வைத்திருந்தனன். அவன் முன் சிரோப்சிங் அதனை அடக்க வந்தபோது, அது ஊரை எல்லாம் ஹதம் செய்ததறிந்து, அங்ஙனம் ஆகாதபடி இம்முறை ஊருக்குப் புறம்பாக இருபது மைல் சுற்றளவுள்ள ஓர் இடைவெளியை அக்குதிரையை அடக்கும் இடமாக ஏற்படுத்தினன்; அவ்விடத்தில், இடையே பதினெட்டு மைல் சதுரத்திற்குக் கயிறுகட்டி, அக்கயிற்றின் உட்புறமாய் ஜனங்கள் நெருங்காதபடிக் காவல் அமைத்தான். வந்த ஜனங்களெல்லோரும், அக்கயிற்றை எல்லையாகக்கொண்டு, அவ்விடத்தைச் சூழ்ந்து நெருங்கி, போதுமான இடம் இல்லாததால், ஒருவரோடொருவர் நெருங்கி இடிபட்டு

இருந்தனர். அவர்களுள் சிலர், முன் வரிசையில் போகப் பிரயத்தனஞ்செய்து, ஜனங்களுக்கு வருத்தத்தையும் உண்டுபண்ணினர். அதனால், அக்கூட்டத்தில் ஆங்காங்குக் குட்டிக்கலகங்களும் உண்டாயின. உண்டாகவே, இயற்கையில் கூட்டம் பெருகும்போது உண்டாகும் இரைச்சலுடன், கலக இரைச்சலும் சேர்ந்து பேரிரைச்சலாயது.

அச்சமயத்தில், அந்த அடங்காக் குதிரையை, ஏறக்குறைய இருநூறு வீரர்கள் தங்களாலானவரையிலும் அடக்கிக்கொண்டு வந்து, அந்த இடைவெளியில் நிறுத்தினர். அஃது அப்போதும் அவர்களுக்கு அடங்காமல், துள்ளித் தன் முன்னங்கால்களை மேலாகத் தூக்கிக் குதித்துக்கொண்டே யிருந்தது. அப்போது, தேஜஸ்சிங் மஞ்சள் பட்டினால்செய்த சல்லடந்தரித்து, மார்பை மறைக்க அம்மஞ்சள் பட்டினாலேயே செய்த ஒரு சட்டையையும் அணிந்து, அவ்விடம் வந்து நின்றான். அவன் வந்தபோது அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் அவனை அதிசயத்துடன் பார்த்தனர். ஆயிரக் கணக்காய் ஆங்கிருந்தாருடைய பார்வை யெல்லாம் தேஜஸ்சிங்கின் உருவத்திலேயே பதிந்துவிட்டது. அதனால், முன் இருந்த பேரிரைச்சல் பரிதியைக் கண்ட பனியென ஒழிந்தது. எல்லோரும் "இந்தச் சிறுவனோ அக்குதிரையினை அடக்குபவன்? பாவம் மிகவுஞ் சிறியனாக உள்ளானே இவன்! எப்படியும் அந்தக் குதிரை இவனைக் கொன்றுவிடும்" என்று எண்ணித் தத்தம் மனது கலங்கினர்.

அந்தக் கூட்டத்தில், சிரோப்சிங் மகிபனும் வந்திருந்தான். அவனுக்குத் தன்னுடைய பிள்ளை தான், அக்குதிரையை அடக்கவந்திருக்கிறு னென்பது தெரியாது. யாரோ ஒருவன், தான் கருதிய எண்ணத்தை முடிக்க, எதிராளியாக வந்தானே என்று அவன் கவலை யடைந்திருந்தான். அவன் தேஜஸ்சிங் வந்ததும், அவனைப் பார்த்து, தன்னுடைய பிள்ளையே இப் பெரு முயற்சியில் தலையிட்டுக்கொண்டான் என அறிந்து, மிகவும் பயந்தவனுய், அவனிடம் ஓடிவந்து "அப்பா தேஜஸ்சிங், இப்படியும் உன்னுலாகக்கூடாத இப்பெருந்தொழிலில் பிரவேசிக்கலாமா? வேண்டாம், இந்த எண்ணத்தை விட்டுவிடு" என்ருன். தேஜஸ்சிங், தன் தந்தையை வணங்கி, அவனுக்கு வேண்டிய தேறுதல்களைக் கூறித் தான் எப்படியும் தன் முயற்சியில் வெற்றி கொள்வதாகக் கூறினன். அப்போது நவாபும் அவ்விடம் வந்தான். அவனுக்கு அப்போது தான், தேஜஸ்சிங் இன்னவன் என்று தெரியவந்தது.

தேஜஸ்சிங், தன்னுடைய தந்தையையும் நவாபையும் வணங்கி, அக்குதிரையிடஞ் சென்ருன். வந்த ஜனங்களெல்லோரும் செத்த ஆட்டின் விழிபோல் விழித்து அவனையே ஆவலுடன் பார்த்திருந்தனர். தேஜஸ்சிங், தான் ஏறும்வரையிலும் அந்தக் குதிரையை அப்படியே பிடித்திருக்குமாறு, அதனைப் பற்றியிருந்த வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவனுக்கு முன் வந்தவர்கள் அங்ஙனங் கூருமல், தாமே தமது வலியால் அந்தக் குதிரையின்மேல் ஏற முயற்சிசெய்




தேசிங்கு, நீலவேணிக் குதிரையை அடக்கல்

தனர். அதனால் அவர்கள் எல்லோரும், அதன் மேல் ஏறவும் ஆற்றல் இல்லாது போயினர். குதிரை வீரர், அக்குதிரையை தேஜஸ்சிங் கூறியபடியே பிடித்திருந் தனர். தேஜஸ்சிங், அக்குதிரையின்மீது ஏறி, அதன் கடிவாளக் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, வீரரை விட்டுவிடும்படியாகக் கூறினன். வீரர் எல் லோரும் அதனைவிட்டு, ஓட்டமாக ஓடி, தங்களுக்கு ஆபத்துண்டாகாதபடி ஜனங்களுடன் போய்ச்சேர்ந்து கொண்டனர். குதிரை, அடங்காத ஆத்திரத்துடன் பாய்ந்தோடியது. தேஜஸ்சிங் தன்னால் ஆனவரையி லும், அக் கடிவாளக் கயிற்றைப் பற்றிப் பற்றி வலித் தனன். குதிரை அதனைப் பொருட்படுத்தவில்லை. அவன் கயிற்றை வலிக்க வலிக்க அதனுடைய ஓட்டம் அதிகமாயது. தேஜஸ்சிங், கடைசியாக அதனுடைய வலிவை அடக்கக் கயிற்றை மிகவும் இழுத்து, அதன் கழுத்தின்மேல் முகங்கவிழப் படுத்துக்கொண்டனன். குதிரை, தன்மேல் உள்ளவனைக் கீழாக்க எவ்வளவோ முயற்சிசெய்தது. அவற்றிற் கெல்லாம் தேஜஸ்சிங் சலியாமல், தான் பிடித்த பிடியை விடாமல் இருந்த னன். குதிரை ஓடோடியும் பார்த்தது. பகல் பன் னிரண்டு மணி ஆயது. வெயிலின் கொடுமையால், குதிரைக்குக் களைப்புண்டாய் விட்டது. அக்களைப் புடன், தேஜஸ்சிங் பிடித்திழுக்கும் கயிற்றின் வலி அதிகமாக, அது தன் வலிமை குறைந்து, ஓட்டத்தை நிறுத்திக்கொண்டது. அதை அறிந்த தேஜஸ்சிங், அதனைத் தன் இஷ்டம்போல் திருப்பி, நவாப் எதி ராகக் கொண்டுவந்து நிறுத்தினன்.

நவாப் அவனை ஆவலுடன் தன் கைகளால் கீழ் இறக்கி அவனைத் தட்டிக்கொடுத்தான். சூழ்ந்திருந்த ஜனங்களெல்லோரும் சமுத்திர கோஷமும் தோற்கும் விதமாக ஜயகோஷம் செய்தனர். சிரோப்சிங், தன் மகனைப் பேராவலுடன் அணைத்து அவனைத் தழுவிக் கொண்டான். நவாப், தேஜஸ்சிங்கிற்கு அவ்விடத்திலேயே வேண்டிய சிறப்புகளை எல்லாம்செய்து, அவனை 'ராஜா தேசிங்கு' என்று அழைத்தனன். அந்த நவாபினிடத்தில், சேனாதிபதியாக இருந்த பீம்சிங் என்னும் ராஜபுத்ர வீரன், நவாப் முன்னிலையில் தன்னுடைய பெண் ராணிபாய் என்பவளைத் தேஜஸ்சிங்கிற்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறினன். நவாப் அதைக் கேட்டதும் அதிக ஆவல் உடையவனாய், தேஜஸ்சிங்கிற்கு விவாகத்தைத் தனதூரிலேயே செய்விக்க எண்ணங்கொண்டு, சிரோப்சிங்கை அதைப்பற்றிக் கேட்டனன். சிரோப்சிங் நவாபினுடைய அபிப்பிராயத்திற்கு இணங்கினன்.

பிறகு, நவாப் எல்லோரையும் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். வந்த ஜனங்கள் எல்லோரும், தேஜஸ்சிங்கின் வீரத்தைப் புகழ்ந்துகொண்டே, பல சிறு பிரிவாகப் பிரிந்து, தத்தம் வீட்டை நோக்கிச் சென்றனர். நவாப், தனது அரண்மனை சேர்ந்ததும், விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் தானே நேரிற் செய்தனன். ராம்பாய்க்கு, சிரோப்சிங் விவாகத்தைப்பற்றித் தானே கடிதம் எழுதினன். அதனால் செஞ்சிக்கோட்டையில் உள்ளவர் எல்லோரும், டில்லியில் வந்துசேர்ந்தனர். ராம்பாய் தன்

னுடைய மகனது வீரப்பிரதாபத்தைக்கேட்டு ஆநந்தம் அடைந்தாள்.

விவாகத்திற்கெனக் குறிப்பிட்ட நாளும் வந்தது. அந்த நாளில், தேஜஸ்சிங் தன் குலாசாரப்படி, திரை மறைவில் இருக்கும் ராணிபாய் என்பவளுக்கு மண மாலை சூட்டினன். வந்த அரசர் எல்லோரும் அவனுக் குப் பற்பல மரியாதை செய்தனர். நவாபும், தேஜஸ் சிங்கிற்கு அந்த அடங்காக் குதிரையையும் வைர மிழைத்த வாளையும் கொடுத்தனன். சிரோப்சிங், விவா கம் நடந்தேறியதும், தன் மருமகளையும் மற்றவரையும் அழைத்துக்கொண்டு, நவாபின் விடைபெற்று, தனது செஞ்சிக்கோட்டைக்குத் திரும்பினன்.

600 008

எட்டாம் அத்தியாயம்

## தேவநாதன் பட்டணத்தில் குழப்பம்

சிரோப்சிங், தன் ஊரில் வந்து சேர்ந்ததும், தேஜஸ்சிங்கின் விவாகத்தை முன்னிட்டுத் தன் ஊரில் உற்சவங் கொண்டாடினன். பல ஊர்களிலுமிருந்து வந்த வேதியரும், ஏழைகளும், அரசனிடத்தில் வெகுவான தானங்களைப் பெற்றுச் சென்றனர். அவ்வூர்க் குடிகள் தங்கள் தங்கள் வீட்டில் மஹோற்சவங் கொண்டாடிக் குதூஹலம் அடைந்தனர். அந்த ஊர் ஆறுமாதம் வரையில் அதே உற்சவக் கோலமாய், எங்குக்காணினும் வாத்திய கோஷமும், ஆடல்பாடலும், வேடிக்கைகளும் விளங்க இருந்தது.

ராணிபாய், சிலநாட்கள் சென்றதும் நன்மைதீமை இஃதெனப் பகுத்தறியும் மங்கைப்பருவம் உற்றனள். அவளை, மூன்று வருடம் வரையில் தேஜஸ்சிங் பார்ப்பது கூடாதென சோதிடர் அவளுடைய ஜாதகத்தைப் பார்த்துக் கூறினர். அதனுல், சிரோப்சிங் தனது மகனை ராணிபாயிடம் பேசலாகாதென்று கூற, அவனும் தன்னுடைய தந்தையின் வார்த்தைக் கிணங்கி, ராஜ்ய காரியங்களில் தனது சிந்தையைச் செலுத்தி வந்தான். சிரோப்சிங், தன்னுடைய மருமகளுக்கெனத் தனியாக ஓர் அரண்மனை ஏற்படுத்தி அதில் அவளை இருக்கச்செய்து, அவளுக்குத் துணையாகப் பல தோழிகளையும் விட்டனன். அவளுக்குத் தனியாய் இருப்பதால் ஒரு துயரும் உண்டாகாதபடி, பெண்களைக்

கொண்டு வேடிக்கை விநோதங்களை அவ்விடத்தி லேயே செய்வித்து வந்தனன்.

அக்காலத்தில் ஆங்கிலேயர் செயின்ட் டேவிட் கோட்டையைத் தங்களுடைய பண்டக சாலையாக வைத்துக்கொண்டு, அக்கோட்டை இருக்கும் இடமாய தேவநாதன் பட்டணத்தைத் தாங்களே மேற்பார்வை பார்த்து வந்தனர். அவர்கள், அந்தக் காலத்தில் கிழக்கு இந்தியா கம்பெனியார் என்னும் பெயரை யுடையவராய், வர்த்தகத்தையே, தங்கள் முக்கிய வேலையாகக் கருதி இருந்தனர். அவர்களுக்கு அப் போது இராஜ்ய உரிமை கொள்ளவேண்டும் என்ற கருத்தே இல்லை; என்றாலும், அவர்கள் தங்கள் பாது காப்பின் பொருட்டுச் சில போர்வீரர்களை மாத்திரம் உடன் வைத்திருந்தனர். அவர்களுக்குச் சென்னையி லுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை, தென்னிந்தியா வில் மிகவும் வலிவுள்ள கோட்டையாய் இருந்தது. அதிற்றான் அந்தக் கம்பெனியார் நியமித்த கவர்னர் கள் வாசஞ் செய்து வந்தனர். அந்தக் கவர்னர்களு க்கு அடங்கிய டிப்டி கவர்னர்கள், செயின்ட் டேவிட் கோட்டையில் இருந்து, சென்னைக் கவர்னர்கள் கூறிய படி, தேவநாதன் பட்டணத்தையும் வியாபாரத்தை யுஞ் சீர்செய்து வந்தனர்.

தேவநாதன் பட்டணம், சிரோப்சிங்கின் ஆளு கைக் குட்பட்டது என்று முன்னரே யாம் கூறியுள் ளோம். ஆகவே, கிழக்கு இந்தியா கம்பெனியாரும், அவ்வூர்க்குடிகளும், அவனுக்குப் பகுதிப் பணம் கட்டி வந்தனர். அக்காலத்தில், செயின்டேவிட் கோட்

டைக்கு டிப்டி கவர்னராக ராபர்ட்ஸ் என்னும் துரை வந்தார். அவர் அவ்வூர்க் குடிகளிடத்தில் அதிக விசுவாசம் உடையவர். அவருடைய ஆளுகையில், அஃதாவது கி. பி. 1710-ம் வருடத்தில், தேவநாதன் பட்டணத்துக் குடிகள், செஞ்சி மன்னனுக்குப் பகுதிப்பணம் கட்டாமற் போயினர். அதனால், சிரோப்சிங் தன் சிப்பந்திகளை விட்டு அக்குடிகளிடம் பணத்தை வசூல் செய்துகொண்டுவரக் கட்டளை யிட்டான். சிப்பந்திகள், தேவநாதன் பட்டணத்துக் குடிகளைப் பணத்தைக் கொடுக்க வற்புறுத்தினர். குடிகளிடத்திலப்போது பணமில்லை. அதனாலவர்கள் எல்லோரும், ராபர்ட்ஸ் துரையிடத்திற் சென்று தங்கள் குறையை முறையிட்டனர். அவர், அவர்களது குறையை நீக்க எண்ணி, 'குடிகளிடம் இப்போது பணம் இல்லை. அவர்கள் இன்னும் சில நாளில் பணத்தைக் கொடுத்து விடுவதாகச் சொல்லுகின்றனர். அங்ஙனம் அவர்கள் கொடாமற் போனால், யானே அப்பணத்திற்கு ஜாமீனாக இருக்கிறேன். அவர்களை நீங்கள் வருத்த வேண்டாம்' என்று வந்த சிப்பந்திகளுக்குக் கூறி அவர்களை அனுப்பி விட்டார். சிப்பந்திகள் தங்கள் மன்னனிடத்தில் வந்து, ராபர்ட்ஸ் துரை பணத்திற்கு ஜாமீன் இருப்பதாகக் கூறினர் என்று சொல்லவே, மன்னனும் அதை ஒப்புக்கொண்டனன்.

நாட்கள் பல கழிந்தன. சிரோப்சிங்கிற்குப் பணம் வந்தபாடில்லை. அதனால் அவன் சில ஆட்களை ராபர்ட்ஸ் துரையிடம் அனுப்பினான். ராபர்ட்ஸ் துரை ஆட்கள் வந்த காரணத்தை அறிந்து, அவ்வூர்க் குடிகளைப்

பணம் கேட்டபோது, அவர்கள் எல்லோரும் தக்க சமாதானம் கூறுது வேறு ஊர்களிற் போய்ச் சேர்ந்தனர். அதனால், அப்பணத்தை ராபர்ட்ஸ் துரையவர்கள் கட்டவேண்டியதாயிற்று. அவரிடத்திலோ அவ்வளவு பொருள் இல்லை. கம்பெனிப் பணத்தைக் கொடுப்பதென்றாலும், சென்னைக் கவர்னருடைய அனுமதி வேண்டும். இது விஷயமாகச் சென்னைக் கவர்னரைக் கேட்டால், அவர் பணங்கொடுக்கச் சம்மதியார் என்பதையும் அவர் அறிவார். ஆதலால், அவர் மன்னரின் ஆட்களுக்குத் தக்க சமாதானங் கூறுராயினர். வந்த ஆட்கள், அதுகண்டு சிரோப்சிங்கிற்குத் துரையின் நிலைமையைக் கூறினர்.

சிரோப்சிங், அப்பணத்தைத் துரையவர்களிடம் வசூல் செய்ய, மகமத்கானை அனுப்பினன். மகமத்கான், ராபர்ட்ஸ் துரை யவர்களிடம் வந்து, "பணத்தைத் தாங்கள் கொடுத்துவிட்டால் நல்லது. இல்லாவிடின், அதற்காக எங்கள் மன்னர் கோபங்கொண்டு தங்களைப் பெரிதும் வருத்துவர்" என்றான். ராபர்ட்ஸ் துரை அதைக் கேட்டதும் கோபமூண்டு, "பணத்தை யான் கொடுக்கச் சம்மதியேன். உங்களால் ஆனதைச் செய்துகொள்ளுங்கள்" என்று கூறினர். அதனால் மகமத்கான் சில வீரருடன் செயின்ட் டேவிட் கோட்டைக்குட் புகுந்து, அங்குள்ள ஆங்கிலேயர் சிலரை வருத்தி, இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தரைச் செஞ்சிக்குச் சிறையாகக் கொண்டுவந்தனன்.

சிரோப்சிங், மகமத்கான் கொண்டுவந்த இரண்டு ஆங்கிலேயரையும் சிறைச் சாலையில் அடைத்து, அப்

பணத்தைக் கொடாதுபோனால், அவ்விருவரையும் கொல்வதாக, ராபர்ட்ஸ் துரைக்குக் கடிதம் விடுத்தனன். துரையவர்கள், அக்கடிதத்திற்கு ஒரு பதிலும் எழுதவில்லை. அதனால், அவன் தன் கையிற் சிக்கிய அவ்விருவரையும் மிகவும் ஹிம்சை செய்தான். அவ் விஷயம், ராபர்ட்ஸ் துரை அவர்களுக்குத் தெரிந்தது. உடனே அவர் தேவநாதன் பட்டணத்துக் குடிகளைக் கூட்டிக்கொண்டு, பெருங் குழப்பத்தை உண்டுபண்ண நினைத்தார்.

துரையின் எண்ணத்தை யறிந்த சிரோப்சிங், மகமத்கானைச் சேனாதிபதி யாக்கி, அவன் வசம் நானூறு குதிரைப்படையையும், ஆயிரம் காலாட்படையையும் ஒப்புவித்து, செயின்ட் டேவிட் கோட்டையை முற்றுகையிடுமாறு அவனுக்கு உத்தரவளித்தான். மகமத்கான், அங்ஙனமே தேவநாதன் பட்டணத்தின்கண் வந்து, ஆங்குள்ள கோட்டையைப் பலமாக முற்றுகை யிட்டனன்.

ராபர்ட்ஸ் துரை அவர்கள் தமக்கு நேர்ந்துள்ள பெரும் விபத்தைச் சென்னைக் கவர்னருக்குத் தெரிவித்தனர். அது விஷயமாக, சென்னைக் கவர்னர் தம்முடைய ஆலோசனைச் சபையாருடன் யோசித்து, அதன் பயனாய், அச்சபையில் ஒருவரான ராவோர்த் என்னும் துரையவர்களை, செயின்ட் டேவிட் கோட்டைக்கு அனுப்பினர். ராவொர்த் துரை, போர்வீரரும் உணவுப்பொருள்களும் நிறைந்தஜந்துகப்பல்களுடன், டேவிட் கோட்டைக்குப் பிரயாணமாயினர். அவர் வருவதற்குள், செஞ்சி வீரர் அக்கோட்டையில் பெரிய

அட்டகாசஞ் செய்தனர். ராபர்ட்ஸ் துரை அக் கோட்டை பகைவரின் வசமாகாவண்ணம், எவ் வளவோ தடுத்தார். ராவொர்த் துரையவர்களும் வீர ருடன் வந்துசேர்ந்தார். அவர், கி. பி. 1711-ம் வரு டம் ஆகஸ்ட் மாதம் பதினோராந் தேதி, ரோக் என் னும் சேனாதிபதியை, செஞ்சி வீரருடன் எதிர்க்கும் வண்ணம் அனுப்பினர். அந்த ரோக் துரைக்குத் துணையாய் கனன்டாய் என்னும் போர்வீரரும் உடன் சென்றனர். அவ்விருவரும், தங்களுடைய வீரருடன் சென்று, செஞ்சி வீரரின் முற்றுகையைத் தவிர்க் கப் பெரிதும் முயற்சி செய்தனர். அதனால், இரு திறத்தாருக்கும் பெரும்போர் மூண்டது. ராஜபுத்ரர், வன்மையுடன் எதிர்த்து நின்றனர். அவர்கள் ஆங் கில வீரருடன் இளைக்காது போரிட்டதனால், ஆங்கில வீரருள் பெரும்பான்மையோர் இறந்தும் காயம் அடைந்தும் போயினர். செஞ்சி வீரர்களுள், பெரும் பான்மையோருஞ் சேதமாயினர். அதனால், அந்தப் போர் ஒரு விதமாக இருதிறத்தாருக்கும் வெற்றி யின்றி ஒழிந்தது. அச்சண்டையில், ரோக் துரைக் குத் துணையாகச் சென்ற கனன்டாய் என்பவர் இறந்து போயினர்.

சிரோப்சிங், அவ்வளவோடும் விடாமல், தன் பணம் வந்து சேராததை எண்ணி, ஆங்கிலேயர்மேல் அடிக்கடி வன்சினத்தைக் காட்டிவந்தனன். சென்னைக் கவர்னருக்கு, ராபர்ட்ஸ் துரை செய்தனவெல்லாம் தீமை எனத் தெரியவந்தது. அதனால், ராபர்ட்ஸ் துரை இருந்த இடத்தில், பாமர் என்னும் துரையை

அவர் ஏற்படுத்தினர். அப்போது, அந்தப் பாமரிடம் மறுபடியும் மகமத்கான் வந்து, தங்கள் அரசனுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கேட்டனன். பாமர் துரை, "கம்பெனியார் கொடுக்கவேண்டிய தொகை யானல், யான் அதனைக் கொடுக்கக் கடமைப்பட்ட வனே. எனக்குமுன் இருந்தவர், அறியாமையினல் தமது ஜனங்கள்மேல் இரக்கம் பாராட்டி அவர்கள் கொடுக்கவேண்டிய பணத்திற்கு ஜாமீனுக நின்ருர். ஆதலால், அப்பணத்தை அவரே கொடுக்கக் கடமைப் பட்டவர்" என்று கூற, மகமத்கான் கோபங்கொண்டு, பலவாருகப் பாமர் துரையை இழித்துரைத்தனன். அவர் அவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, பெரிதுங் கோபமுண்டு, 'நீங்கள் மேலும் ஏதாவது வீண் கலகம் செய்வதாக இருந்தால், உங்கள் ராஜ்யத் தையே பொடியாக்கி விடுவேன்' என மகமத்கானை நோக்கிக் கூறினர். மகமத்கான் அதைக் கேட்டு, அடங்காக் கோபங்கொண்டு, 'சிரோப்சிங் ஊரிலும் நீங்கள் கால் எடுத்து வைப்பீரா? அவ்வளவு ஆற்றல் உங்களுக்கு உண்டா? நீர் ஆண்பிள்ளையாயின் அப் படியே செய்யவேண்டும்' என்று கூறிச் செஞ்சிக்குத் திரும்பினன்.

செஞ்சியில் வந்த மகமத்கான் பாமர்துரை கூறி யதை சிரோப்சிங்கிற்குத் தெரிவித்தான். அதனை அருகிலிருந்து கேட்டிருந்த தேஜஸ்சிங், 'வர்த்தகத் தின் பொருட்டு வந்த அந்நியரை நாம் ஏன் வருத்த வேண்டும்! அவர்கள் என்ன நமக்குப் பகைவரா? ராபர்ட்ஸ் துரை, குடிகளுக்காக ஜாமீன் இருந்தாரே

அல்லது, கம்பெனிக்காக ஜாமீன் இல்லையே. கம்பெனிக்காக ஜாமீன் இருந்திருந்தால் நாம் கம்பெனியாரைக் கேட்கலாம்' என்று தன் தந்தைக்குக் கூறினன். சிரோப்சிங், தன் மகன் கூறுவன யாவும் உண்மையெனத் தெரிந்து, ஆங்கிலேயர்மீது கொண்டிருந்தவன்சினத்தை நீக்கிக்கொண்டனன்.

மகமத்கான், செயின்ட் டேவிட் கோட்டையை விட்டுச் சென்றதும், அவன் கூறிச் சென்ற வார்த்தையால் பாமர் துரை அதிகக் கோபங்கொண்டனர்; எப்படியாவது சிரோப்சிங் நாட்டைக் கொள்ளையடித்து நாசமாக்குவதே சரி என்று துணிந்தனர். அதனுல் அவர் கம்பெனியாருடைய அனுமதியில்லாமல், தமதிஷ்டமாகச் சில வீரர்களைக்கொண்டு, சிரோப்சிங்கற்குச் சொந்தமான ஐம்பத்திரண்டு பட்டணங்களை நாசமாக்கினர். அந்தப் பட்டணத்திலிருந்த ஜனங்கள் எல்லோரும், முறையிட்டுக்கொண்டு சிரோப்சிங்கிடம்போய், நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். பாமர்துரை அம்மட்டோடும் நிற்கவில்லை. செஞ்சிமன்னனது, ஏறக்குறைய அறுபதினுயிரம் வராகன் மதிப்புள்ள தானியங்களையும் நாசமாக்கினர். அவருடைய குழப்பத்தால், ஒரு பிள்ளையார் கோயில் பண்டாரமும் கொலையுண்டான். அவற்றை யெல்லாம், சிரோப்சிங் கேட்டும் வாளா இருப்பனே? அவனுக்கு அடங்காக் கோபம் பொங்கி வழிந்தது. அதனுல், அத்தகைய கோரங்களைச் செய்த பாமர்துரையை உயிருடன் விடுவதில்லை என்று அவன் சபதங் கூறினன்.

தேஜஸ்சிங், அவ்விஷயங்களை எல்லாம் கேட்ட போது, அவனுக்கும் பெருங்கோபம் உண்டாயது. என்றாலும், அவன் தன் தந்தையைப்போல் எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் செய்பவன் அல்லன். அவன், "பாமர்துரை கிழக்கு இந்தியா கம்பெனிக்கு அடங்கியவராதலால், இவ்விஷயத்தினை அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் மூலமாய் அவரை ஒழித்து, நஷ்டத்தையும் பெறலாம்" என்று தன் தந்தைக்கு யோசனை கூறினன். அவனுக்கு, அப்போது ஏற்பட்ட நஷ்டத்தைப் பாமர்துரை கொடுக்கச் சக்தியற்றவர் என்பது நன்றாய்த் தெரியும். நஷ்டமான பொருள் அவ்வளவும் வரவேண்டுமானால், கம்பெனியாரையே பிடிக்கவேண்டும் என்ற உளவறிந்து தன் மகன் கூறிய வார்த்தையை சிரோப்சிங் கேட்டு, அவ்வண்ணமே, "எனக்கு நேர்ந்த நஷ்டத்திற்கு ஈடாகப் பதினாயிரத்து அறுநூறு வராகன் கொடுத்தால் வேண்டும்; இல்லாவிடின், போருக்கெழுவேன்" என்று சென்னைக் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதிவிடுத்தனன்.

சென்னைக் கவர்னர் அக்கடிதத்தைக்கண்டு பெரிதுங் கவலையுற்றனர். சிரோப்சிங் கேட்பது நியாயம் என்றும், பாமர்துரை செய்தன எல்லாம் அநியாயம் என்றும் அவருக்கு விளங்கின. இருந்தும், அவர் சிரோப்சிங் கேட்ட அத்தொகை மிகவும் அதிகம் என்று ஆலோசித்து, அக்கடிதத்திற்கு ஒரு பதிலும் தெரிவியாமல் இருந்தனர். சிரோப்சிங், பதில் வாராததைக்கண்டு, தேவநாதன் பட்டணத்திலிருந்த ஆங்கிலேயரைப் பிடித்து வருத்த ஆரம்பித்தனன். அதனை

யறிந்த சென்னைக் கவர்னர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையை நீக்க, ஸுல்பிர்கர்கானுக்குப் பலமுறையும் கடித மூலமாகத் தெரிவித்தனர். ஸுல்பிர்கர்கான், அக் கடிதங்களைக் கவனிக்கவே இல்லை. சிரோப்சிங்கோ, மேலும் மேலும் ஆங்கிலேயரை ஹிம்சை செய்யத் தொடங்கினன். அதனால் சென்னைக் கவர்னர் செய்வ தொன்றும் அறியாராய்த் திகைத்து, அவ்வளவு தீங்கிற்கும் காரணமாய் இருந்த பாமர் துரையைக் கம்பெனியாரது உத்தரவின்மேல் நீக்கிவிட்டனர். அப்படியும், சிரோப்சிங்கின் கோபந் தணியவில்லை.

அப்போது, புதுச்சேரியில் பிரான்சுக் கவர்னராக இருந்தவர் ஹிபர் என்னும் துரையாவர். அவர், அவ்விரு திறத்தாருக்கும் உண்டாய பகையை நீக்கி, ஒருவாறு சமாதானப்படுத்த முன் வந்தார். சிரோப்சிங், அந்தக் கவர்னரிடமும், தான் கேட்ட தொகையைக் கொடுத்தாலன்றி, சமாதானமாக முடியாது என்று கூறினன். அதனால், அவர் சிரோப்சிங்குக்கு ஆங்கிலேயரிடம் பன்னீராயிரம் வராகன் வாங்கிக்கொடுத்து, அவனை ஒருவாறு சமாதானஞ் செய்தனர்.

ஒன்பதாம் அத்தியாயம்

## தேஜஸ்சிங்கின் ஆளுகை

ஷா-ஆலம் என்பவன் தனது எழுபதாவது வயதில் விண்ணுலகமடைந்தான். அவனுடைய ஆளுகையை ஜகாந்தர்ஷா என்பவன் பின்பற்றினன். அந்த ஜகாந்தர் மிகவும் கொடியவனாய், அஞ்சாநெஞ்சக் கொலைபாதகனாய் இருந்தான். அவன் ஷா-ஆலத்தின் சுற்றத்தார் எல்லோரையும் கொல்வதையே தன் பெருந் தொழிலாகக் கொண்டான். அங்ஙனமாயினும், அவன் ஸுல்பிர்கர்கானுடைய கைப்பம்பரமாக இருந்து, அவனுடைய சொல்லின்படி எல்லாக் காரியங்களையும் நடத்தி வந்தனன். அவன் ஒரு வருடமாவது சரியாய் ராஜ்யபாரத்தை நடத்தவில்லை. அதற்குள் அவனை பரக்சியர் என்னும் நவாப் கொலை செய்தனன். ஜகாந்தருடன் அவனுக்குத் துணையாய் இருந்த ஸுல்பிர்கர்கானும் மாண்டொழிந்தான். அதனால், அந்த பரக்சியர் என்பவன் 1713-ம் வருடத்தில், டில்லிக்கு நவாபாக வந்தனன்.

அக்காலத்தில், கர்னாடகத்தின் நவாபாக சததுல்லாகான் என்னும் மகமதியனை பரக்சியர் ஏற்படுத்தினன். அந்த சததுல்லாகான், பொறாமையே உருவாய் அமைந்தவன் ; எந்த நேரத்திலும், வீண் கலகம் செய்வதையே தன் பெருந்தொழிலாகக் கொண்டவன். அவன், கர்னாடக நவாபாக வந்தபோதே, செஞ்சி மன்னனிடம் பொறாமைகொண்டான். எனினும், அவன் அம்மன்னனின் சேனாபலத்தையும் மற்றைய பலத்தை

யுங்கண்டு, அதனை வெளிக்குக் காட்டாமல், தந்திரமாக ஏனைய பாளையக்காரர்களைத் தன் வசமாக்கிக் கொள்ள முயற்சி செய்து அவர்களுடன் நேசம் பாராட்டினன். பாளையக்காரர் எல்லோரும், தங்களிடத்தில் நவாப் நேசபாவம் காட்டுவதை மெய்யென்று எண்ணி, அவனை முழுவதும் நம்பினர்.

அங்ஙனம் இருக்க, செஞ்சியில் சிரோப்சிங் விடாப் பிணியால் பீடிக்கப்பட்டுப் பாயும் படுக்கையுமானன். அவனுக்கு உண்டாய நோயை நீக்க வைத்திய வித்தையில் கைதேர்ந்த பல வைத்தியர்களும், தங்கள் தங்களாலான சிகிச்சைகள் பலவற்றையும் செய்தனர்; தாம் அருமையாக முடித்த திவ்ய ஔஷதங்களையுங் கொடுத்தனர். ஒன்றும் அவனது நோயை நீக்கவில்லை. அதனால் அவன் மண்ணுலக ஆசையை ஒழித்துப் பேர் உறக்கம் கொண்டான். தேஜஸ்சிங், தன் தந்தை மாண்டதையும், அதுபற்றித் தன்னுடைய தாய் உடன் கட்டை யேறப்போவதையும் எண்ணிக் கதறிக்கதறி அழுதனன். 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ?' அவன், அரண்மனைக் கண்ணுள்ளவர் தேற்ற ஒருவாறு தேறி, தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைச் சரிவரச் செய்துமுடித்தனன். ராம்பாயும், கணவனுடன், தன் குலமரபின்படி உடன்கட்டை ஏறினள். தேஜஸ்சிங், பெற்றோர் இருவரையும் ஒரேகாலத்தில் பிரிந்து தனித்திருக்க மனம் துணிவனே? அவனுக்கு, பெற்றோர் போய் விட்டனரே என்னும் ஏக்கமே பெரிதாயிற்று. அதனல் அவன் சிலநாள் வரையிலும் ஆகாரம் கொள்ளாதும்

இருந்தான். அவனுடைய துக்கத்தை அறிந்த வயதில் முதிர்ந்த அறிஞர் பலர், அவனுக்குப் பல நியாயங்களை எடுத்துரைத்து, "இப்படியே நீ இருந்தால், ராஜ்ய காரியம் எப்படி நடைபெறும்?" என்று அவனைக் கேட்டனர். தேஜஸ்சிங், அவர்களுடைய வார்த்தையிலுள்ள உண்மையறிந்து, நல்ல நாள் ஒன்றில், பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்று, அந்நாட்டின் அதிபனாக மகுடம் பூண்டனன்.

குடிகள் எல்லோரும், தங்களிடத்தில் அதிக விசுவாசம் பாராட்டிவரும் தேஜஸ்சிங் முடிபுனைந்த நாளை, திருநாளாகக் கொண்டாடி, ஊரை அலங்கரித்தனர். தேஜஸ்சிங், தன்னுடைய மகுடாபிஷேகத்தை முன்னிட்டு, ஒருவிதமான ஆடம்பரமும் செய்திலன். அவனுக்குப் பெற்றோர் ஏக்கமே அப்போதும் பெரிதாய் இருந்தது. அவன் அங்ஙனம் செய்யாவிடினும், அவன் செய்வதற்குப் பதின்மடங்கு அதிகமாகவே குடிகள் தங்களுடைய சொந்தப் பணத்தில் அம்மஹோற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

தேஜஸ்சிங், சிம்மாதனம் ஏறியபோது அவனுக்கு இருபத்திரண்டு வயதாயது. அவன், தன் இளமைப் பருவத்திருந்தே வீரர்திலகனாக விளங்கியிருந்ததால், அவனைக்கண்ட அரசர் பலரும், அவனிடத்தில் அச்சம் பாராட்டி வந்தனர். இப்போது, அவனே சிம்மாதனம் ஏறியதும், அவர்களுக்கிருந்த அச்சம் மேலும் பெருகியது. தேஜஸ்சிங், வீரசிகாமணியாய் விளங்கிப் பிற மன்னருக்கு அச்சத்தை விளைவித்தாலும், அவன் தன் குடிகளிடத்தில் அதிக பக்ஷமாகவே நடந்துகொண்ட

னன். அவன் அவர்களுக்கு உண்டாகும் குறையைத் தானே நேரிற் சென்றறிந்து, அதனை நீக்கும் வழக்கம் உடையவனுய் இருந்தான். அவன், ராஜ்ய வியவகாரங் களில் பிறருடைய சொல்லை ஏற்றுக்கொள்வதே இல்லை. அவனுக்கு மந்திரிகள் எனப் பலபேர் இருந் தாலும், அவர்கள் எல்லோரும் பெயரளவாகவே அவனுக்கு உபயோகமா யிருந்தனர்.

அவன் சிம்மாசனம் ஏறியதும், முதன் முதலாகத் தனது படைகளை விருத்தி செய்வதில் தன் முழுக் கருத்தை வைத்தனன். அதனுல் அவனுக்குச் சேனு பலம் முன்னிலும் அதிகமாகப் பெருகியது. அவன் தன்னுடைய வருமானத்தில் பாதிப் பங்கை ராணுவத் திற்கென்றே செலவழித்தான். அவனுடைய ராணுவ வீரர் எல்லோரும், வஞ்சகம் என்பது சிறிதும் இல ராய்த் தங்கள் மன்னன் பொருட்டுத் தங்கள் உயிரை யுஞ் சந்தோஷமாகக் கொடுக்கத் தயாராய் இருந்தனர். எவனையாவது புதிதாய் ராணுவத்தில் சேர்த்துக் கொள்வதானுல், தேஜஸ்சிங்கு முதலில் அவனுடைய குலப்பிறப்பையும், குடிப்பிறப்பையும் கேட்டு, அவ னுடைய அங்கத்திலுள்ள ஏதாவது முக்கியக் குறி யொன்றைக்கண்டு, அவற்றைத் தன்னுடைய குறிப் புப் புத்தகத்தில் தானே குறித்துவந்தனன்.

அவன், குடிகளிடமிருந்து வசூலாகும் வரிப் பணத்தின் காற்பாகத்தை, அவர்களுக்கான சௌகர் யங்கள் செய்வதிலேயே செலவிட்டனன்: ஆங்காங் குப் புதிதாய்க் குளங்களையும், சத்திரங்களையும் கட்டு

வித்தான். பிரயாணிகள் போகும் வழியைச் சீர்திருத்தப் பல காடுகளை எல்லாம் அழித்து, அவற்றை வழியாக்கினன்; குடிகள் தங்களுடைய கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் கடிதப் போக்குவரவிருக்க, குதிரைத் தபாலும் ஏற்படுத்தினன்.

அவன், ஜனங்களின் குறையை நேரிற்கேட்டு நீக்கவும், அவர்கள் குற்றத்திற்கேற்ற தண்டனை விதிக்கவும், ராஜகிரியிலுள்ள அரண்மனையில், காலை ஏழு மணிமுதல் பத்துமணி வரையிலும் கச்சேரி நடத்தி வந்தனன். மாலைப் போதில், உயர்தர உத்தியோகஸ்தருடன் நாட்டின் குறைகளைப்பற்றிப் பேசி, அக்குறைகளை நீக்கும் வழிகளை அவர்களுடன் ஆலோசிப்பான்.

அவனுக்கு ரத்தினகிரி என்பது பந்தோபஸ்தான இடமாக இருந்தது. அந்த ரத்தினகிரியில் பீரங்கிகளும் பலவித ஆயுதங்களும் நிறைந்திருந்தன. அவ்விடத்திற்றான் ராணுவ விஷயமான பேச்செல்லாம் நடக்கும். தேஜஸ்சிங், தனது ராணுவங்களுக்கெல்லாம் தலைமை சேனாதிபதியாக, தனது தோழன் மகமத்கானை நியமித்து, அவன் பார்வையில் அதனை ஒப்புவித்தனன். மகமத்கான் ராணுவங்களுக்கு வேண்டிய திருத்தங்களை யெல்லாம் அந்த ரத்தினகிரியிலிருந்தே நடத்திவந்தனன்.

தேஜஸ்சிங், அரசுரிமை பெற்ற சில மாதங்களுக்குப்பின் தன் தோழனுக்கு பணமாகாமை கண்டு, அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, அவனை

மணஞ் செய்துகொண்டு வருமாறு கூறினன். மகமத் கானுக்கு மணம் செய்துகொள்வதில் மனம் இல்லை. அவன் பிரம்மசாரியாக இருந்து தன் காலத்தைக் கழிக்க எண்ணியிருந்தான். எனினும், தேஜஸ்சிங்கே அவனை வற்புறுத்தியதால், அதற்கு அவன் உடன்பட்டு, மன்னவன் தந்த பொருளுடன், தனது தாய் தந்தையர் வாழும் வழுதாவூருக்குப் போயினன்.

## பத்தாம் அத்தியாயம்

## சததுல்லாகானின் கலகம்

தேஜஸ்சிங் மேலும் மேலும் சேனைகளை விருத்தி செய்வது கண்டு, சததுல்லாகான் மிகவும் பொறாமை கொண்டனன். அவனுக்கு எங்கே தேஜஸ்சிங் தன்மீது திரும்பிவிடுகிறானோ என்ற பயம் உண்டாயது. அதனால், அவன் தனது ஆளுகைக்குள்ளடங்கிய நூற்றெழுபத்தொரு பாளையப்பட்டாரையும் தன் சமுகத்தில் வரவழைத்தான். அவர்கள் எல்லோரும் நவாபின் வேண்டுகோளின்படி ஆறுகாட்டில் வந்துசேர்ந்தனர். நவாப் அவர்களுக்கு தேஜஸ்சிங்கின் சேனுவலிமையைச் சுட்டி 'நீங்கள் எல்லோரும், உங்களை ஒத்த அரசனுக்கு அஞ்சி இருக்கவேண்டிய காரணம் என்ன? நீங்கள் எல்லோரும், எனக்குத் துணையாக வருவதென்றால் யான் செஞ்சிக் கோட்டையை நாசஞ் செய்துவிடுவேன்' என்று கூறினன். பாளையக்காரர் எல்லோரும் தங்களுக்குப் பின் நேரும் பெரும் விபத்தை யெண்ணாது, நவாப்பிற்கு இணங்கிவிட்டனர்.

அப்போது, நவாப்புக்குத் தான் எப்படி தேஜஸ்சிங்குடன் காரணமின்றிப் போருக்கெழுவது என்னும் கவலையுண்டாயது. உடனே அவன் தன்னுடைய கணக்கப்பிள்ளையை அழைத்து, 'செஞ்சிமன்னன் எத்தனை வருடமாகப் பகுதிப் பணங்கட்டாமல் இருக்கிறான் பார்' என்றனன். கணக்கப்பிள்ளை தன் கணக்கைப் பார்த்து, 'அவர்கள் பன்னிரண்டு வருடமாகப் பணங்கட்டாதிருக்கின்றனர். முன் இருந்த நவாப்பும், அம்

மன்னரிடம் பணம் பெறுவதில்லை; மற்றைய பாளையக்காரரிடமே பெற்று வந்தனர்' என்று நவாப்புக்கு உரைத்தனன். நவாப்புக்கு அதுவே காரணமாக ஏற்பட்டது. அதனால் அவன் தன் சிப்பந்திகளுள் ஒருவனாகிய தோன்றமல்லண்ணா என்பவனை, தேஜஸ்சிங்கிடம் பன்னிரண்டு வருடத்திய பகுதிப் பணத்தை வாங்கிவரும்படி அனுப்பினன்.

தோன்றமல்லண்ணா, ஆறுகாட்டைவிட்டுச் செஞ்சிக்குப் பிரயாணமாயினன். அவன் வரும்போது, இடையில் திமிரிக் கோட்டையில் வந்து, ஷேக் மகமதைக் கண்டு, தான் செஞ்சிக்குப் போகுங் காரணத்தை உரைத்தான். ஷேக் மகமது அதைக் கேட்டதும், தோன்றமல்லண்ணாமீது இரக்கம் பாராட்டி, 'ஐயோ! போயும் போயும் அந்த தேஜஸ்சிங் இடத்தில் நீயோ செல்லவேண்டும்! அவன் இந்த வார்த்தையைக் காதிற் கேட்டதும், உன்னைக் கொன்று விடுவானே! அவன் எவருக்கும் அடங்காத வீரனாயிற்றே' என்று கூறினன். தோன்றமல்லண்ணாவுக்கு, ஷேக் மகமது கூறியது உடனே பெரும் பயத்தை உண்டுபண்ணியது. என்ன செய்வான் அவன்! போகா விட்டாலும், நவாப் தனக்குத் தண்டனை விதிப்பான் என்பது அவனுக்கு ஒரு பக்கம் இடியாய் இருந்தது. கடைசியாக அவன் போய்ச் சேர்வதே சரியென்று ஷேக் மகமதுவிடம் விடைபெற்று, ஆரணிக்கு வந்து நகார்* அடித்தனன்.

தன்னுடைய தேசத்தில் புதிதாய் நகார் சத்தம் உண்டாகவே, அதனைக் கேட்ட அவ்வூர்ப் பாளையக்

---

* நகார் = யுத்த பேரி.

காரராகிய வேங்கடராயர் என்பவர் யாரோ பகைவன் தன் நகரில் வந்துவிட்டான் என எண்ணி, தன் சேனைகளுடன் புறப்பட்டனர். தோன்றமல்லண்ணு, வேங்கடராயரின் கருத்தை யறிந்து, விரைவாக அவரிடம் வந்து, "யான் தங்களிடம் சண்டைக்கு வந்தவன் அல்லன். செஞ்சிக் கோட்டைக்குப் பகுதிப் பணங் கொள்ளச் செல்கிறேன். வழியில் என் சேனைகளுடன் இங்குத் தங்க நேர்ந்ததால் நகார் அடித்தேன்" என்றான். வேங்கடராயர் அதைக் கேட்டுத் தன்னுடைய சேனைகளை ஊருக்குத் திரும்பும்படி உத்தரவிட்டு, தோன்றமல்லண்ணுவுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தான். தோன்றமல்லண்ணு, தேஜஸ்சிங் விஷயத்தில் பயந்தவனுதலால், அவனுக்குத் தப்பிப் பிழைக்கும் மார்க்கம் எது என வேங்கடராயரைக் கேட்டான். அவர், "நீ போய் தேஜஸ்சிங்கைப் பகுதிப் பணம் என்று கேட்ட அளவிலேயே, அவன் உன்னைக் கொன்று எறிவது திண்ணம். அவனிடத்திலிருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமாயின், நீ வைஷ்ணவ பக்தன் போல் வேஷமிட்டுச் செல்லவேண்டும். அவன அரிபக்தரிடத்தில் அதிகப் பற்றுள்ளவன். ஆதலால் அப்படிச் செல்லும் உன்னை அவன் ஒன்றுஞ் செய்யான்" என்று, தோன்றமல்லண்ணுவுக்கு உளவு கூறினன். மல்லண்ணு அதைக் கேட்டதும் சந்தோஷம் மிகுந்தவனுய் வேங்கடராயரிடம் விடை கொண்டு செஞ்சிக்கு அருகாக வந்தனன்.

மல்லண்ணு செஞ்சிக்கு அருகில் வந்ததும், தான் ஏறிவந்த யானையினின்றும் கீழ் இறங்கி, சுண்ணும்

பைத் தன் உமிழ்நீரில் குழைத்து நாமம் இட்டுக் கொண்டு, யானையின் தேகத்தில் சிறிது இரத்தம் உண்டாகும்படி அதைக் குத்தி, அந்த இரத்தத்தை ஸ்ரீசூரணமாக அணிந்து, தேஜஸ்சிங் கொலுக்கூடம் வரையிலும் நடந்து சென்றான். தேஜஸ்சிங், பட்டை நாமம் தரித்து வரும் புதுமனிதனை, யாரோ வைஷ்ணவ பக்தன் என எண்ணித் தன் ஆசனத்தை விட்டிழிந்து, அவனை அன்புடன் வரவேற்றனன். தோன்றமல் லண்ணு மிகவும் பயந்தவனாய், பெரிய வைஷ்ணவ பக்தன்போல் நடித்து, தான் நவாப்பால் அனுப்பப்பட்ட ஆள் என்றும், தன்னை நவாப் பன்னிரண்டு வருடப் பகுதிப் பணத்தைப் பெற்றுவர அவ்விடம் அனுப்பினன் என்றுங் கூறினன். தேஜஸ்சிங் அதைக் கேட்டதும், மல்லண்ணாவை விழித்துக் கோபத்துடன் நோக்கினன். அப்பார்வை மல்லண்ணுவிற்கு எமன் பார்வையாகத் தோன்றியது. பிறகு தேஜஸ்சிங் சிங்கத்தைப்போல் கர்ஜ்ஜித்து, "ஆஹா! சற்றும் அச்சமில்லாமலா அந்த நவாப் என்னிடம் பகுதிப்பணத்திற்கு உன்னை அனுப்பினன்? மடையன் அவன்! அவன் வார்த்தையைக் கேட்டு இவ்விடம் வந்த நீர், விஷ்ணு பக்தராக இருப்பதால், உம்மை உயிருடன் விட்டேன். நீர் உயிருடன் அந்த அற்ப மகமதியனிடம் சென்று, 'ஆண்பிள்ளையானல், பகுதிப் பணத்தைப் போரில் வென்று கொள்ளட்டும் என்று கூறினேன்' என அவனிடம் கூறிவிடும். இனி இவ்விடம் இராதீர்; விரைவிற் செல்லும்" என்று கூறினன்.

தோன்றமல்லண்ணு, தப்பிப் பிழைத்ததே தம்பிரான் புண்ணியமென நினைத்து, தேஜஸ்சிங்கிடம் விடைபெற்றுத் தனது சேனையுடன் ஆறுகாட்டை வந்து சேர்ந்தான். சததுல்லாகானுக்கு, தேஜஸ்சிங், பணத்தைக் கொடுக்கமாட்டான் என்பது முன்னரே தெரியும். அவ்விஷயத்தினையே, தோன்றமல்லண்ணு அவனிடம் வந்துகூற, அவன் மற்றைய பாளையக்காரர்களுக்கெல்லாம் தனக்குப் போர்த் துணையாக வரும்படிக் கடிதம் விடுத்தனன்.

## பதினேராம் அத்தியாயம்

## செஞ்சி ராணுவத்தில் கலகம்

மகமத்கான், மணஞ் செய்துகொண்டுவர வழுதாவூருக்குச் சென்றனன் என முன்னரே யாம் கூறியுள்ளோம். அவனுடைய வேலையை, காதர் என்பவனுக்குப்பதிலாக சிரோப்சிங் நியமித்த யூசப்கான் என்பவன் பார்த்து வந்தனன். அந்த யூசப்கானின் சமநிலையிலிருந்து அவனுடன் நேசபாவம் கொண்டிருந்தவன் தாதேகான் என்னும் மகமதியனுவன். யூசப்கான், மகமத்கானின் உத்தியோகத்தைப் பார்க்கவந்ததும், தன் நிலைமையில் இருந்த தாதேகானைத் தனக்குக் கீழ் அடங்கியவனுக எண்ணித் தான் முன் இருந்த நிலைமையையும் அறியாது அவனிடத்தில் தன் உயர்தர அதிகாரத்தைக் காட்டினன். அதனுல், தாதேகானுக்கு அடங்காக் கோபம் உண்டாய்விட்டது. மற்றைய வீரரும், அது விஷயமாக யூசப்கானை வெறுத்தனர்.

தாதேகான் தனது பகையை முடிக்க எண்ணி, சில ராணுவ வீரரைத் தனக்குத் துணையாகக் கொண்டான். அவன், ஒருநாள் யூசப்கான் உயர்தரப் பதவி அடைந்ததை முன்னிட்டு, உற்சவங் கொண்டாடப் போவதாகவும், அந்த உற்சவத்திற்கு யூசப்கான் வரவேண்டுமென்றும் அவனை வேண்டினன். யூசப்கான், அவன், கூறுவன யாவும் மெய்யென எண்ணி, அந்த உற்சவத்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டனன். பிறகு அந்த உற்சவம் ஒருநாள் இரவில் வைத்துக்கொள்ளப் பட்டது. அப்போது தாதேகான், தன் துணைவரான

ராணுவ வீரரையும் பிறரையும் வரவழைத்திருந்தான். எல்லோரும் வந்து சேர்ந்தனர். யூசப்கானும், பெருமிதத்துடன் அந்தக் கூட்டத்தில் வந்து தன் நிலைமையைத் தானே புகழ்ந்து கொள்வது போல், மற்றையோரிடம் ஒன்றும் பேசாது, தனியாய்ப்போய் உட்கார்ந்தனன்.

எல்லோருக்கும் விமரிசையாக விருந்து நடந்தது. தாதேகான், யூசப்கானுக்கு அதிகமாக மதுவைக் கொடுத்து அவனை மயக்கிவிட்டான். வந்த விருந்தாளிகள் எல்லோரும் மதுவுண்டு மயங்கிக்கிடந்தனர். அப்போது, தாதேகான் தனது துணைவரான வீரரைக் கொண்டு யூசப்கானை இழித்துப் பேசும்படி ஏவினன். வீரர்கள் யூசப்கானைப் பலவாறு இழித்துப் பேசினர். யூசப்கான், தன் வெறியால் அதைக் கேட்டுக் கோபங்கொண்டு, அவ்வீரரைக் கொல்லும் பொருட்டுத் தன் கத்தியை எடுத்தனன், அதனை அறிந்த வீரர் ஓ! என்று ஓலமிட்டு, தேஜஸ்சிங், நித்திரை செய்யுமிடத்தை அடைந்தனர். தேஜஸ்சிங் அவர்களது கூக்குரலைக் கேட்டுப் படுக்கையைவிட்டு வெளியே வந்தான். தாதேகான், தேஜஸ்சிங்கிடம் யூசப்கான் குடிவெறி கொண்டு தங்களை வெட்டவருவதாகக் கூறினன். அவன் அங்ஙனம் சொல்லிக் கொண்டிருக்கையில், யூசப்கான் கத்தியும் கையுமாய் அவ்விடம் ஓடிவந்தான். அவனைத் தேஜஸ்சிங் கண்டு, அவனுடைய கத்தியைப் பிடுங்கிக் கொண்டு, அவனை அந்த உத்தியோகத்தினின்றும் விலக்கிச் சாதாரண வீரன் எனும் நிலைமையில் வைத்

தான். பிறகு தாதேகான், மகமத்கான் வேலையைப் பார்க்க வேண்டிய பதவிபெற்றனன்.

யூசப்கான், குடிவெறியால் தனக்கு நேர்ந்த தாழ்வை எண்ணி மிகவும் வருந்தினன். அவனுக்கு, இனி செஞ்சி அரண்மனையில் இருத்தலே கூடாதென்னும் எண்ணம் உண்டாயது. எப்படியாவது, தன்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து மானபங்கம் செய்த தாதேகானையும், தேஜஸ்சிங்கையும் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று அவன் எண்ணினன். அதனல் அவன் தன்னுடனுள்ள வீரர்களுக்கும் துர்ப்போதனை செய்ய ஆரம்பித்தான். அவன் என்ன சொல்லியும், மற்றைய வீரர்கள் அவனுடைய வார்த்தைக்குக் காதுகொடுக்கவில்லை.

---

## பன்னிரண்டாம் அத்தியாயம்

# புதிய வீரன்

கி. பி. 1714-ம் வருடம், அக்டோபர் மாதம் முதல் தேதி காலையில், ஆறுகாட்டின் வழியாக ஒரு மகமதிய வீரன் குதிரை மீதேறி வந்துகொண்டிருந்தான். அவனை அந்த ஊர்ஜனங்கள் எல்லோரும் அதிசயமாகப் பார்க்கத் தலைப்பட்டனர். வந்தவன், ஓர் அந்நிய தேசவாசியாகக் காணப்பட்டனன். அவனுடைய மார்பில் இருப்புக் கவசமும், இடையில் கத்தியிடப்பெற்ற நீண்டு பளபளப்பமைந்த ஓர் உறையும் விளங்கின. அவனுடைய முகம், அவன் ஓர் அஞ்சா நெஞ்சுபடைத்த அருஞ்செயல் அமைந்த போர்வீரன் என்பதை நன்றாய்க் காட்டியது. அவன் குதிரையேறி வரும்போது, அவ்வூர் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக அவனெதிராக நின்றிருந்தனர். வந்த வீரன் 'இந்த ஊரின் பெயர் என்ன?' என்று அவர்களைக் கேட்டனன். ஜனங்களுள் ஒருவன், 'நீர் இந்த ஊருக்குப் புதியவராகத் தோற்றுகிறது. நீர் எங்கிருந்து வருகின்றீர்?' என அவனைக் கேட்டான். வந்த வீரன், தான் கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்து வருவதாகவும், மகமதிய வீரத்தை நிலைநாட்டும் வண்ணம் சததுல்லாகானைப் பார்க்க ஆறுகாட்டிற்குப் போவதாகவும் அவன் கூறினன். அதைக் கேட்ட ஊரானொருவன், 'இதுவே ஆறுகாடு' என்று கூறி, சததுல்லாகானின் அரண்மனையை அவ்வீரனுக்குக் காட்டினன்.

வந்த வீரன் எவனோ என நாம் எண்ணவேண்டுவதில்லை. அவனே, சிரோப்சிங்கின் மகனாகிய தாவுத்கான் என்பவன். அந்த தாவுத்கான், வறுமை அடைந்து தன்னை அடிமைகொண்ட வர்த்தகனிடம் சென்றனன் என யாம் முன்னரே கூறியுள்ளோம். அவன் அவ்வர்த்தகனிடம் சென்றதும், அவ்வர்த்தகன் அவனைக்கண்டு அதிக வருத்தம் அடைந்தான். தாவுத்கான், தனக்கு வர்த்தகத்தில் நாட்டம் இல்லை என்றும் தன்னுடைய ஜன்மபூமியைப் பார்க்கவேண்டும் என்னும் ஆசையே தன்னை வருத்துகிறதென்றும், அவ்வர்த்தகனிடம் தெரிவித்தான். அதைக்கேட்ட அவ்வர்த்தகன், தாவுத்கானுக்கு மறுபடியும் பொருளுதவி செய்து, அவனை இந்தியாவிற்கு வியாபாரத்தின் பொருட்டுச் செல்லும் தனது கப்பலில் ஏற்றி அனுப்பினன். தாவுத்கான் இந்தியாவின் எல்லையை மிதித்ததும், ஒரு குதிரையையும், பெரியதோர் கத்தியையும் கவசத்தையும் விலைக்கு வாங்கினன். அவன், தான் வாங்கிய கவசத்தையும் கத்தியையும் உடலில் தரித்துக் குதிரைமேல் ஏறி, ஹைதராபாக்கத்துக்கு வந்தனன். அங்கு அவன் வருவதற்கு ஆறு மாதத்திற்கு முன்னரே அவனுடைய தாய் இறந்துபோயினள். அவளுக்குத் தன் மகனது ஏக்கமே எமனாய் இருந்தது. தாவுத்கான் தன் தாய் இறந்ததை அங்குள்ள சிலரால் கேள்விப்பட்டுப் பெருந்துயர் அடைந்தனன். அவன் ஒருநாள் அவ்வூரின் கடைவீதி வழியாக வரும்போது, சிலர், ஆறுகாட்டு நவாப் தேஜஸ்சிங்கின்மீது போர்க்கெழப் போவதைப்பற்றிப் பேசியிருந்தனர். தாவுத்கான்,

அவர்கள் பேசியிருந்த விஷயத்தை உணர்ந்து சததுல் லாகானிடம் சேர்ந்து தன்னுடைய வீரத்தைக் காட்டி மகமதிய வீரத்தை நிலை பெறச் செய்ய வேண்டும் என்று எண்ணி ஆறுகாட்டுக்கு வந்துளதாய்க் கூறினான். தாவுத்கானுக்குத் தன்னுடைய தகப்பன் சிரோப்சிங் என்பது தெரியாது. சான்பீபி, ஹைதராபாக்கம் வந்ததும் உண்மை மகமதியப் பெண்ணாகவே நடந்துகொண்டனள்.

அவன் அன்று ஆறுகாட்டில் வந்ததும், அவ் வழிப்போக்கன் உதவியால் நவாப்பின் அரண்மனையை அறிந்து அங்குச் சென்றனன். அவனைக்கண்ட நவாப்பின் வேலையாட்கள், நவாப்பிடஞ்சென்று 'யாரோ ஒரு வீரன் அரண்மனை வாயிலில் வந்திருக்கிறான்' எனக் கூறினர். அப்போது, நவாப் கொலுமண்டபத்திலிருந்து தேஜஸ்சிங்குடன் போர் செய்யவேண்டி முன்னே சௌகர்யப்படுத்திக் கொள்ளவேண்டிய காரியங்களை எல்லாம், தன் சபையாருடன் ஆலோசனை செய்திருந்தனன். வேலையாட்கள் வீரன் ஒருவன் வந்துளான் எனக் கூறவே, அவன் தன் வேலையை விட்டு அவ் வீரனைக் கொலுமண்டபத்தில் அழைத்து வரும்படி அவ்வேலை யாட்களுக்குக் கட்டளையிட்டான். வேலையாட்கள் தாவுத்கானை நவாப்பிடம் அழைத்துவந்தனர். தாவுத்கான், நவாப்புக்கு வந்தனஞ்செய்து தன்னுடைய வரலாற்றையும் எண்ணத்தையும் அவனிடந் தெரிவித்துக் கொண்டான். நவாப் தாவுத்கானின் முக விலாசத்தால் அவனை உண்மையான வீரன் என

மதித்துத் தன்னுடைய வீரருள் ஒருவனுக அங்கீ கரித்துக் கொண்டான்.

தாவுத்கான் வந்துசேர்ந்த அன்று, நவாப் கடிதத் தைப்பெற்ற பாளையக்காரர் எல்லோரும் தங்கள் தங் கள் சேனைகளுடன் ஆறுகாடு வந்துசேர்ந்தனர். சத துல்லாகான் அவர்களை உபசரித்துத் தனது கொலு மண்டபத்தில் அழைத்து வந்தனன். பாளையக்காரர் எல்லோரும் தத்தமது இருக்கையில் அமர்ந்தனர். அவர்களுள் திருவண்ணுமலைப் பாளையத்தைச்சேர்ந்த சுபங்கித்துரை என்பவர், 'நாம் தேஜஸ்சிங்கின்மீது படையெடுத்துச் செல்வதற்கு முன்னுக, அவனுடைய ஊரின் நிலைமையையும் ராணுவங்களின் அளவையும், கோட்டையின் காவலையும் அறிந்து வருவது நல்ல தாகும்' என நவாப்புக்குக் கூறினர். மற்றைய பாளை யக்காரரும் அங்ஙனஞ் சென்று முதலில் உளவறிந்து வருதல் மிகவும் நல்லதே என்று ஒரே மனதாய்க் கூறினர். அப்போது, அங்குச்சென்று உளவறிந்து வருவதற்கு ஏற்றவன் யார் என நவாப்பு எண்ணலாயி னன். அவன் மனதிற்கு ஒருவனும் ஏற்றவன் என விளங்கவில்லை. அதனுல் அவன் அச்சபையோரையே ஒரு தூதனைக் குறிக்குமாறு கேட்டனன். சபையோர் அனைவரும் அதுபற்றி யோசனை செய்தனர். அப் போது தாவுத்கான் நவாப்பின் முன்வந்து, "தாங்கள், இதுவிஷயமாக என்னை அனுப்பும் பக்ஷத்தில், யான் ஒரு அந்நிய தேசத்து வியாபாரியைப்போல் அவ்வி டஞ் சென்று, எல்லா உளவையும் அறிந்து வருவேன்" என்று கூறினன்.

சபையார் எல்லோரும், தாவுத்கான் உருவத்தை நோக்கி, ‘இவனே இவ்வேலைக்கு ஏற்றவன்’ என்று கூறினர். நவாப்பும், முன்பின் அவனை அறியாதிருந்தும், அவனது களங்கமற்ற முகத்தால், அவனை ஓர் உண்மை மகமதியன் என எண்ணிச் செஞ்சிக்கு அனுப்பச் சம்மதித்தான்.

தாவுத்கான், நகை வியாபாரியைப்போல் வேஷந் தரித்துக்கொண்டனன். அவன் அப்போது அணிந்து கொண்ட ஆடை, துருக்கிய வர்த்தகனது ஆடையைப் போல் இருந்தது. தன்னை ஒருவரும் கண்டுபிடியாதபடி அவன் நரைத்தமயிரால் கட்டப்பெற்ற ஒரு தாடியைத் தன் முகத்தில் கட்டிக்கொண்டான்; தனது சட்டைக்குள்ளாக இருப்புக் கவசமும் பூண்டிருந்தனன்; அந்தக் கவசத்தின்கீழாக, ஒரு கைத்துப்பாக்கியைக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு, அதை மேற்சட்டையால் மறைத்துக்கொண்டனன்; வெளிப்படையாக, ஒரு கைவாளையும் வைத்திருந்தான். அக்காலத்தில் வர்த்தகர்கள் எப்போதும் தங்களுடைய பாதுகாப்பின் பொருட்டுக் கைவாளை வைத்துக்கொண் டிருந்தனர். அதனால், அவன் வெளிப்படையாக வைத்துக்கொண்ட அவ்வாளைப்பற்றிப் பயங் கொள்ளவில்லை. எல்லா வேஷமும் சரியாய்விட்டது. அதனால் அவனுக்குப் பிறர் தன்னைக் கண்டறியமுடியாது என்னும் துணிவும் ஏற்பட்டது. உடனே அவன் சததுல்லாகான் முன் சென்று, அவனைச் செஞ்சிக்குப்போக விடை கேட்டனன். நவாபும் மற்றைய பாளையக்காரரும் முதலில் அவனை இன்னனெனக் கண்டுபிடிக்காமல் போயினர்.

அவன் விடை கேட்டதனால் உண்டாகிய தொனியினால் எல்லோரும் ஆச்சரியம் அடைந்து, அவனைப் பெரிதும் புகழ்ந்தனர். நவாப், அவனிடத்தில் இராஜத்துரோகம் செய்யாதிருக்கக் கொரான்மீது உறுதி பெற்று, அவனைச் செஞ்சியம்பதிக்கு அனுப்பினன்.

அந்தக் காலத்தில், திருடர்கள் எப்போதும் குடிகளுடைய வீட்டில் புகுந்து களவாடுவது கிடையாது; காட்டிலுள்ள வழிகளில் மறைந்திருந்து, அவ்வழியாக வரும் வழிப்போக்கரையும் வர்த்தகரையும் ஹிம்சித்து, அவர்கள் கைப்பொருளை யபகரித்து, அதனால் ஜீவனம் செய்துவந்தனர். அதுபற்றியே அக்காலத்தினர் வழிப்பிரயாணம் போவதற்குப் பெரிதும் அஞ்சியிருந்தனர்; ஒருவன் வீட்டைவிட்டு வெளியூருக்குச் சென்று மீட்டும் வந்து சேர்வது அவனுக்கு மறுஜனனமாகும் என்றுங் கருதினர்.

தாவுத்கான், ஆறுகாட்டை விட்டுப் புறப்பட்டுக் காட்டின் மார்க்கமாக வந்துகொண்டிருந்தான். அவ்விடத்தில், ஒரு வர்த்தகக் கூட்டத்தாரைச் சில கள்வர்கள் பிடித்து, அவர்களது கை கால்களைக் கட்டி, அவர்களை ஹிம்சித்துக்கொண் டிருந்தனர். கள்வரோ, ஏறக்குறைய இருபது பேருக்குக் குறையாமல் இருந்தனர். அவர்கள் கையில் துப்பாக்கி முதலான ஆயுதங்களும் இருந்தன. தாவுத்கான் அக்கொடுமையினைக் கண்டதும், தான் தனிமையாய் இருத்தலையும் எண்ணாது, அக்கள்வர்களிடஞ் சென்றனன். அக்கள்வர்களின் தலைவன் தாவுத்கானைக்கண்டு, அவனையும் பிடித்துக்கட்டும்படி தனது கூட்டாளிகளுக்கு உத்தரவிட்டனன்.

கூட்டாளிகள் அவனை நெருங்கிக் கட்டவரும்போது, அவனுக்கு என்றுமில்லாத கோபம் பிறந்துவிட்டது. அதனால் அவன் தான் மறைத்துவைத்திருந்த கைத்துப்பாக்கியை, அக்கள்வர்கள் அறியாதபடி வெளியே எடுத்துச் சிலவெடிகளைப் பிரயோகித்தான். தாம் எதிர் பாராதபடி உண்டான வெடிகளைக்கண்டு, கள்வர் எல்லோரும் பயந்து, நாலா பக்கங்களிலும் சிதறியோடினர். தாவுத்கான் கள்வர்கள் ஒழிந்ததும் வர்த்தகரின் கட்டை அவிழ்த்தான். வர்த்தகர் தாங்கள் உயிர் பிழைத்த சந்தோஷத்தால், அவனுக்குத் தங்கள் தங்கள் பொருளை இருபாகமாக்கி ஒரு பாகத்தைக் கொடுக்க வந்தனர். அவன் அப்பொருளைப் பெறுமல், அவர்களுக்கு இனியமொழி கூறி, செஞ்சியின் எல்லையை அடைந்தான்.

செஞ்சி நகரம் நான்கு பக்கத்திலும் கல்லரணுல் சூழப்பட்டிருந்தது. அந்த நான்கு பக்கத்து அரண்களிலும், ஒவ்வொரு வாயில் உண்டு. தாவுத்கான் அந்த நகரத்தின் வடக்கு வாயிலின்கண் வந்து நின்றுன். அவ் வாயிலே இரண்டு போர்வீரர்கள் உருவிய கத்தியுடன் பாரா கொடுத்திருந்தனர். அவர்கள் தாவுத்கானைக் கண்டதும், அவனை யாரோ ஒரு அயல் நாட்டு வர்த்தகன் என எண்ணி அரசனிடம் அழைத்துச் செல்லுமாறு தங்கள் அருகிலிருந்த சேவகருக்கு உத்தரவிட்டனர். சேவகர், தாவுத்கானை நகரத்தினுள் அழைத்துச் சென்றனர். ஆங்கு லக்ஷ்மிவிலாசம் செய்யும் கடைவீதிகளையும், சந்தைகளையும், கூட்டங் கூட்டமாக நிற்கும் ஜனங்களையும், ஸ்ரீரங்கநாதருடைய கோயில் அழகை

யும் தாவுத்கான் கண்டு அதிசயத்துடன் அச்சேவக ரைப் பின்தொடர்ந்து போயினன். அவன் எந்தப் பக்கம் திரும்பினும், ஓரே உயரமுள்ள மாளிகைகள் சலவைக்கற்களால் கட்டப்பட் டிருப்பதைக் கண்ட னன்; இவ்வளவு செல்வம் உடைய நகரும் உலகில் வேறொன்றுண்டோ என்றும் எண்ணினன். அந்த மாளிகைகளுக்குப் புறம்பாக, குடிசை வீடுகளுள் ஏழைகள் வாசம் செய்திருந்தனர். அவர்களும், ஒரு கவலையும் அற்றுத் தத்தம் உறவினருடன் உல்லாசமாக இருப்பதை அவன் கண்டு, ஏழைகளும் இந்த ஊரில் கவலையின்றி வாழ்கின்றனரே என்று ஆச்சரியம் அடைந்தான்.

சேவகர், தாவுத்கானை அரண்மனைக்கண் அழை த்து வந்து, அந்த அரண்மனை வாயிற்காப்போனிடம், "இவர் ஓர் அந்நிய தேசத்து வர்த்தகர். இவரை, அர சரிடம் கொண்டுபோய் விடும்படி வடக்குப் பக்கத் தரணின் வாயில் காப்போர் கூறினர்" என, அவ் வாயில் காப்போன், அவர்களைச் செல்லவிட்டனன். தாவுத்கான் சேவகருடன் அரண்மனையுட் சென்றான். தேஜஸ்சிங், கொலு இருக்கும் நேரம்போக மற்றைய நேரத்தில், மலைக்கோட்டைக்குக் கீழ் உள்ள அந்த அரண்மனையிலேயே இருப்பது வழக்கம். போலிவர்த் தகன் அரண்மனையுட் சென்றதும், அதன் அலங்காரங் களை எல்லாம் ஆவலுடன் பார்க்கத் தலைப்பட்டனன். அந்த அரண்மனை முழுவதும், நன்றாய் இழைத்துக் கண்ணாடியைப்போல் பளபளப்பமைந்த கருங்கல்லி னால் கட்டப்பட்டிருந்தது. அதனுடைய அஸ்திவாரம்

ஒரு பலமுள்ள குன்றின்மேல் இணைக்கப்பட்டிருந்தது. தாவுத்கான், அந்த அரண்மனை வளன்களை எல்லாம் பார்த்துக்கொண்டு, அதனுள் போர்வீரர் காவலுடன் அமைந்த ஆறு வாயிலையும் கடந்து சென்றான். அங்குச் சிறிய வாயில் ஒன்று இருந்தது. அந்த வாயிலில், இரண்டு பக்கத்திலும் இரண்டு பீரங்கிகள் வைக்கப் பட்டிருந்தன. அவன் அதையும் கடந்து சிறிது தூரஞ் சென்றதும், நில அறை ஒன்று காணப்பட்டது. சேவகர் அவனை அந்த நில அறையின் வழியாக அழைத்துக் கொண்டு போயினர். அவன் அந்த நில அறையைக் கடந்ததும், ஒரு பெரிய வாயிலைக் கண்டான். அங்கு யூசப்கான் பாரா கொடுத்திருந்தனன். சேவகர் போலி வர்த்தகனை அவ்விடம் நிறுத்தி, தேஜஸ்சிங்கிடம் அவ்வர்த்தகனது வரவைத் தெரிவிக்குமாறு சென்றனர்.

யூசப்கான், போலி வர்த்தகனைக்கண்டு, அவனுடைய ஊர் பெயர் என்ன என்று விசாரித்தான். தாவுத்கான் தனது ஊர் பெயரை எல்லாம் மாற்றிச் சொல்லி, தேஜஸ்சிங்கினது குணதிசயம் எப்படி என்று யூசப்கானைக் கேட்டனன். யூசப்கான் தனது மன்னனைக் குறைவுபடக் கூறுதல் கண்டு, தாவுத்கான், அவனைத் தனது கருவி எனக்கொள்ள எண்ணி அவனை மேலும் ஆராய்ந்தான். யூசப்கான், உண்மையில் தேஜஸ்சிங்கின் மீது பகை பாராட்டி இருப்பதால் தன் பகைக் குணத்தை நன்றாய்த் தாவுத்கானுக்கு வெளியாக்கினன். அதனால், தாவுத்கான் அவனை முற்றிலும் நம்பி தான் வந்த காரணத்தை அவனுக்குத் தெரிவித்தனன்.

அதைக் கேட்டதும், யூசப்கான் தனது பகையை முடித்துக் கொள்ளுஞ் சமயம் வாய்த்தது என்று சந்தோஷம் அடைந்தான். தாவுத்கான், யூசப்கானை செஞ்சி ராணுவங்களின் நிலைமை எப்படி என்று கேட்கும்போது, தன்னை அழைத்துக்கொண்டு வந்த சேவகர், பத்தடி தூரத்தில் மறுபடியும் வரக்கண்டனன். அதனை யூசப்கானும் கண்டு, 'எல்லாவற்றையும் இன்றிரவு நடு ஜாமத்தில் யான் சொல்லுகிறேன். நீ இத்திசைக்கு வடக்கிலுள்ள அரங்கநாதர் கோயிலில் வந்திரு' என்று கூறினன்.

சேவகர் வந்து தாவுத்கானை தேஜஸ்சிங் இருக்கும் சிருங்கார மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போயினர். அவ்விடத்தில், சலவைக் கற்களால் இழைக்கப்பட்ட அடித்தலத்தின்மேல் இரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல், பொன்னாற்செய்து விலை மதிக்கக்கூடாத இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற ஆசனங்கள் பல இருந்தன. அந்த ஆசனங்களுக்கு மத்தியாக, சிறிது உயர்ந்த இடத்தில், மன்னனுடைய அரியாசனம் அமர்ந்திருந்தது. அது முற்றிலும் வைரக்கற்கள் பதிக்கப் பெற்றதால், கண்டவர் கண்ணையும் கூச்சுதலடையச் செய்யும் ஜோதி உருவாக விளங்கியது. அந்த மாளிகையில் நான்கு வெள்ளைத் தூண்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் ஏறக்குறைய பதினறடி சுற்றளவுள்ளதாக இருந்தன. அத்தூண்கள், முத்தின் சுண்ணத்தால் தீட்டப்பெற்று மொழு மொழு என விளங்கின. சுவர்கள் எல்லாம், வெள்ளைக் கற்களால் ஆனவை. அவற்றில், அலங்காரமா

கப் பல வீரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அரசன் உட்காரும் இடத்திற்கு எதிராக உள்ள சுவர் ஒன்றில் இராமாயண பாரத வீரரின் உருவங்கள் விளக்கமாகச் செதுக்கப்பட் டிருந்தன. அவற்றை யெல்லாம் தாவுத்கான் கண்டு பொறுமையால் பெருமூச்சுவிட்டு, அந்தச் சேவகர் குறித்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தனன். சேவகர் அவனை உட்காரவைத்ததும், தேஜஸ்சிங்கிற்கு அவன் வந்த விஷயத்தைத் தெரிவிக்குமாறு சென்றனர்.

சிறிது நேரம் தாழ்ந்தபின் தேஜஸ்சிங், சில வீரர்கள் முன்னதாக உருவிய கத்தியுடன் வர, அவர்கள் பின்னால் வந்தனன். அவன் இடையில் சல்லடம் போற்கட்டிக் கீழாகத் தொங்கவிட்ட பட்டாடை ஒன்றுடன் தோளின்மேல் ஒரு மஞ்சள் பட்டாற்செய்த உருமாலை தரித்திருந்தான். அதனால் அவனுடைய உடல் முழுவதும் பார்ப்பவர் கண்ணுக்கு விளக்கமாகத் தோன்றியது. அவனுடைய தேகம் முழுவதிலும், தேகாப்பியாசப் பயிற்சியால் சதை கட்டுக் கட்டாக ஆங்காங்குக் கட்டியிருந்தது. அவனுடைய கைகள் அவனது முழங்கால் வரையிலும் நீண்டிருந்தன. பரந்தகன்ற மார்பு, முன்னாக வந்து அவனது இடையை மிகவும் சிறியதெனக் காட்டிற்று. அவனுடைய கழுத்து நன்றாய் உருண்டுதிரண்டு கனத்திருந்தது. அவன் தன்னுடைய நெற்றியில் ஸ்ரீசூர்ணம் அணிந்து அதற்கடியில் மஞ்சற்பொட்டொன்றும் அணிந்திருந்தான். அவனுடைய இரண்டு கன்னங்களின் மேலாக மஞ்சள் கலவையால் சூர்யபிறை

சந்திரபிறை என்னும் குறிகள் விளங்கித்தோன்றின. அவனுடைய முகத்தில் வீரலக்ஷ்மி விலாசம் செய்து கொண்டிருந்தனள். அவன் அவ்விடத்தில் வந்ததும், அவனுக்கு முன்பாகக் கத்தி பிடித்து வந்தவர், "தேஜஸ்சிங்கு ராஜனுக்கு ஜயம் உண்டாகக்கடவது" என்று கூறினர். தாவுத்கான் அரசனுக்கு மரியாதை யாக அவன் வந்ததும் எழுந்து அவனை வணங்கி நின்றான். தேஜஸ்சிங், தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து, தாவுத்கானை உட்காரும்படிக் கூறினான். தாவுத்கான் அவனிடத்தில் அதிக மரியாதை யுடையவன் போல் நடித்து, உட்காராமலே தான் ஆறுகாட்டு அரண்மனை யிலிருந்து கொண்டுவந்த அந்நிய நாட்டுச் சாமான்களை அவனிடம் காட்டினன். அவற்றைத் தேஜஸ்சிங் பார்த்து, எல்லாவற்றையும் வர்த்தகன் கூறிய விலை கொடுத்து வாங்கினன். தாவுத்கான் தன் வர்த்தகம் முடிந்ததால், அரசனிடத்தில் அதிக பக்தியுள்ளவன் போல் நடித்து, அவனிடம் விடைகொண்டு அந்த அரண்மனையை விட்டு வெளியே வந்தனன்.

தாவுத்கான், அரண்மனையைவிட்டு வெளியே வரும்போது, யூசப்கானை அன்றிரவு அரங்கநாதர் கோவிலுக்கு அவசியம் வரும்படியாகக் கூறினான். அவன் அன்றைய பகற்பொழுதைப் போக்கவும், அந்நகரின் உளவுகளை அறியவும் ஊர் முழுவதும் சுற்றினான்; ஆங்காங்குள்ள காவலையும், இராணுவங்கள் இருக்குமிடங்களையும் அறிந்துகொண்டான். அவனை எவரேனும் சந்தேகமுற்றுக் கேட்டால், தான் தேஜஸ்சிங்குக்குச் சாமான்களை விற்றுவந்த அயல்நாட்டு வர்த்தகன் என

அவர்களுக்குக் கூறித்திரிந்தான். பொழுதுபோய் நடு யாமமும் வந்தது. அதனால் அவன் யூசப்கான் கூறிய அரங்கநாதர் கோயில் இருக்கும் திசையைநோக்கி நடந்தான். அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷத்து இரவானதால், காரிருள் அவன் கண்ணைக் கப்பியது. எனினும், அவன் மிகவும் கூர்ந்த பார்வையுடன், அந்த இருட்டில் நடந்து அரங்கநாதர் கோயிலை அடைந்தான்.

அந்த அரங்கநாதர் கோயில், செஞ்சிக்கு மூன்று மைலுக்கு அப்புறத்தில் உள்ளதென முன்னரே யாம் கூறியுள்ளோம். அக் கோயிலின்கண் அரங்கநாதரைத் தரிசிக்க மூன்று வாயில்கள் இருக்கின்றன. ஒன்று, அக்கடவுளின் முகத்துக்கு எதிராகவும், ஒன்று அவரது இடைக்கு நேராகவும், மற்றொன்று அவரது திருவடிக்கு எதிராகவும் அமைந்திருந்தது. அந்தக் கோயில், மிகப் பழைய காலத்தில் கட்டப்பட்டதென விளங்கியது. அதனைச்சூழ, வானளாவித் தழைத்த மரங்கள் பல வளர்ந்திருந்தன. தாவுத்கான் அங்கு வந்ததும், அவ்விடத்தில் மரங்களின் அடர்த்தியால் மேலும் இருள் கவிந்திருப்பதைக் கண்டு, வேறெங்கும் போகாது, அக்கோயிலின் இடைக் கோபுரவாயில் முன்பாக உட்கார்ந்துகொண்டனன். தன்னந்தனியாக, நடுக்காட்டில் காரிருளில் எவரே பயமின்றி இருப்பர்! தாவுத்கான் தைர்யசாலியாக இருந்தும், தனித்திருந்ததால் எண்ணாததும் எண்ணி நடுங்கினன். அடிக்கடி காற்றினால் மரஞ்செடிகள் அசைவதால் உண்டாகும் சப்தத்தைக் கேட்டு அச்சமுற்றனன். நடுயாமம் ஆகியும் யூசப்கான் வரவில்லை. அதனால் தாவுத்கானுக்கு

மேலும் பயம் உண்டாயது. ஒருவேளை யூசப்கான் தன்னை வஞ்சகமாக இங்கு வரும்படிச் சொல்லினனே எனவும் அவன் எண்ணிவிட்டனன். அப்போதுண்டான அவனது மனக்கலக்கத்திற்கு அளவே இல்லை. அங்ஙனம் அவன் தடுமாற்றம் அடைந்திருக்கும் நிலைமையில், அவன் எதிராக யூசப்கான் நடந்து வந்தனன். அவனைக் கண்டதும் தாவுத்கானுக்கு யூசப்கான் எனும் எண்ணம் உண்டாகவில்லை. தன்னை தேஜஸ்சிங் தூதன் பற்றிச் செல்ல வருகிறான் என்று எண்ணி, அச்சத்துடன் அவ்விடத்திலேயே தரையோடு தரையாய்ப் படுத்துக்கொண்டான். அவனுடைய வீரம் எல்லாம் அப்போதுண்டான அவனுடைய பயத்திற்கு அடிமையாய்விட்டன.

யூசப்கான் கோயிலை அடைந்து, 'ஐயா! ஐயா !!' என்று மெதுவாக அழைத்தான். இருள் அடர்ந்திருந்ததால், அவன் தாவுத்கான் படுத்திருப்பதைப் பார்க்க முடியவில்லை. தாவுத்கான் மெல்ல எழுந்து, குரலொலியால் யூசப்கானென அறிந்து, 'இதோ இருக்கிறேன்' என ஈனத்தொனியுடன் கூறினன். யூசப்கான், அத்தொனிவரும் இடமறிந்து, தாவுத்கானை அடைந்து, 'யான் அரண்மனைச் சேவகர் உறங்கும் வரையில் காத்திருந்து வந்தேன்; அதனல் குறித்த நேரத்தில் வரவில்லை' என்றனன். அப்போது தாவுத்கான் சிறிது தைரியம் வரப்பெற்றவனாய், தேஜஸ்சிங்கின் இராணுவத் தொகையையும், அவன் பிறமன்னருடன் போர் செய்வதாக இருந்தால், அப்போது அவன் செய்யும் ஏற்பாட்டையும், விளக்கமாக யூசப்கானிடம் அறிந்து

கொண்டனன். பிறகு அவன், "செஞ்சிக்கோட்டையிலுள்ள சுரங்கத்திற்கு வெளியாக எவ்விடத்தில் வழியிருக்கிறது' என்று யூசப்கானைக் கேட்டான். யூசப்கான், "அந்தச் சுரங்கத்திற்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தில் ஒரு ஆலமரம் உண்டென்றும், அந்த மரத்தின் பக்கமாக வழியிருக்கிறதென்றும் அக்கோட்டையை எதிர்க்கவேண்டுமானல், வடக்குப் பக்கத்துக் கோட்டை வாயிலாகவே வரவேண்டும்" என்றுங் கூறினன். தாவுத்கான் அவற்றை எல்லாம் சாவதானமாகக் கேட்டுக்கோண்டு யூசப்கானிடம் விடைபெற்று அந்த இரவே ஆறுகாட்டிற்குப் பிரயாணமாயினன்.

மறுநாள் காலை, ஆறுகாட்டில் சததுல்லாகான் தாவுத்கானுடைய வருகையை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்திருந்தான். சபையிலிருந்த பாளையக்காரருள் சிலர், 'ஒருவேளை அவன் தேஜஸ்சிங்கிடம் அகப்பட்டுக்கொண்டிருப்பான். அதனாற்றான் அவன் இன்னும் வரவில்லை' என்று நவாப்புக்குச் சொல்லிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில், ஆங்கிருந்த எல்லோருடைய மனதும் களிகொள்ள, தாவுத்கான் கொலு மண்டபம் அடைந்து நவாப்பை வணங்கி, தான் அறிந்துவந்தனவற்றை விளக்கமாகக் கூறினன். நவாப், அவனது திறமையை அறிந்து, அவனைத் தனது சேனாதிபதியாகக் கொண்டனன்.

சததுல்லாகான் அன்றே அஃதாவது-1714-ம்ஞு அக்டோபர்மீ 10உ பாளையக்காரர் எல்லோரையும் அவரவரது சேனைகளுடன் அழைத்துக்கொண்டு செஞ்

சிக்குப் போகத் தீர்மானித்தான். தனது புதிய சேனாதி பதிக்குத் தன்னுடைய சேனைகளை எல்லாம் அழைத்துக்கொண்டு, சங்கராபரணி யாற்றங்கரையிற் போய்த் தங்கி, அங்கிருந்து நகார் அடிக்குமாறு உத்தரவிட்டனன். தாவுத்கான் நவாப்பின் உத்தரவின்படி சேனைகளைச் சேர்த்துக்கொண்டு, சங்கராபரணி ஆற்றங்கரையில் இறங்கி நகார் முழக்கினன்.

---

**பஞ்சாத்தினம்:**—மணாளனைத்தவிர மற்றொருவரை மனத்திலும் நாடாத **உருக்குமிணி**; நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த **சாவித்திரி**; காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக்காத்துவந்த **சீதை**; தந்தை வீட்டில் எல்லா சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவுமெண்ணிக் காலங்கழித்து வந்த **தமயந்தி**; கள்ளமென்பதை எள்ளளவும் உணராதவளும் தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்டவளுமான **சகுந்தலை** முதலியவர்களின் சரிதங்கள் சொண்டது. விலை அணா **12**

பதின்மூன்றும் அத்தியாயம்

## குடிகளின் முறையீடும் தேஜஸ்சிங்கின் பூஜையும்

தாவுத்கான் அடித்த ஜயபேரிகையின் முழக்கம், அந்த ஆற்றங்கரைக்கண் உள்ள ஊர்களில் எல்லாம் கேட்டது. அவற்றிலுள்ள ஜனங்கள், வேற்றரசன் எவனோ தங்கள் ஊர்மேல் படையெடுத்து வந்துவிட்டான் எனப் பயந்தனர். அவர்கள் தங்கள் தங்களுடைய பொருள்களை எல்லாம் பூமியில் பள்ளந் தோண்டிப் புதைக்கலாயினர். சிலர், தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் பரபரப்புடன் இருட்டறையில் ஒன்றாகச் சேர்த்து, அந்த அறையைப் பூட்டிக்கொள்வாராயினர். சிலர், தங்கள் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு வேற்றூருக்குப் பிரயாணமாயினர். சிலர், முறையோ! முறையோ! என்று கதறி, தங்களது கடன்காரரிடம் சென்று பொருள் கேட்டனர். இங்ஙனம் ஊர்களிலுள்ள ஜனங்கள் எல்லோரும் கலங்கி நிற்குங் காலையில், சததுல்லாகானும், பாளையக்காரருடன் சங்கராபரணி ஆற்றங்கரையில் வந்து சேர்ந்தனன்.

சேர்ந்ததும், திருவண்ணுமலைப் பாளையத்தைச் சேர்ந்த சுபங்கிதுரை "ஊர்களைக்கொள்ளையிட்டு வேண்டிய உணவுப்பொருள்களைக் கொள்வது நலம்" என நவாப்புக்குக்கூற, நவாப்பும் அதற்குச் சம்மதித்தான். பின்னர், சுபங்கிதுரை தானே மூவாயிரம் குதிரையாட்களுடன் புறப்பட்டுச் சில ஊர்களிற் சென்று கொள்ளை

யடிக்கலானன். அந்தக் கொள்ளையால், வீடுகளும் மாளிகைகளும் இடிந்துபோயின. ஊர்களில் உள்ள அழகான மண்டபங்களும் சிறு கோயில்களும் உருக் குலைந்தன. ஊரிலுள்ள ஜனங்களெல்லோரையும், சுபங் கிதுரை கைதிக ளாக்கினன். அவர்களுடைய பசு, மாடு முதலியன எல்லாம், நவாப்பின் சேனைக்கு உண வுப்பொருளாக உதவின. போர்வீரர்கள் ஒவ்வொரு வீட்டினுள்ளும் நுழைந்தனர். அவர்கள் அங்ஙனம் நுழைந்த போது, ஆங்கு நடந்த அநியாயத்தை என்ன என்று சொல்வோம்! அவர்கள் குழந்தை குட்டிகளு டன் இருக்கும் பெண்களையும், மணமாகாத பெண் களையும் பிடித்துக் கட்டி வதைத்தனர். இளங்குழவி களைத் துண்டமாக்கினர்; வீட்டினுள் உள்ள பெட்டி முதலானவற்றைச் சுக்கல் சுக்கலாக உடைத்தனர்; அவற்றின்கண் இருந்த வெள்ளி பொன் முதலாய நாணயங்களையும் நகைகளையுங் கொள்ளைகொண்டனர்.

குடிகள் எல்லோரும் நவாப்பின் ஆட்களுக்கு அகப் படாவண்ணம் தப்பிப்பிழைக்க, தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் ஓட்டம் பிடித்தனர். அவர்களுள், தமது மனைவிமாரை இழந்தோடினவர் சிலர்; மைந்தர்களைப் பிரிந்தவர் சிலர். இங்ஙனம், அவர்கள் ஓட்டம் எடுப் பதைக்கண்ட மற்றைய ஊர் ஜனங்களும், அவர்களால் விஷயம் உணர்ந்து, தாமும் ஓடத் தலைப்பட்டனர். அவர்கள் ஓடிவரும் ஊர்களில் உள்ள குடிகள் அனை வரும் அவர்களுடன் ஒன்ருகச் சேர்ந்து கூக்குரலுடன் செஞ்சிமாநகர் வந்தனர். ஜனங்கள் எல்லோரும் இருப் பதற்கும் இடம் இன்றி நெருங்கி, தேஜஸ்சிங்கின்

அரண்மனை வாயிலைக் குறுகி, "மன்னவர் மன்ன! எங்கள் குறையை யகற்ற எங்கள்முன் வாரீரோ! ஐயோ, ஊர்களையெல்லாம் நவாப்பின் சைனியங்கள் கொள்ளை யடிக்கின்றனவே! மனைவியைப் பிரிந்தோம்! மைந்தரைப் பிரிந்தோம்! வீடு போயது! பொன் ஒழிந்தது! பொருள் அழிந்தது! இனி யாங்கள் என்ன செய்வோம்! எப்படிப் பிழைப்போம்! நீதிநெறி அறிந்த நேயரே! நீர் வாரீரோ! வந்து எங்கள் துயர் களையீரோ!" என்று முறையிட்டனர்.

தேஜஸ்சிங், அந்தச் சமயத்தில் அரண்மனையில் இல்லை. அவன் அரங்கநாதர் கோயிலுக்குச் சென்றிருந்தான். குடிகள்வந்து முறையிடுவதை, மன்னவன் சிப்பந்திகள் கேட்டு வெளியே ஓடிவந்தனர். அவர்களைக் கண்டதும் குடிகள் எல்லோரும், "ஐயா, நமது நகரம் அழியப்போகிறது! பெருங்கேடு வந்துவிட்டது! நவாப்பினுடைய சைனியங்கள் ஊரை எல்லாம் கொள்ளையாடி வருகின்றன. நீங்கள் தயைசெய்து விரைந்து போய் மன்னனிடம் இவ் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றனர். சிப்பந்திகள், மன்னவன் அரண்மனையில் இல்லை என்றும், அவன் அரங்கநாதர் கோயிலில் பூசைசெய்து கொண்டிருக்கின்றனன் என்றுங் கூறினர். குடிகள் அதைக்கேட்டதும் அரங்கநாதர் கோயிலை வந்து சூழ்ந்து, கோவென முறையிட்டனர்.

அப்போதுதான் தேஜஸ்சிங் கடவுளுக்கு அருச்சனை முதலியன முடித்து, ஜபம் செய்துகொண்டிருந்தான். அவன் தெய்வபக்தி மிகுந்தவன். எந்த வேலையிருந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல், முத

வில் கடவுள் பூஜையைச் சரிவரச் செய்து முடிப்பான். அவனது பக்தியின் விசேஷத்தால், அந்த அரங்கநாதருடைய அருள் பூரணமாக அவனிடம் நிறைந்திருந்தது. அக்கடவுள் அவனிடம் நேராகப் பேசியிருந்தனர் என்றுஞ் சிலர் சொல்லுகின்றனர். அவ்விஷயம் எம்மட்டிலும் உண்மை என்பதை யாம் அறியோம். ஆனால், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் பழமொழியை அறிந்துளோம். மனிதர் உலகில் பிறந்தது, இனிப்பிறவாத மோக்ஷநிலையை அடைதற்பொருட்டேயாகும். அந்த மோக்ஷநிலை கடவுளின் அருள்பெற்றாலன்றி நமக்குக் கிடைக்காது. அந்த அருளைப்பெற நாம் கடவுளைப் போற்றவேண்டும். அங்ஙனம் போற்றும் அடியவர்களுடைய மனத்துள், கடவுள், அவர் நினைந்த வடிவுடன் விரைந்து சேருவர் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். அதனால் தேஜஸ்சிங்குடன் அரங்கநாதர் உருவுடன் வந்து பேசியும் இருக்கலாம். இனி தேஜஸ்சிங்கின் பூஜையைக் கவனிப்போம். அவன் தன்மனதைக் கடவுளிடத்தில் செலுத்தியிருந்ததால், வெளியில் குடிகளுடைய கூக்குரல் அவனுடைய காதிற் புகவில்லை. மனம் ஒன்றைப்பற்றி நிற்குமாயின், மற்றைய ஒன்றை அக்கணத்தில் நாடாதென்பது, மனோ தத்துவ சாஸ்திரிகளின் துணிபன்றோ? தேஜஸ்சிங் தங்களது முறையைக்கேட்டும் வாராதது கண்ட குடிகள், பரபரப்புடன் கோயிலினுட் புகுந்தனர். முறையோ! முறையோ! எனக் கதறினர். அப்போதுதான், தேஜஸ்சிங் தன் கண்களை விழித்து, கவலை

கொண்டு முறையிடும் தனது குடிகளைக் கண்டான். அவர்கள் முறைப்பாட்டைக் கேட்டான்; அடங்காக் கோபங்கொண்டான். நவாப்பினுடைய சேனைகள் குடிகளை வருத்தின என்றதைக் கேட்டதும், அவனுடைய மீசை துடித்தது. புருவங்கள் மேல் ஏறின. கண்கள் இரத்தம்போல் செந்நிறமடைந்தன. அவன் அவ்வளவு கோரத்துடன் தனது பற்களை நறநற என்று கடித்துக்கொண்டு, "ஆஹா! அந்த அற்ப மகம்மதியன் அப்படியா உங்களை - எனது அருமைக்குடிகளை வருத்தினன்? என் அருங்குடிகளே! நீங்கள் வருந்த வேண்டாம். அந்த நவாப்பை யான் பழிக்குப்பழி வாங்குகிறேன். அவனுடைய நாடு முழுவதையும் கொள்ளையிட்டு, அப்பொருளை எல்லாம் உங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கிறேன். பயப்பட வேண்டாம் நீங்கள். இனி உங்களுக்கு ஒரு குறையும் இல்லை.-ஹா! சற்றும் அச்சம் என்பதின்றி என்னிடத்திலேயோ, அவன் தன் கைவன்மையைக் காட்ட வந்தனன். பார்க்கிறேன் அவன் சமர்த்தை" என்று கூறி, உடனே அரண்மனைக்குச் சென்றான்.

அரண்மனை வந்ததும், தேஜஸ்சிங் தனது சிப்பந்திகளை அழைத்து, அரண்மனைக்கண் உள்ள தானியங்களை வருத்தமடைந்த குடிகளுக்குத் தருமாறு உத்தரவிட்டான். தனது சேனாவீரர்களை எல்லாம் வரவழைத்தான். உடனே மகமத்கான் ஒழிந்த மற்றைய சேனாதிபதிகள் அனைவரும் வந்தனர். அவர்களுக்



நகை வியாபாரி வேஷம் பூண்ட தாவுத்கான், அந்நிய நாட்டுச் சாமான்களை, தேசிங்குக்குக் காண்பித்தல்

கெல்லாம் தலைமை வகித்த மகமத்கானை, விரைவில் அழைத்துக்கொண்டு வரும்படி தேஜஸ்சிங் வழுதாஆருக்கு ஆள்விட்டான். மற்றைய வீரர்களுக்குப் படைகளை ஆயத்தப்படுத்துமாறு உத்தரவளித்தான்.

---

**மரகதவல்லி.**—நாவல்களுள் தலைமை வகிக்கும் இந்நூல் ப. சி. கோவிந்தசாமி ராஜா அவர்களால் இயற்றப்பட்டது. தாசில்தார் சுந்தரம் பிள்ளை, செல்வமும் அதிகாரமும் என்றும் இருக்குமென்னும் செருக்குடன் தம் மகளுக்கு வீட்டுவேலை கற்பியாது, கர்வமும் சோம்பலும் உண்டாக்கியதும், தம் மருமகனுடைய ஏழ்மைத்தனத்தினுல் அவனை அவமானஞ் செய்ததும், தாழ்ந்த உடைதரித்த காரணத்தினுல் தன்னைப் பெற்றவரைத் தந்தையென்று சொல்ல நாணியதும், மரகத வல்லி, செல்வச் செருக்கால் தன் புருஷனை ஆரம்பத்தில் அலட்சியம் செய்ததும், பின்னர் அவனுடைய நற்குண நற் செய்கைகளால் திருந்தி சுகப்பட்டதும், தெய்வசிகாமணிப் பிள்ளை உயர்ந்த உத்தியோகம் பெற்றதும், தன்னை நால்வர் அறிய அலக்ஷியம் செய்துவந்த தன் மாமனுர் உத்தியோகம் இழந்து கஷ்டப்படுவதாகச் செய்தி தெரிந்தபோது, ஒருவரு மறியாது உதவிசெய்ததும், இன்னும் பிற விஷயங்களும் சொற் சுவை பொருட்சுவையுள்ள நடையில் இனிமையாக எழுதப் பட்டிருக்கிறது. பெண்கட்கு நற்புத்தி, நன்மார்க்கம், பதி விரதா தர்மம் முதலிய நற்குணங்களை விவரிப்பதில் இதுவே உயர்ந்ததாகும். மூன்று அழகிய படங்களுடன் அணு 12.

## பதினான்காம் அத்தியாயம்

## மகமத்கானின் விவாகம்

மகமத்கான் தேஜஸ்சிங்கிடம் பொருள் பெற்று மணஞ் செய்துகொள்ள நிமித்தம், தனது பெற்றோரைக் கண்டு, தனது மன்னவன் கருத்தை அவர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள், வழுதாவூரில் பிரபல வர்த்தகராய் விளங்கிய குலாம் மஹமது என்பவரது பெண் அயாஷா என்பவளை அவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தனர். நாளும் குறித்தாயது. விவாகம் 1714-ம் வருடம் அக்டோபர் மாதம் 14-ம் தேதி என்று குறித்து, மகமத்கானின் பெற்றோர், உற்றாருக்கும் மற்றோருக்கும் கடிதம் விடுத்தனர்.

விவாக தினத்தன்று காலை, மகமத்கானின் மணத்தைச் சிறப்பிக்க, நாலா பக்கங்களினின்றும் ஜனங்கள் வந்து சேர்ந்தனர். மண வீடு மிகவும் அலங்காரமாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. அவ்வீட்டின் முன்பாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் அடங்கக்கூடிய பெரிய பந்தல் ஒன்று இடப்பெற்றிருந்தது. அந்தப் பந்தலின் காலுடன் வாழைமரங்கள் கட்டப்பெற்று, அவ்வாழை மரங்களின் குலையோடு, ஈச்சங்குலை, தென்னங்குலை முதலியனவும் அந்தப் பந்தற்காலில் கட்டப்பெற்று விளங்கின. அப் பந்தலின் கீழுள்ள இடம், வெள்ளிய மணலால் நிறைந்து, பலவிதமான பூஞ்செடிகளுடன் அழகு பெற்றது. வீட்டின் உட்புறத்தில், முத்துக்களாலும் புஷ்பங்களாலும் மண அறை ஜோடிக்கப்பெற்றிருந்தது. வெளியே பலவிதமான வாத்தியங்கள்

வரிசை வரிசையாக முழங்கின. விலையுயர்ந்த சரிகைப் பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிந்த மகம் மதியப் பெண்கள், முக்காடிட்டு முகத்தை மாத்திரம் ஒருவாறு திறந்துகொண்டு, அவ்வீட்டினுள் போவதும் வருவதுமாக இருந்தனர். அந்த ஊர் முழுவதிலும் - எங்குக்காணினும் ஜனக்கூட்டமும், வண்டிகளின் கூட்டமும் நிறைந்திருந்தன. மணத்தை முன்னிட்டு, அடிக்கடி வெடில் முதலிய பாண வேடிக்கைகளும் நடைபெற்றன.

மணவீட்டிற்கு அடுத்த வீட்டில், வந்தவர்களுக்குச் சமையல் ஆயத்தமாக இருந்தது. அவ்வீட்டின் எதிராக, பல பெரிய அண்டாக்கள் பொலவு சோற்றால் நிறைக்கப்பட் டிருந்தன. அந்தச் சோறு வெளியே வரும் ஏழைகளுக்குக் கொடுக்கும் வண்ணம் தயார் செய்யப்பெற்றது. அம்மணவீட்டின் வீதியாய் வருபவர் எல்லோரும், அந்தப் பொலவு சோற்றின் மணத்தை முகர்ந்து அப்படியே பிரமை கொண்டு அம்மணத்தின் செல்வாக்கைப் புகழ்ந்தனர். ஏழைகள் எல்லோரும், தங்களுக்கு விருந்து கிடைக்கப்போகும் மகிழ்ச்சியால், குதூஹலமுடையவராய், அவ்வீட்டை நெருங்கியிருந்தனர். அவர்களை விலக்கி மணத்தைக் காண வரும் தனவந்தர்களை மணவீட்டிற்குள் விடுவதற்குள் அங்கிருந்த காவலாளிகள் பாடு அதிக கஷ்டத்திற்குள்ளாயது. அப்பந்தலின் எதிராக, ஒரு சிறு பந்தல் இடப்பெற் றிருந்தது. அந்தச்சிறு பந்தலின்மேல் சில வாத்தியக்காரர்கள் இருந்து, நகார் அடித்து, சிறு குழலால் புபு, என்று ஊதிக்கொண்டிருந்தனர். அவர்களு

டைய வாத்தியம், மற்றைய நாகரிக வாத்தியங்களின் சப்தத்தையும் அடக்கிவிட்டது.

இங்ஙனம் வெளியில் ஆடம்பரமாக இருக்க, மண வறையின் எதிராகச் சில நடனமாதர்களும் ஆட்டக் கச்சேரி செய்திருந்தனர். அந்த அறையைச்சுற்றி ஒரு புறமாக ஆடவரும், மற்றொருபுறமாகப் பெண்டிரும் இருந்தனர். மகமத்கான் ஸ்நான முடித்து, சரிகை யாலும் புஷ்பத்தாலும் செய்த ஆடைதரித்து, மண அறைக்கண் வந்தான். பெண்வீட்டுக்காரரும் தங்கள் பெண்ணை வாத்திய முதலிய வரிசைகளுடன், அங்கு அழைத்துவந்தனர். மகமதிய குருக்கள், தங்கள் குரா னில் கூறிய முறைப்படி, மணவினையைத் தொடங்கி னர்.இடையில் செய்யவேண்டிய பலவித சடங்குகளும் நிறைவேறின. தாலி கட்டுவதன் முன், மகமத்கான் தனது குருக்களுக்குத் தான முதலியவை வழங்கி அவர்களது ஆசியைப் பெற்றான். குருக்கள், அவ னிடத்தில் தாலியை மந்திரித்துக்கொடுத்தனர்.மகமத் கான் அந்தச் சபையில் வந்திருக்கும் பெரியோர் களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, தன் மனைவியின் முன்பாக வந்து நின்றனன்.

அப்போது செஞ்சியிலிருந்து தேஜஸ்சிங்கால் விடப்பட்ட ஆட்கள் ஓடோடியும்வந்து மணஅறையில் புகுந்தனர். அவர்களை மகமத்கான் கண்டதும், தான் தாலிகட்டுவதை விட்டு, அவர்கள் வந்த விஷயத்தை விரைவுடன் விசாரித்தான். வந்த ஆட்கள், நவாப் தண்டெடுத்து வந்திருப்பதையும், தேஜஸ்சிங் தங்க ளுக்கு இட்ட கட்டளையையும் கூறினர். அதைக்

170646

கேட்டதும் மகமத்கான் தாலியைக் கீழேவைத்தனன். உடனே, அங்கிருந்த சபையோர்களை வணங்கி, "யான் இந்த க்ஷணமே செஞ்சிக்குப் புறப்பட வேண்டும். அரசனது கட்டளையை யான் மீறலாகாது. யான் வெற்றி யடைந்து இப்பெண்ணை மணம் செய்து கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறினன்.

மகமத்கான் கூறிய வார்த்தைகளைக்கேட்ட சபையோர் அனைவரும் கலக்கம் அடைந்தனர். அவர்கள் அவனுக்குச் சொல்வதொன்றும் அறியாராய்த் திகைத்துநிற்க, பெண் வீட்டுக்காரர் மிகவும் வருத்தத்துடன் மகமத்கான் பெற்றோரிடஞ்சென்று, 'எங்களை இப்படி மானபங்கம் செய்வது முறையோ?' என்று கேட்டனர். மகமத்கானின் தாய், அவர்களைச் சமாதானம் செய்து, தன் மகனிடம் வந்து, 'அப்பா! என்ன காரியம் செய்ய எண்ணினை? கையில் எடுத்த தாலியை உன் மனைவியின் கழுத்தில் கட்டாமல் கீழே வைப்பது நல்லதோ?' என்றனள்.

**மகமத்கான்** :—அம்மா யான் என்ன செய்வேன்! என்னுடைய வேலை அப்படிப்பட்டது. என்னை எந்த நேரத்தில் அரசன் அழைக்கிருனே அந்த நேரத்தில் அவசியம் யான் போகவேண்டும். மேலும், இப்போது என்னை மன்னவன் அழைக்கும் விஷயமோ மிகவும் முக்கியமானது. நான் அவசியம் போகத்தான் வேண்டும்.

**தாயார்**:—உன்னைப் போகவேண்டாமென ஒருவரும் தடை செய்யவில்லையே. இன்று மணச் சடங்கை முடித்து, நாளை நீ செல்ல லாகாதோ?

மகமத்கான்:—அம்மா! நன்றாய் இருக்கிறது நீங்கள் சொல்வது! பகைவன் தண்டெடுத்து வந்திருக்க, நான் மணத்தை முடித்துச் சந்தோஷமாக நாளைய தினம் போவதாவது! இதற்குத்தானே என்னை மன்னன் இத்தனை நாள் காத்துவந்தது? ஆபத்தில் உதவாத நான், அவனுக்கு உரியவன் ஆவேனோ?

தாயார்:—அப்பா! நான் சொல்வதைக் கேள். நீ அறியாமையால், இங்ஙனஞ் சொல்கிறாய். மண முடியாமல் போர்முகத்தைப் பார்ப்பது நல்லதல்ல. மார்பில் சந்தனமும், கையில் கங்கணமும் உடையவனாக இருக்கிறாய். இங்ஙனமே நீ போர் செய்யப்போவது வழக்கத்திற்கு விரோதமும், பெருந் தீங்குக்கு இடமுமாகும்.

மகமத்கான்:—இந்தச் சாஸ்திரங்களையெல்லாம் இப்போதெண்ணி ஆவதென்ன? அம்மா! நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்; என்னைத் தயை செய்து தடுக்கவேண்டாம். யான் அந்த நவாபை வென்று, சந்தோஷத்துடன் மறுபடியும் இவ்விடம் வந்து மணம் புரிந்துகொள்கிறேன்.

தாயார்:—கண்ணே! நீ இன்றே போவதாயினும் சரி; உன் மனைவிக்குத் தாலியைக் கட்டியாவது செல்.

மகமத்கான்:—அங்ஙனம் யான் தாலி கட்டுவதால், யான் அடையும் நன்மை என்ன? எதிரியை வென்று மகிழ்வுடன் வந்து, தங்கள் இஷ்டத்தின்படியே செய்கிறேன்—என்று கூறினன். ஆங்கு வந்திருந்த பெரியோர்கள் அனைவரும் அவனுக்

குப் பற்பல நியாயங்களை எடுத்துக் காட்டினர். அவன் அவற்றைக் கேளாது, ஒரே பிடிவாதமாக இருந்தான். கடைசியாக, அவனுடைய தந்தையும் அவனைப் பலவாறுகத் தடுத்துப்பார்த்தார். அவர்களுக்கெல்லாம் மகமத்கான் சமாதானங் கூறி, வந்த ஆட்களுடன் அப்போதே செஞ்சிக்குப் பிரயாணமாயினன்.

---

ஷண்முக விஜயம் அல்லது கந்தபுராணச் சுருக்கம்.—முருகனடியார்களிடம் அவசியம் இருந்தே தீரவேண்டிய அருமையான நூல். கண்ணைக்கவரும் 19 அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. அட்டை பைண்ட் விலை அணு 14.

## பதினைந்தாம் அத்தியாயம்

# தேஜஸ்சிங் ராணிபாயைப் பார்த்தல்

சததுல்லாகான், தான் வரும் வழியிலுள்ள ஊர்களை யெல்லாம் கொள்ளையிட்டு, அக்டோபர் மாதம் 16வ காலை செஞ்சியை முற்றுகை இட்டுக்கொண்டனன். தேஜஸ்சிங் தனது சைனியங்களை யெல்லாம் தயார் செய்துவிட்டு, அரண்மனையுட் சென்று யுத்தகோலம் கொள்ளலாயினன். அவன் தனது மார்பிற் கவசம் அணிந்து, வாளை யிடையிற் செருகிக்கொள்ளும் போது, அவனுடைய சிறிய தந்தை வந்து, "அப்பா தேஜஸ்சிங்! இன்றுமாத்திரம் நீ போருக்குச் செல்லாதே. நாளைய தினம் நீ செல்வாயாயின் வெற்றி பெறுவாய்" என்று கூறினர். தேஜஸ்சிங் அதைக் கேட்டதும் கோபங்கொண்டு, "தந்தையே! என்ன வார்த்தை சொல்லவந்தீர்? பகைவர் நமது நகரத்தில் வந்துவிட்டனர்; தாம் என்னை நாளைய தினம் போரிடச் செல் என்கிறீரே! நன்றாய் இருக்கிறது தாம் சொல்வது!" என்று கூறி யுத்த சன்னத்தனாயினன்.

தேஜஸ்சிங் அரண்மனையைவிட்டுப் புறப்பட எண்ணுகையில், அவனுக்குத் தன் மனைவியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயது. அதனால் அவன் தனது சிறிய தந்தையிடம் தனது மனைவியைப் பார்த்துப் போக உத்தரவளிக்கவேண்டும் என்று கேட்டனன். சிறிய தந்தை, "சோதிட சாஸ்திரத்தின்படி இன்னும் ஒருநாள் நீ உன் மனைவியைப்பார்த்தலாகாது. அங்ஙனம் நீ மீறிப் பார்ப்பதால் உனக்கு ஆபத்தே

முடிவாகும்" என்று கூறினர். அவருக்கு தேஜஸ்சிங் தக்க சமாதானங்களைக் கூறி அவரிடம் விடைபெற்று, தனது மனைவி இருக்கும் அரண்மனையை அடைந்தான்.

அந்த அரண்மனையின்கண்ணிருந்த தோழிகள் அரசனைக் கண்டதும் அவனைப் பணிந்து நின்றனர். தேஜஸ்சிங், "உங்கள் தலைவியைக் காணும்பொருட்டு யான் வந்திருப்பதாக அவளிடம் போய்ச் சொல்லுங்கள்" என அவர்களிடங் கூறினன். தோழிகள் ராணிபாயிடம் சென்று மன்னனது வரவைக் கூறினர். அவளுக்குப் பகைவர் முற்றுகையிட்ட விஷயமே தெரியாது. அவள் தனது நாயகனது வரவைக்கேட்டதும் அதிசயமுற்றவளாய், "என்றும் நம்மைத் தேடி வராத அவர் இன்று, புதுமையாக வரக் காரணம் என்ன!" என்று யோசனை செய்ய லாயினள். அவளுக்கு சோதிடர் குறித்ததாக அவள் மாமியார் கூறிய நாள் ஞாபகத்திற்கு வந்தது. அந்த நாளை அவள் கணக்கிட்டனள். அதனால் அவள் அன்றொழிந்த மறு நாளே தனது நாயகனைக் காண்பது தகுதியென எண்ணி, தன் நாயகனது வரவைக்கூறிய தோழிகளிடம்,"நாளைய தினம் மன்னரைப் பார்ப்பது நலமாகும்" என்று கூறினள். தோழிகள் அவ்விஷயத்தினை மன்னனிடம் தெரிவிக்க,அவன், "யான் இன்று போர்க்கெழுவதால், இன்றே அவளைப் பார்த்துச்செல்ல எண்ணினேன் என்பதை அவளிடம் தெரிவியுங்கள்" என்று உரைத்தனன். தோழிகள் வந்து அதனைத் தமது தலைவிக்கு உரைத்தனர். போர் என்னும் வார்த்தை கேட்ட ராணிபாய் கலக்கம் அடைந்தவளாய், தனக்கெதிராக

ஒரு திரையிட்டு, அந்தத் திரைக்கப்புறமாகத் தனது நாயகனுக்கு ஆசனம் இடும்படி தனது தோழிகளுக்குக் கட்டளையிட்டு, அவனை அழைத்துவரும்படியாகக் கூறினள்.

தேஜஸ்சிங் வந்து திரைக்கு எதிராக இடப்பெற்ற ஆசனத்தில் அமர்ந்தான். ராணிபாய், திரைமறைவாக இருந்து, "பிராணநாதா! திடீரென்று தாங்கள் போருக்குப் புறப்படக் காரணம் என்ன?" என்று கேட்டனள்.

தேஜஸ்சிங் :—கண்ணே! நீ என்னைப் பிராணநாதா என்று அழைக்க, நான் காதார அதனைக் கேட்ட இத்தினம் அன்றோ நற்றினமாகும். அஃதிருக்கட்டும்; யான் போருக்கெழுந்த காரணத்தை இதுவரை நீ அறியவில்லையா?

ராணிபாய்:—இல்லையே; அறிந்தால் தங்களைக் கேட்பேனோ?

தேஜஸ்சிங் :—அப்படியா! கண்ணே! அந்த அற்பனாகிய ஆறுகாட்டு நவாப், நமது செல்வத்தைக் கண்டு பொறுமை கொண்டு, நம்முடைய கோட்டையை முற்றுகை போட்டுக்கொண்டனன். யான் அரண்மனைவிட்டுப் புறப்பட்டபோது, உன்னைக்கண்டு செல்ல எண்ணங்கொண்டேன். கண்ணே! நீ என் முன்வந்து பேசலாகாதா?

ராணிபாய் :—பிராணநாதா! தங்களுக்குத் தெரியாத விஷயம் என்ன யான் புதிதாய்ச் சொல்லப்போகிறேன்! பெரியோர்கள், நாம் பார்த்துக்கொள்ளலாகாது எனக் குறித்த நாள், இன்றோடு முடிவாகி

றது. அவர்கள் வார்த்தையை நாம் மீறுவது நலமாகுமா?

தேஜஸ்சிங் :—ஆம், உண்மையே! யான் உன் முகத்தை இத்தனை வருடங்களாகப் பார்க்கவில்லை யாயினும் இன்று உன் குரலொலியைக் கேட்டேன். அதுவே எனக்குப் போதுமானது. நான் போய்வருகிறேன்; எனக்கு விடைகொடு.

ராணிபாய் :—பிராணநாதா! இந்த வார்த்தையைத் தெரிவித்து என்னை வருத்தத்திற்குள்ளாக்கவோ இங்கு வந்தீர். யான் சந்தோஷமாக நாளைய தினம் தமது முகத்தைக் கண்டு மகிழலாமென்று இருந்தேனே! இப்போதுதானு தாங்கள் போரை வைத்துக்கொள்ள வேண்டும்? பிராணநாதா! தாமே யோசித்துப் பாருங்கள்; என்னைப்போன்ற துர்ப்பாக்யவதி இந்த உலகில் வேறு ஒருத்தி இருப்பாளோ? மணந்து இத்தனை வருடமாகியும், இன்னும் தங்களைக் காணும் பாக்கியத்தைப் பெறவில்லையே. பிராணநாதா! இவற்றை யெல்லாம் எண்ணியாவது, தாம் போரை நிறுத்திக்கொள்ளலாகாதா!

தேஜஸ்சிங் :—ராணிபாய்! என்ன வார்த்தை சொன்ணுய்? நான் எப்படிப் போரை நிறுத்தமுடியும்? கண்ணே! நீ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் என் மனப்பாறையைத் தாக்கும் உளிபோல் உள்ளன. யான் என் செய்வேன்! இறைவன் விதிப்படி அன்ரோ உலகில் ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது? நாம் நினைப்பதுபோல், எக்

காரியமும் நடப்பதில்லை. கண்ணே ! வருந்தாது எனக்கு விடையளிப்பாய்.

ராணிபாய் :—தாங்கள் மனம் வந்தும் என்னிடம் போருக்குச் செல்ல விடை கேட்கிறீரே. எப்படித்தான் பாவி நான் தங்களைப் போருக்குப் போங்கள் என்று கூற மனம் துணிவேன். பிராணநாதா! அடியாள் பொருட்டு அந்த நவாபினிடம் சமாதானம் செய்துகொள்ள லாகாதா ?

தேஜஸ்சிங் :—கண்ணே ! என்ன சொல்லினை ? நானே அந்த அற்பனிடம் சென்று சமாதானம் செய்துகொள்ளவேண்டும்? அவனை ஹதம் செய்துவா என்று கூறாமல், சமாதானம் செய்துகொள் என்று கூறினையே ! யான் வருகிறேன்.

ராணிபாய்:—பிராணநாதா! என் சொல்லைக்கேளுங்கள். அப்படித் தாம் போர் செய்யவேண்டுவது அவசியமென அறிந்தால், என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். நான் உங்களுக்குத் துணையாக இருக்கிறேன்.

தேஜஸ்சிங்:—என்ன ! என்ன !—நீயும் வருகிறாயா ! ராணிபாய் ! போர்முகத்தில் வரலாமா நீ ? என்ன ஒன்றும் அறியாதவள்போல் பேசுகிறாயே !

ராணிபாய்:—பெண்கள் போர்முகத்தில் வருவதில்லையோ ? நமது குலத்திற் பிறந்த வீரத்தாய்மார், போர்முகத்தில் தங்கள் நாயகருக்கு உதவிசெய்ததில்லையா ? தங்களுக்கு என்னை அழைத்துக் கொண்டுபோக மனம் இல்லை என்று கூறும்.

தசாதனுக்கு, சம்பராசுர யுத்தத்தில், அவனது மனைவி கைகேயியன்றோ சாரத்யம் செய்தது?

தேஜஸ்சிங்:—நீ கூறுவன யாவும் உண்மையே. இந்த அற்ப யுத்தத்திற்கு நீ ஏன் வரவேண்டும்? இதோ ஒரு நொடியில் அப்பகைவரை ஹதஞ் செய்து வருகிறேன்; எனக்கு விடைகொடு.

ராணிபாய்:—பிராணநாதா! ஆனால் யான் சொல்வதைத் தயைசெய்து கேளுங்கள். தங்களை யான் வீர சிகாமணி என்று எண்ணி மணஞ் செய்துகொண்டேன். ஆதலால் தாங்கள் இந்தப் போரில் மார்பில் பட்ட அம்புடன் என்னை வந்து காணவேண்டும். முதுகிற்பட்ட அம்புடன் என்னைக் காண வந்தீராயின், மீண்டும் இவ்வரண்மனை வாயில் தங்களுக்கு இடங்கொடாதபடி கதவைத் தாளிட்டுத் தீக்கிரையாவேன். இது சத்தியம்; சென்று ஜயக் கொடி நாட்டும்.

என்று கூற, தேஜஸ்சிங் அதைக்கேட்டு, இவள் "நாட்டி வா" என்று சொல்ல மறந்ததால், ஏதோ பெருந்துயர் உண்டாகும் என்று மனம் கலங்கினன். எனினும், அவனுடைய திடபுத்தியால், தன் கலக்கத்தை ஒருவாறு ஒழித்து "கண்ணே! யான் வருகிறேன்" என்று கூற, ராணிபாய், 'பிராணநாதா! தங்கள் முக அழகைப் பார்க்கும் பாக்கியம் பெறவில்லையாயினும், தங்கள் காத்து அழகை யாவது பார்க்கத் திருவுளங் கொள்ளலாகாதா?" என்று வருத்தத்துடன் கேட்டனள். தேஜஸ்சிங் உடனே அத் திரையைத் தன் கைவாளினால்

கிழித்து, அதன் வழியாய்த் தன் கையை அவள் எதிராக நீட்டினன். ராணிபாய் அவன் கரத்தைக் கண்டு, "இந்தக் கையே இவ்வளவு அழகுடன் இருக்கிறதே! இன்னும் தங்களுடைய முகம் எவ்வளவு அழகுடன் இருக்கும்!' என்று கூறி, அந்தக் கரத்தை முத்தமிட்டனள். அப்போது அவள் கண்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகியது. அந்த நீரில் சிலதுளி தேஜஸ்சிங்கின் கரத்தை நனைத்ததால், அதை அறிந்த அவன், 'ராணிபாய்? என்ன காரியம் செய்தனை நீ? சுத்த க்ஷத்ரிய குலத்திலுதித்த தேஜஸ்சிங்கின் மனைவியாகிய நீயோ இப்படிக் கண்ணீர் விடுவது?' என்று கூறித் தன் கையை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு வெளியே வந்தனன்.

---



தேஜஸ்சிங், திரையைக் கை வாளினுல் கிழித்து,
தன் கையை, இராணிபாய்க்கு எதிரில் நீட்டுதல்

பதினாறும் அத்தியாயம்

## செஞ்சியின் சிதைவு

தேஜஸ்சிங், தனது சைனியங்களிருக்கும் இடத்திற்கு வந்தனன். அப்போது வீரர்கள் எல்லோரும் பயமற்ற முகத்துடன, 'ராஜாவுக்கு ஜயம் உண்டாகுக' என்று மும்முறை கூறிக் குதூகலித்தனர். அவர்களுக்கு, போர்செய்யப் போகிறோமே என்ற அச்சம் சிறிதுமில்லாம லிருந்தது. அவர்கள் மத்தியில் தேஜஸ்சிங் வந்து நின்று, "எனதரிய வீரர்களே! நீங்கள் எல்லோரும் ராஜபக்தி மிகுந்தவர்கள் என்பதை யானறிவேன். உங்களிடத்தில் சிறிதளவேனும் பயமில்லை என்பதும் எனக்குத் தெரியும். எனினும், யான் என் கடமைப்படி சில சொல்லப் போகிறேன். அவற்றை நீங்கள் சாவதானமாகக் கேட்டு, அவற்றின்படி நடப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். இப்போது நமது செல்வத்தைக் கண்டு பொறாமைகொண்ட ஆறுகாட்டு நவாப் நம்மீது போருக் கெழுந்தனன். ஆதலால், நாம் அவனுடன் செய்யப் போவது தரும யுத்தமாகும். வீரர்களுக்குப் போரே ஆபரணம் என நமது நூல்கள் கூறுகின்றன. ஆதலின் நாம் எல்லோரும், நம்முடைய நாடு மகமதியரின் வசப்படாதிருக்கக் கடைசிவரையிலும் போர்செய்தல் வேண்டும். நமக்கு ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. போரில் வெற்றி கொண்டால், வெற்றி வீரர்கள் என்று புகழப் படுவோம்; இறந்தால் வீரசொர்க்கத்தை அடை

வோம். நாம் போரில் பகைவருக்கு இளைக்காது போர்செய்து இறந்தாலும் புகழே; இருந்தாலும் புகழே. ஆனால், இடையே பயந்து முதுகுகாட்டி யோடுவோன் வீரன் அல்லன். அவன் வீணனே ய்ாவன். ஆதலால், எனதருமை வீரர்களே! உங்களுக்கு இப்போரில் எத்தகைய துன்பம் நேரினும் அவற்றைப் பொருட்படுத்தாதீர்கள். உங்களுடைய தேசத்தின் பொருட்டு உங்களுடைய உயிரைக் கொடுங்கள். வீரர் களாகிய உங்களுக்கு யான் மேலும் சொல்லவேண்டுவ தொன்றும் இல்லை. ராஜத்துரோகி மீளா நரகத்திற்கு ஆளாவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். யான் உங் களையே நம்பி உள்ளேன். நீங்களே எனக்குப் பெருந் துணைவர்கள். தைரியமுடையவர்களாய் இருங்கள். பகை வரை வாட்டும் வழியைத் தேடுங்கள்...'' என்று சொல் லிக்கொண்டிருக்கையில், மகமத்கான் மணக்கோலத்து டன் அவ்விடம் வந்தான்.

தேஜஸ்சிங், மகமத்கானை மணக்கோலத்துடன் கண்டு, "மகமத்கான்! என்ன காரியம் செய்தனை? உன்னை யார் இந்தக் கோலத்துடன் வரக் கூறியது? அது இருக்கட்டும், மணம் முடிந்ததோ'' என்று கேட் டான். மகமத்கான், "மன்ன! யானோ போர் எனக் கேட்டும் மணமுடித்து வருவேன்! கடவுள், அப்பெண் ணுடன் ஆறுகாட்டு நவாபை வென்று, அவனுடைய பெண்களையும் மணஞ்செய்து கொள்ளுமாறு என் விவாகத்தை நிறுத்தி வைத்தனர். புறப்படுங்கள், போவோம்'' என்றனன். தேஜஸ்சிங் அதைக் கேட்ட

தும் அதிக கோபங்கொண்டான். "மகமத்கான், நான் விவாகம் என்பதை மறந்தன்றோ ஆட்களை அனுப்பினேன்! அப்படி நான்தான் அனுப்பினாலும், நீ வரலாமா? நீ கையில் கட்டிய கங்கணத்தையும் அவிழ்க்கவில்லை! மார்பிலுள்ள சந்தனம் அப்படியே இருக்கிறது! இப்படி நீ போருக்கு வருவது துர்ச்சகுனம் என்பதை நீ அறியாயா?" என்று கூறினன். மகமத்கான், தேஜஸ்சிங்கைச் சமாதானம் செய்து, 'துர்ச்சகுனமாவது, நற்சகுனமாவது! புறப்படும், போவோம். இதோ ஒரு நிமிஷத்தில், நவாபைச் சிறைபிடித்துக் கொண்டு வருகிறேன் பாரும்' என்று கூறி, ஆயுதசாலையிற் சென்று, போர்க்கோலங் கொண்டு மீண்டும் வந்தனன்.

தேஜஸ்சிங், மகமத்கானது ராஜ விசுவாசத்தைக் கண்டு மகிழ்ந்து, மீட்டும் தனது சைனியங்களுக்கு மகமத்கானிடமிருக்கும் ராஜவிசுவாசத்தைப் புகழ்ந்து பேசினன். மகமத்கான், தனது மன்னனை நோக்கி வந்து, 'தாம் இப்போது இவ்விடத்திலேயே இருங்கள். யான் சென்று நவாபின் சேனைகளைச் சூறையாடி வருகிறேன்' என்றனன். தேஜஸ்சிங் அவனது தைரியத்தைக்கண்டு, 'அப்பா மகமத்கான்! நீ கூறியபடி உன் வன்மையைக் காட்டிவருவாய் என்பது எனக்குத்தெரியும். என்றாலும், உனக்குத் துணையாக நான் அருகில் இருந்தால், உனக்கு மேலும் திடம் உண்டாகும்' என்று கூற, மகமத்கான், 'மன்ன! அற்பனும் ஆறுகாட்டு நவாபிடம் போர் செய்ய உங்களை யான் உடன்கொண்டு செல்லுதல் எனக்குப் போவமானம்

ஆகும். எனக்கு விடைகொடுங்கள். இந்த க்ஷணத்தி லேயே அவனது சைனியங்களைத் துவம்சம் செய்து மீள்கிறேன்' என்றான். தேஜஸ்சிங் அவனுடைய இஷ்டத்தின்படி சைனியங்களை அவனுடன் அனுப்பினான். மகமத்கானும், தனது போர்வீரர் மத்தியில், நக்ஷத்திரங்களின் இடையே விளங்கும் முழுமதிபோல விளங்கி, நவாபின் பகையை முடிக்கச் சென்றான்.

பாளையக்காரர் எல்லோரும், மகமத்கானின் வரவைக்கண்டு அஞ்சி, அவனது பிரதாபங்களை நவாபிடங் கூறினர். அதைக் கேட்ட நவாப், தனது புதிய சேனாதிபதியாகிய தாவுத்கானுக்கு மகமத்கானின் வீரச் சிறப்பைக் கூறினன். தாவுத்கான், மகமத்கானை அலக்ஷ்யமாக எண்ணி, தனது சைனியங்களை அணி அணியாக வகுத்தனன். என்றாலும், அவனுக்கு மகமத்கான் விஷயத்தில் சிறிது பயமும் இருந்தது. அதனால் அவன் கருடயூகம் வகுத்து, அந்த யூகத்தின் உடலில் தான் நின்றுகொண்டனன். அதற்கப்பால், நவாப் சில வீரருடன் நின்றான். மகமத்கான், எதிரியின் சேனை கருடனைப் போல் வளைந்திருப்பதை எண்ணி முதலில் தன் சேனைகளை மூன்று பாகமாக்கி, ஒரு பாகத்தை அந்த யூகத்தின் வலது பக்கத்திலும் ஒரு பாகத்தை அதன் இடது பக்கத்திலும் எதிர்க்க விட்டு, மற்றைய பாகத்தின் மத்தியில் தான் நின்று அந்த யூகத்தின் மத்திய பாகத்தைச் சிதைக்க லாயினன். அவன் செய்த யுக்தியின் வன்மையால், எதிரியின் சேனை பஞ்செனப் பறந்தது. தாவுத்கான்

மகமத்கானின் திறமையை யறிந்து மற்றுமுள்ள சைனியங்களைச் சக்கரயூகமாக வகுத்தனன். அதனை மகமத்கான் தனது சேனைகளுடன் வட்டமாகச் சூழ்ந்து, கொல்லு கொல்லு வென்று கொன்று தீர்த்தனன். அப்போது அவனது பராக்கிரமத்தைக் கண்ட நவாபின் சைனியம் ஓடத் தலைப்பட்டது. பாளையக்காரரும் ஓட்டம் எடுத்தனர். நவாபும், தான் இருக்கும் இடமும் தெரியாதபடி, ஒரு புதரில் போய் மறைந்து கொண்டனன். மகமத்கான், பகைவர்கள் புறங்காட்டி யோடுவதைக்கண்டு குதூகலம் அடைந்தவனாய்த் தனது சைனியங்களுடன் ஜய கோஷஞ்செய்து அப்பகைவரை நாசஞ்செய்ய அவர்களைப் பின்பற்றி ஓடினன். தாவுத்கான், தனக்கு நேர்ந்த அவமானத்தால் செய்வகை யறியானாய்த் திகைத்து, கடைசியில் மகமத்கானை வஞ்சகமாகக் கொல்ல, பிணங்களுடன் தானுமோர் பிணமெனப் படுத்தான். மகமத்கான் அவன் படுத்திருக்கும் இடமாக நெருங்கி ஓடியபோது அவன் சில வெடிகளைக் கிளப்பினன். அவற்றுள் ஒரு குண்டு மகமத்கானின் பிடரியிற்பட்டது. மற்றொன்று, அவன் பின்னால் திரும்பிப்பார்த்ததால் அவனுடைய முகத்திற் பாய்ந்தது. அதனால், மகமத்கான் குதிரைமேலிருந்து பிணமெனக் கீழே வீழ்ந்தனன்! அவன் இறந்துபடவே தாவுத்கான் எழுந்து, தனது சேனைகளைத் துரத்தியோடும் தேஜஸ் சிங்கின் சேனைகளைத் தனது கைத்துப்பாக்கி கொண்டே பின்னிடச் செய்தான். நவாபின் சேனைகள், தங்களது சேனாதிபதியின் வீராவேசத்தைக்

கண்டு மறுபடியும் ஒன்றுசேர்ந்து செஞ்சிவீரரை எதிர்க்க வந்தன.

செஞ்சிவீரருள் சிலர், தமது தலைவனாகிய மகமத்கான் இறந்ததுகண்டு தேஜஸ்சிங்கிடம் ஓடோடியும் வந்து மகமத்கானுடைய வீரச்செயலையும், அவனைப் பகைவர் வஞ்சகமாகக் கொன்றதையும் கூறினர். தேஜஸ்சிங், மகமத்கான் இறந்ததால் துக்கமும், வஞ்சகமாகப் பகைவர் அவனைக் கொன்றனர் என்பதைக் கேட்டுக் கோபமுங் கொண்டு, தானே போருக்கெழுந்தனன். அவன் வந்ததை அறிந்த நவாபின் சைனியங்கள் அஞ்சி ஓடப்பார்த்தன. அவற்றைத் தாவுத்கான், சுரங்கவழியிருக்கும் ஆலமரத்தருகே கொண்டுவந்து சேர்த்து, செஞ்சிக்கோட்டைமீது பீரங்கிகளைப் பிரயோகிக்க லாயினன். தேஜஸ்சிங், யாரோ ஒரு வஞ்சகனால் தனது உளவு வெளிப்பட்டிருக்கிறதென்று மேலுங் கோபங் கொண்டவனாய், அந்தச் சேனையைத் தனது சேனைகளுடன் சென்று சூழ்ந்து கொல்லத் தொடங்கினன். அவன் சமீபத்தில் வந்து விட்டதால், பீரங்கிச் சண்டை பிரயோசன மற்றதாய்ப் போயது. அதனால் தாவுத்கான் தனது சைனியங்களை ஈட்டிகொண்டு சண்டை செய்யுமாறு ஏவினன். தேஜஸ்சிங்கின் பலத்தால், அவனுடைய வீரர்கள் அஞ்சாது பகைவரைக் குவியல் குவியலாகக்கொன்று பல பிணக்குவியல்களை உண்டுபண்ணினர். தனது சைனியங்கள் பலங் குறைந்து ஓட்டம் எடுக்கும் நிலைமையில் இருப்பதைக் கண்ட தாவுத்கான், அவர்களுக்கு வேண்டிய தைரியமொழி கூறினன். அதனைக்கேட்ட தேஜஸ்சிங்

முதலில் அவனைக் கொல்ல வேண்டும் என்று அவன் பக்கமாகத் திரும்பினன். அதை அறிந்த தாவுத்கான் தேஜஸ்சிங்கின் கைக்ககப்படாதபடி ஓடினன். அவன் ஓடவே, அவனுடன் அவனுடைய சைனியங்களும் ஓடத்தலைப்பட்டன. தேஜஸ்சிங், தாவுத்கானை விடாமல் அவனைப் பின்பற்றி ஓடும்போது, வழியில் பல பாளையக்காரரை வெட்டிச் சாய்த்தனன். நவாப், தனக்கு அநர்த்தம் வந்துவிட்டதென்று பயந்து, தேஜஸ்சிங்கிடம் சமாதானத்திற்காகத் தோன்றமல் லண்ணுவை அனுப்பினன். தோன்றமல்லண்ணு அவனிடம் வந்து, "நவாப், சமாதானமாக வேண்டுகிறார். தாங்கள் கேட்கும் எல்லா நஷ்டங்களையும் தரச் சித்தமாக இருக்கிறார்" என்றனன். தேஜஸ்சிங் அதைக்கேட்டு நகைத்து, "எனதாருயிர் நண்பனும் மகமத்கானை உனது நவாப் கொடுப்பானோ? அந்த அற்பனுக்கு இப்போதுண்டான எண்ணம் அப்போதே ஏன் உண்டாகலாகாது? இப்போது இளைத்துப் போனதால் சமாதானம் என வந்தானோ? யான் சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ளேன். ஒன்று, ஆறு காடாவது எனக்குச் சுவாதீனமாக வேண்டும்; அல்லது நானாவது சாகவேண்டும்" என்று கூறினன்.

தோன்றமல்லண்ணு நவாபிடம் வந்து, தேஜஸ்சிங் கூறிய விஷயங்களைத் தெரிவித்தனன். அதற்குள் தேஜஸ்சிங், நவாபின் சைனியங்களை எல்லாங் கொன்று நவாபையே தேடி வந்தனன். அந்த வழியில் தாவுத்கான் ஒரு மரத்துடன் மரமாய் மறைந்திருந்தான். அவனைத் தூரத்தில் வரும் தேஜஸ்சிங் கண்டு அந்த

மரமோரமாக ஒன்றும் அறியாதவன் போல் வந்து, உடனே தன் குதிரையினின்றும் கீழே குதித்தான். தாவுத்கான் அதை அறிந்து தனது கைத்துப்பாக்கியை அவன் எதிராக நீட்டினன். தேஜஸ்சிங், அவன் கையை மேலுக்குயர்த்திப் பிடித்து, அவனுடைய துப்பாக்கியாலேயே அவனைக் கொன்றனன். தாவுத்கான் இறந்துவிட்டதைத் தூரத்திலிருந்து அறிந்த நவாபின் வீரர்களுட் சிலர் நவாபிடம் ஓடி, "தாவுத்கான் இறந்தனன்" எனக் கூறினர். சததுல்லாகான் அதைக் கேட்டதும் அச்சங்கொண்டவனாய் ஒரு நாகதாளிக் கள்ளிப்புதரில் போய் மறைந்துகொண்டனன்.

கி. பி. 1714-ஆ அக்டோபர்மீ பதினெட்டாம் தேதி பிற்பகல், தேஜஸ்சிங் தனக்கு மேலும் பகைவர் இல்லாதது அறிந்து தனது நண்பன் மகமத்கானுடலைத் தேடிச் சென்றான். அங்கு மகமத்கான் மூக்கிலும் வாயிலும் ரத்தம் வழிந்தோட வீழ்ந்து பிணமாய் இருந்தான். அவனைக் கண்டதும் தேஜஸ்சிங் ஓ என்று கதறி அழுதான். அப்போது அவனெதிராக, யூசப்கானைத் தாதேகான் என்பவன் துரத்திக் கொண்டு வந்தான். யூசப்கான், மிகவும் விரைவாக ஓடியதால், தாதேகானால் அவனுடைய ஓட்டத்தைப் பிடிக்க முடியவில்லை. அதனால் அவன் தனக்கு எதிராக இருக்கும் தேஜஸ்சிங்கைப் பார்த்து, உரத்த குரலுடன், "அரசே! அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்; அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினன். அதனைக்கேட்ட தேஜஸ்சிங், யூசப்கான் ஏதோ சூது செய்திருக்கிறான் என்று எண்ணி, அவனைப்

பிடித்துக் கொண்டான். யூசப்கான், இனி உயிர் பிழைப்பது அரிதெனத் தெரிந்து, "அரசே! என் குற்றத்தைத் தாம் மன்னிப்பீராயின், உங்களுக்கு ஒரு உண்மையை வெளியிடுகிறேன். தயைசெய்து என்னை மன்னியுங்கள். யான் என் அறியாமையால், தாவுத்கானுக்கு நமது ஊரின் உளவுகளை உரைத்தேன். அதை எப்படியோ தாதேகான் அறிந்து, என்னைக் கொல்ல அதோ வருகிறான்" என்றான். அதைக் கேட்டதும் தேஜஸ்சிங்கிற்குப் பெருங்கோபம் உண்டாயது. எனினும், அவன் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, "நீ உண்மையை வெளிப்படுத்துவதாகக் கூறினையே, அவ்வுண்மைதான் என்ன? சொல்" என்று கேட்டான். அப்போது யூசப்கான், "அரசே! தாவுத்கானை யாரோ என்று தாம் எண்ணிவிட்டீர். அவனுடன் யான் நேற்றுப் பேசியபோது, அவன் தனது தாயார் பெயர் சாண்ட்பீபி என்று கூறினன். அந்த சாண்ட்பீபி என்பவர் தமது சிற்றன்னையாகும். தாவுத்கான், தமது சகோதரன்" என்று பூர்வத்தில் நடந்த விஷயத்தை எல்லாம் தேஜஸ்சிங்கிடம் சொல்லும்போது, தாதேகான் அவனை நெருங்கித் தன் கத்தியால் வெட்டிச் சாய்த்தனன். தேஜஸ்சிங் தன்னிடத்தில் அடைக்கலம் என்று அடைந்தவனைத் தாதேகான் கொன்றனனே என்று கோபித்து அவனை அந்த க்ஷணமே தன் கத்திக்கு இரையாக்கினன். தாதேகான், உயிர்போகும் தருணத்தில், "அரசே! யான் தங்களுக்குத் துரோகம் செய்தவனை வெட்டியதற்காகத் தாம் என்னைக்கொன்று வீழ்த்தினீர். இது என்ன நியாயம்?

ஆம்! உங்களை நோவதால் பயனில்லை. என் பாவமே உங்களை அவ்வண்ணம் செய்ய ஏவியது. நான் பூசப் காளை முன்னம் துரோகம் செய்தேன். அதன் பலனை இப்போது அனுபவித்தேன்'' என்று சொல்லிக்கொண்டே தன் உயிரைவிட்டான். தேஜஸ்சிங், அவன் இறக்கும்போது கூறிய வார்த்தையை எண்ணி மிகவும் வருந்தினன். தன் கையால் தனது சகோதரன் மடிந்ததையும், தன்பொருட்டுத் தனது உயிரினும் இனிய நண்பன் உயிரிழந்ததையும் நினைத்து, தன் நிலைமையை மறந்து, பைத்தியம் பிடித்தவனுய், தன் ஆடைகளையும் பிறவற்றையும் கிழித்தும் அவிழ்த்தும் போட்டு அழத்தொடங்கினன். அவன் மகமத்கானைக் கட்டிக்கொண்டு சிலநேரம் அழுதனன். சிலநேரம் குதித்துக் குதித்துக் கூத்தாடினன். சிலநேரம் பாடினன்; ஆடினன்; பக்ஷிகளைப்போல் கூவினன். கடைசியாக அவன் தனது கைத்துப்பாக்கியைப் பார்த்தான். அதைக் கையில் எடுத்தான். அப்போது அவனுடைய செயலை எல்லாம் தூரத்திலிருந்து கண்ட சுபங்கிதுரை, தனது கைத்துப்பாக்கியால் அவனைக் கொல்ல எண்ணி, குறி பார்த்து அவனைச் சுட்டனன். அதற்கு முன்பாகவே தேஜஸ்சிங் தனது கைத்துப்பாக்கியைக் கொண்டு தானே சுட்டுக்கொண்டனன். சுபங்கிதுரையின் குண்டு அவன்மேற் படவில்லை. எனினும், தான் சுட்டதும் அவன் கீழ் வீழ்ந்ததால், தாமே அவனைக் கொன்றதாக எண்ணி, அவன் ஓடோடியும் வந்து நவாபிடம் தன் வீரச்செயலைக் கூறினன்.

நவாப், சுபங்கிதுரையைப் புகழ்ந்து, தனது சைனியங்களை ஒன்று சேர்த்துக்கொண்டு செஞ்சிக்கோட்டையினுட் புகுந்தான். அவன் அதில் உட்புகுவதற்கு முன்னரே, தேஜஸ்சிங்கின் வீரருள் சிலர் ராணியாரிடம் சென்று, தேஜஸ்சிங் தற்கொலை செய்துகொண்ட விஷயத்தைக் கூறினர். ராணிபாய் அதைக் கேட்டதும், தனது நாயகன் வெற்றிகொண்டே நண்பனின் பொருட்டு உயிர்விட்டார் என்பதை அறிந்து, வந்து கூறிய வீரர்களால் ஒரு பெரிய தீக்குழியை உண்டு பண்ணி, அதில் விழ அத்தீயை வலம் வந்தனள். அப்போது நவாப் சில வீரர்களுடன் அரண்மனையுட் புகுந்து ராணிபாயிடம் வந்தனன். ராணிபாய் அவனைப் பொருட்படுத்தாமல், அக்குழியை வலம் வந்து முடித்து அதில் விழப்போகும் தருணத்தில், நவாப் அவளைத் தடுத்து, "அம்மா, உன் கற்பின் நெறிகண்டு கலக்கம் அடைந்தேன். என்னை மன்னிக்கவேண்டும். நான் உன் நாயகனைக் கொல்லவில்லை. ஆதலால், நீ என் மேல் கோபம் கொள்ளாது இந்த ஊரை நீயே ஆண்டிரு; தற்கொலை புரிந்துகொள்ளாதே" என்று வேண்டினன். ராணிபாய், நவாபின் சொல்லைக் கேளாது, "எனது நாயகன் சென்ற இடத்திற்கே யானும் செல்வேன்" என்று கூறி அத்தீயிற் பாய்ந்தனள்.

பிறகு சததுல்லாகான், செஞ்சியிலுள்ள அரிய பொருள்களை எல்லாம் கொள்ளைகொண்டு தனது நகரம் சேர்ந்தனன். அங்கு அவன் தனக்கு உதவியாக வந்த பாளையக்காரர்களுக்கு உபசாரவார்த்தை கூறி அவரவரைத் தங்கள் ஊருக்கு அனுப்பினன். பிறகு,

தனது நாயகனுடன் மனம் உவந்து உயிர்விட்ட ராணி பாயது கற்பினை எண்ணி அஞ்சி, அவளது கோபத்திற்கு ஆளாகாதபடி, அந்த உத்தமியின் பெயர் என்றும் அழியாதிருக்கும் வண்ணம், அவளது பெயரால் ஓர் ஊரை உண்டாக்கினன். அந்த ஊரே நாளைக்கும் ராணிப்பேட்டை என்னும் பெயருடன் விளங்கி வருகிறது.

முற்றிற்று.

☞ (**Desingu Rajan** is also approved by the **Text-Book Committee for School-use.** Vide Fort St. George Gazette page 517, dated 13th November 1928.)

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை. (30102-11.)

☞ பதிப்புகள் 20-க்கு மேல் வெளிவந்திருக்கின்றன. 1,00,000 பிரதிகளுக்கதிகம் செலவாகி யிருக்கின்றன. ஆகையால் இவைகளின் சிறப்புக்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா? தெலுங்கு, கன்னடப் பதிப்புகளும் உண்டு.

# ஆரியமத - - உபாக்கியானம்

(அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன்)

முதல் பாகம் அணு 8 :: இரண்டாம் பாகம் அணு 10

## ஒவ்வொரு பாகமும்

## அநேக நீதிக் கதைகள் கொண்டது

சில முக்கிய அபிப்பிராயங்கள்

**The Madras Mail.**— * * The book is well adapted for use in the lower forms of Schools, as a Text-Book of Morals.

**The Hindu.**— * * The book can be profitably introduced in Elementary Schools for Moral Instruction.

**Sir P. S. Sivaswami Aiyar, K. C. S. I., C. I. E.**—* * The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. * * * Very well adapted for the Lower Forms of our schools.

சுதேசமித்திரன்.— * * பால்யர்களுக்கு நீதி மார்க்கங்களைப் போதிக்கும் அருமை நூலாகும். * இத்தகைய சிறந்த நூலை, கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக ஏற்படுத்துதல் மெத்த அவசியம். கீழ்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தகுந்தபடி நன்றாக எழுதப்பட்டிருக்கிறது.

தேசபக்தன்.—எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் வாசக பாடமாகவும், சமய பாடமாகவும், ஆண் பெண் பாடசாலைகளில் போதிக்கப் படல் வேண்டும். இந்நூல் சிறுவர், சிறுமியர் உள்ளத்தைக் கவரத்தக்கவாறு எழுதப் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# நால்வர் சரித்திரம்

நால்வர் திருவுருவப்படத்துடன் கூடியது

[மா. துரைசாமி முதலியார் அவர்கள் இயற்றியது]

சாதா பைண்ட் அணா 10 :: அட்டை பைண்ட் அணா 12

## சில முக்கிய அபிப்பிராயங்கள்

**சுதேசமித்திரன்.**—சென்னை, மயிலாப்பூரில், அரிய நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகுக் குதவிவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இந்நூலையும் பதிப்பித்திருக்கின்றனர். சைவர்களிற் பெரும்பாலோர் நால்வர் சரிதத்தினைப் படித்திருப்பினும், சுருக்கமாக விஷயங்கள் ஒன்றையும் விடாமல் அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இந்த நூல், தோன்ருத் துணையாகவிருக்கும். ஆங்காங்கு சரிதப்போக்கை ஆதரிப்பனவாகவுள்ள பாடல்களும் இதில் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

* * *

**நவசக்தி.**—சைவப் பயிரைத் தழைத்தோங்கச் செய்த சமய குரவரான நால்வருடைய சரித்திரங்களைச் சுருக்கமாக அழகான தெள்ளிய நடையில் ஸ்ரீமான் மா. துரைசாமி முதலியார் எழுதியிருக்கிருர். இந்நூலைக் காணும்போதே எமக்கு ஆநந்தம் உண்டாயிற்று. இதனுடைய மேல் அமைப்பும், உள் அங்கங்களும் எம்மைப் பெரிதும் மகிழ்வித்தன. நால்வர் ஒவ்வொருவருடைய சரித்திரத்திலும் அவரவர் அவ்வப்பொழுது பாடிய பதிகங்கள் படிப்பவருடைய உள்ளத்தைப் பரவசப் படுத்துகின்றன. அழகான தமிழ் நடையில், நால்வருடைய சரித்திரத்தையும், ஒரே நூலில் நாம் இப்பொழுதுதான் முதல் முதலாகக் காண்கிறோம்.

* * *

**லோகோபகாரி.**—இனிய தமிழில், எளிய நடையில், தெளிவான முறையில் எழுதியிருக்கிருர். நால்வர் பாடிய மேலான பாடல்களும் இதில் இடையிடையே கலந்து நிலவுகின்றன. சைவர்கள் மட்டுமேயன்றித் தமிழர்கள் ஒவ்வொருவரும் நால்வர் சரித்திரத்தைப் படித்து இன்பமும் பயனும் அடைதல் இன்றியமையாதது. பெரியோரும், சிறியோரும், பெண்களும் பிள்ளைகளும் இதனைப் படித்துப் பயனடையலாம். கல்வியிலாகாத் தலைவர்கள் இப்புத்தகத்தைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்தல் நலம். இதனை வெளியிட்ட சென்னை, மயிலாப்பூர், அல்லயன்ஸ் கம்பெனியார் திருப்பணியை நாம் போற்றுகிறோம்.

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்

இந்நாவல் பெயர்பெற்ற துப்பறிவன ஷண்முகசுந்தரத்தின் துப்புத்திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. மிகவும் எளிய நடை. எடுத்தவர் படித்து முடிக்காமல் கீழே வைக்கமுடியாது. 4-போடோ படங்களுடன் விலை ரூ. **1.**

சில முக்கிய அபிப்பிராயங்கள்

திரு. வா. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்., ஏ.—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன்முதல் இறுதிவரையும் நன்கு அமையப்பெற்றுள்ளது. இந்நூலின் முக்கிய புருஷஞன ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும், உத்தம குணங்களும் படிப்பவர் மனதைக் கவரத்தக்கன.

o o o

சுதேசமித்திரன்.—* * படிக்கப் படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணிபோல் மனதில் பதியுமாறு இப்புத்தகம் எழுதப் பெற்றிருப்பதால் இதனைப் படிப்போர் பயனடைவார்களாக.

o o o

தேசபக்தன்.—* * தெள்ளிய நடையில் எழுதப்பெற்று பல சித்திரப் படங்களோடு கூடியது. * * ஒவ்வொருவரும் இதனை வாங்கி அவசியம் வாசிக்க வேண்டியதே.

o o o

நவசக்தி.—இந் நூலுக்கு உயிர்நாடியாகவுள்ள ஷண்முகசுந்தரம் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றத்தை ஆராய்ச்சி செய்வதில் காண்பிக்கும் சாமார்த்தியங்கள் போற்றத் தக்கனவா யிருக்கின்றன. இந்நூலைப் படிக்குங்காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறோம். இதை ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது அவசியம்.

o o o

**The Hindu.**—* * This is an interesting Detective Novel. * The story is designed to bring out the strength and value of chastity for women-folk and as such the book deserves to be placed in the hands of all young girls. The story is simple and the printing good.

o o o

**New India.**—This is an original detective tale in Tamil. The hero of course is the detective **Shanmukhasundaram**, who has already made himself popular as the hero of a Novel bearing that name and written by the same author. **The story is full of interest from beginning to end.**

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# A TRAINING SCHOOL ARITHMETIC

# டிரெயினிங் ஸ்கூல்

# : : : ஆரம்ப கணிதம்

☞ சென்னை, கல்வி இலாகா பாடக்கிரமத்தை
அனுசரித்து எழுதப்பட்டது.

இது

P. சீதாராமன், பீ., ஏ., எல். டி.,
அவர்கள் இயற்றியது.

எல்லா டிரெயினிங் பள்ளிக்கூடங்களிலும் இது பாட புத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாவராலும் மிகவும் பாராட்டப் பெற்றது. விலை ரூ. **1—2—0.**

சில முக்கிய அபிப்பிராயங்கள்

**R. Tata Esq., M. A., L. T.**, District Educational Officer, West Godavari.—* * All that is usually found undesirable in a work is omitted; due care is taken in presenting the topics in an *easy natural*, *clear* style; stress is laid on the method and style of working out the problems; space work has received its proper attention.

I have every hope that teachers under training and even prospective teachers of Elementary Schools will find the book of considerable help to them in getting correct notions of the elementary parts of Mathematics.

* * *

**K. S. Appaswami Aiyar Esq., M. A., L. T.,** District Educational Officer, South Arcot —* * A useful publication for students of the Elementary Higher and Lower Grades. * * *

The exposition of the subject-matter is simple and direct and there is an adequate number of exercises.

☞ ஒரே காலத்தில், அதிகம் காப்பிகளுக்கு ஆர்டர் செய்வோர்க்கு, தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# ஷண்முக விஜயம்

## கந்தபுராண வசனம்

கலியுகவரதராய் அன்பர்கள் கலிகளைத் தீர்ப்பவர் யார் நிர்க்கதியாய்த் தம்மைச் சரண் புகுபவர்களைக் காப்பவர் யார்? சூரபதுமனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தவர் யார்? வேடர் மகளாகிய வள்ளி நாயகியைத் தடுத்தாட்கொண்டது யார்? தம்மை வணங்குபவர்கள் வேண்டியவைகளை வேண்டியவாங்கு அளிப்பவர் யார்?

முருகன்! குமரன்!! ஷண்முகன்!!!

என்பதற்குச் சிறிதும் ஐயமுண்டோ?

உலகத்திலுள்ள அஞ்ஞானத்தையும் துக்கத்தையும் அகற்றி, உலகத்தோரைச் சுகத்தில் வைப்பதற்காகச் சிவபெருமான் தமது நெற்றிக் கண்களினின்றும் தமது பழைய உருவத்துடன் அவதரிக்கச் செய்த ஷண்முகக் கடவுளது திவ்விய சரித்திரமாகிய விரிந்த கந்தபுராணத்தை, அப்பெருமானது அடியார்களனைவரும் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனும், கிருத்திகை, சஷ்டி, விசாகம் முதலிய விசேஷ தினங்களிலும் பிரதி தினமும் அத்திவ்விய சரித்திரத்தை யாவரும் பாராயணஞ்செய்து உய்யுநெறியைச் சேரவேண்டுமென்ற நோக்கத்துடனும், விஷயங்களில் ஒன்றையும் விடாமல் சுருக்கமாகவும், சிறுவர் சிறுமிகளும் படித்தறிந்து கொள்ளத்தக்க எளிய நடையிலும் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. யாவரும் இந்நூலை வாங்கிப் படித்து அப்பெருமானது அருளைப் பெற்று உய்வாராக!!! 19-படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மிக்க அழகாய்ப் பயிண்ட் செய்யப்பெற்றது. ஆப்டோன் படங்கள் கண்ணைக் கவரத் தக்கன.

சீர்திருத்திய புதிய பதிப்பு. விலை அணா 12

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# விஜயபாஸ்கரன்

அல்லது

## ஒரு குற்றத்துக்கு ஒன்பது குற்றம்

வரகவி-திரு. அ. சுப்பிரமணிய பாரதி எழுதியது

பெரிய நாவல் : : விலை ரூ. 2

இந்த நாவல், படிப்பவர்கட்கு பாஷா ஞானமும், நீதி விளக்கமும், அரிய பெரிய கருத்தும் நமது பெரியவரின் நடவடிக்கைகளும் விளங்கக்கூடியபடி எழுதப்பட்டுள்ளது. நடை சிறந்து, கற்பனைகள், அலங்காரங்கள், பழமொழிகள், சம்பாஷணைகள் முதலிய முறைகளைப் பின்பற்றி இருக்கின்றமையின், படிப்பவர்க்கு இது உற்சாகந் தருமென்பதில் ஐயமில்லை. அன்றியும் இது குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல் முதலிய குற்றங்களின்றி, உலகம் நல்வழிப் பட வேண்டுமென்கிற நோக்கத்துடனும் மாறுபடா மனநிலையுடனும் பெரியோர்க் கஞ்சி எழுதியதாதலின் கல்லார்க்கும் கற்றவர்க்கும் மற்றும் எல்லார்க்கும் இன்பமளிக்குமொரு சிறந்த முயற்சியாகும். இதில் லோபகுணம், பொறாமை, காமம் முதலிய இழி குணங்களினா லுண்டாகும் இழிவு, சத்தியம், தயை, சாந்தம் முதலிய நல்ல குணங் களினா லுண்டாகும் மேன்மையும் பெரியோர்களுடைய தரிசன விசேஷமும், தெய்வபக்தியின் சிறப்பும், ஆத்மசக்தியின் அபூர்வச் செயலும் இன்னும் இவைபோன்ற பல நன்னடக்கைகளின் விசேஷங்களும் பலவாறான சூழ்ச்சிகளுடன் கூடிய அரிய பெரிய ஆச்சரிய சம்பவங்களினாலே விளக்கப்பட் டிருக்கின்றன. இதில் நாயகி நாயகர்களா யமைந்துள்ளவர்கள், அந்யோந்ய தம்பதி யாகையினால் அவர்களுடைய செய்கைகளும், சம்பாஷணைகளும், நடவடிக்கைகளும், உறுதி நிலையும், ஊக்கமும், உள்ளக்கிளர்ச்சியும், படிப்பவர் வியந்து பேசும்படியா யிருக்குமென்பது எமது துணிபாம். உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்றது. 2. பாகங்களும் விலை ரூபா 2.

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# திராவிட வேதத்திரட்டு

கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியார், பீ. ஏ., அவர்கள்

அழகாய்த் தொகுத்தது : : புதிதாய் வெளிவந்தது

**560**-பக்கங்கள் : : விலை ரூபா **3-8-0**

*மிகவும் அரிய வெளியீடு*

**லோகோபகாரி.**—* * *இதில் மூவர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் முதலிய பன்னிரு திருமுறைகளிலும் திருப்புகழிலும் திரட்டிய அரிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன. மூவர் தேவாரத்தில் சிறந்த பாடல்கள் இதில் திரட்டப்பட்டிருக்கின்றன. இதில் (274) இருநூற்றெழுபத்திநாலு தலங்களில் மூவர் பாடிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன. சிவத்தல யாத்திரை செய்ய விரும்பும் அன்பர்களுக்கு இது சிறந்த துணையாகும். இதனைத் திரட்டிய அன்பர்* **தமிழறிஞரும், சைவப் பெரியாருமான கயப்பாக்கம் உயர் திரு. சதாசிவ செட்டியார் என்றால் இதுபற்றி விருத்துரைத்தல் வீணாகும். சைவ சமயத்தில் தோன்றும் பாக்கியம் பெற்ற ஒவ்வொருவரிடமும் இந்த நூலின் ஒரு பிரதி இருக்க வேவேண்டும்; இது அவர்களுக்கு உயிர்த்துணையாகும். இதன் காகிதம், அச்சு, கட்டடம், அனைத்தும் நேர்த்தி. விலை ரூ. 3-8-0.**

**நவசக்தி.**—* * *பாராயணத்துக்குரிய பாடல்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருப்புகழ்த் திரட்டும் ஒருபால் ஒளிர்கிறது.* **க்ஷேத்திர யாத்திரை செய்வோர்க்கு எல்லா வழியிலும் வழிகாட்டியா யிருப்பது இத்திராவிட வேதத் திரட்டு. ரூ. 3-8-0.**

**இந்து சாதனம்.**—* * *உயர்ந்த காகிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டிருக்கின்றது. இவர்கள் வெளியிடும் பிரசுரங்களின் விசேஷத்தைத் தமிழுலகம் நன்கறியுமாதலின் நாம் இங்கே கூறுதல் மிகையாம். சைவாசாரமுள்ள ஒவ்வொருவரிடத்தும இப்புத்தகம் ஆவசியகம் இருத்தல்வேண்டும். விலை ரூ. 3-8-0.*

**குமரன்.**—* * *திருமுறையை நியம பாராயணஞ் செய்பவருக்குப் பெரிதும் உபயோகமாகும்.* **திருப்புகழிலிருந்து சில பாக்களும் சேர்க்கப் பெற்றுள்ளன.** *ஒவ்வொரு தலத்தின் புராணக் குறிப்புகளும், இருக்குமிட விவரமும் குறிக்கப்பட்டிருக்கின்றன.* **உயர்ந்த காகிதத்தில் திறம்பட அச்சிடப்பெற்றிருக்கிறது.**

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# குண்டலகேசி

அல்லது

## தற்கொல்லியை முற்கொண்டவள்

தமிழ் மொழியிலே "பஞ்ச காவியங்கள்" என்று கற்றோரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் இக்காலத்தில் இல்லை; பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்ததுபோலும்! ஆனால் இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதென்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக் கொண்டும், பிற சாதனங்களைக் கொண்டும் ஒருவாறு அறியக் கிடக்கின்றது. அவைகளை ஆதாரமாகக் கொண்டு நாகை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பிள்ளை இந்நாவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். இது சரித்திர சம்பந்தமான நாவலாகும். பௌத்த மதங்களைப்பற்றியும் இந்நாவல் விவரித்துக் கூறுகின்றது. இந்நாவலின் கம்பீரமும், அழகும் வாய்ந்த இனிய வசன நடை, படிப்போர் மனதைப் பெரிதும் பரவசப்படுத்தும்படியான வகையில் அமைந்திருக்கிறது. புதிய பதிப்பு விலை அணா 6

---

# முரளீதரன்

(ஓர் இந்திய மாதால் எழுதப்பட்டது)

மிகவும் ஆநந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம்பருவத்தின் இன்பமும், நம் மதத்திற்குரிய சிறந்த விவாக விமரிசைகளும், அவ்விவாக காலத்தில் ஏற்படும் கோலாகலங்களின் அழகும், ஜகத் ரக்ஷகியாய், ஸகல ஜீவ தயாபரியாய் ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பும், அவளது பக்தியே வீடுபட்டு நிற்கும் பக்த கோடிகளின் உயர்வும், கடற்கரைக் காட்சியும், உண்மை நட்பின் பெருமையும், ஊராருடன் வீண் வம்பு பேசுவதனால் வரும் தீங்கும், அன்புள்ள காதலர்கள் மனோநிலையும், பெருமையின் சிறப்பும், எளிய நடையில் சிறுமியரும் உத்ஸாகத்துடன் வாசிக்கும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. அழகிய ஆப்டோன் சித்திரப் படங்களும் கொண்டது. விலை அணா 10

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# ஐரோப்பிய :: :: மஹா யுத்தம்

**58-ஆப்டோன் படங்களுடன் :: விலை ரூ. 1-4-0**

*ஐரோப்பிய தேசங்களின் சரித்திரத்தையும், அதன் மூலமாய் வெளியாகும் அநேக ஸூக்ஷ்மமான ரஹஸ்யங்களையும் ஆதிமுதல் ஆராய்ந்து, இந்த யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்களையும், ஐரோப்பாவிற்கும் நம்தேசத்துக்கும் ஏற்பட்டுள்ள நெருங்கிய சம்பந்தத்தையும், இவைபோன்ற பல விஷயங்களையும், எக்காலத்தும் எல்லோருக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டிருப்பதால், இது யாவர்க்கும் பயன் படுமென்பதில் தடையில்லை. தெளிவாயும், இது படிப்பவர்க்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும் வண்ணம், கதைப் போக்கிலேயே எழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.*

**சில முக்கிய அபிப்பிராயங்கள்**

**The Hindu.**—* * The style is clear, easy-flowing and graphic, the details of European History given in the book are full, well arrangad and to the point, no more, no less. * * the noble part played by India in the struggle are all narrated with a vividness and intensity that grip the reader by the interest created. Appendices are full of information. It is on the whole good work done in a new direction.

**The Madras Mail.**—* * An admirably written and comprehensive book on the war. The book gives not merely a lucid account of the war but furnishes an historical background for the intelligent understanding of the conflict of political and national ideals that has brought about the war.

**கிருஷிகன் :**—* * *பார்த்தவுடன் கண்ணைக்கவரும் விதமாக அச்சிடப்பட் டிருக்கிறது. அதற்கேற்பவே, உள்ளடங்கிய விஷயமும் சிலாகிக்கத் தக்கவாறு அமைந்திருக்கிறது. ஐரோப்பிய தேச சரித்திர சம்பந்தமான பல விஷயங்களையும் விவரித்திருப்பதால், ஐரோப்பாவைப்பற்றிய விஷயங்களை சாமான்ய ஜனங்களும் அறிய இது சிறந்த சாதனமாகும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.*

---

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# பஞ்சரத்தினம்

(ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றியது)

மணாளனைத் தவிர மற்றொருவரை மனதிலும் நாடாத ருக்மிணி ; நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டு வந்த **சாவித்திரி** ; காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்து வந்த **சீதை** ; தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த காலத்துத் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவும் எண்ணிக் காலங் கழித்துவந்த **தமயந்தி** ; கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப் பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்ட **சகுந்தலை** முதலிய ஐந்து புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. ஐந்து அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. 8 ம் பதிப்பு. விலை அணா **12**.

---

## சில முக்கிய அபிப்பிராயங்கள்

**தேசபக்தன்.**—* * பஞ்சரத்தினத்தின் உள்ளுரை பொன்னேபோல் போற்றத் தக்கது. இந்நூல், படிப்போர் உள்ளங் கவருமாறு செவ்விய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

---

**சுதேசமித்திரன்.**—* * இனிய நடையில் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. ஸ்திரீ புருஷர்கள் இருவரும் யாதொரு வித்தியாசமுமின்றி படிப்பதற்கேற்ற புத்தகம் இதுவே.

---

**P. A. Subramania Aiyer Esq., Head Master,** Hindu High School, Triplicane. * *— It is written in very good style.

---

**S. Anavarathavinayakam Pillai Esq., M. A., L. T.**—It is free from errors and written in an elegant style and as such is well adapted for use as a Text-book.

---

**T. Kanakasundaram Pillai Esq., B. A.**—May be prescribed for non-detailed study in the higher forms of Secondary Schools.

---

**The Madras Mail.**—* * It ought be of peculiar interest to the youth of India.

---

**New India.**—* * Writen in elegant and intelligible Tamil.

---

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# திருப்புகழ் விருத்தியுரை

இவ் அரிய நூலில், திருவேரகம் எனும் சுவாமிமலை; திருவாவினன்குடி எனும் பழநி; திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூர் ஆகிய 3-திவ்விய ஸ்தலங்களின்மீது ஸ்ரீமத் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாட்டுகளும், அத்திருப்பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை முதலியன மிக்க அழகாய் எழுதப்பட்டு, உயர்ந்த கனமான காகிதத்தில் அழகாய் அச்சிட்டு, கண்கவரும்படி உயர்தர பைண்ட் செய்யப்பட்டது. 10-அழகிய படங்களும் உண்டு. விலை ரூ. 6; ரூ 8.

## பத்திரிகை அபிப்பிராயங்கள்

**சுதேசமித்திரன்.**—* * முதனூலின் அழகிற்கியைந்ததாயிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமான தென்று அறிவிக்கப்பட்டோம். ஆனல் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

**லோகோபகாரி.**—* * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. பண்டிதரும் பாமாரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துக் கொள்ளலாம்.

**ஸ்வராஜ்யா.**— * * பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

**குமரன்.**—* * பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

**இந்து சாதனம்.**—* * மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. கண்டோர் கண் கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது.

**ஸமரஸ போதினி.**—* * * திருப்புகழுக்கு இதுவரை நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பி விடாது நன்கு விளக்கி எழுதப்பட் டிருக்கின்றது.

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

## : : சில அரிய தமிழ் நூல்கள் : :

| | | | |
|---|---|---|---|
| பால ஷண்முக விஜயம் (படங்களுடன்) ... | 0 | 8 | 0 |
| மரகதவல்லி (அற்புதமான நாவல்) ... | 0 | 12 | 0 |
| இயற்கை அற்புதங்கள் (படங்களுடன்) ... | 0 | 10 | 0 |
| ராஜம் ஐயர் சரிதை ,, ... | 0 | 8 | 0 |
| முரளீதரன் ,, ... | 0 | 10 | 0 |
| வியாச விதானம் ... | 0 | 12 | 0 |
| ஐரோப்பிய மஹா யுத்தம் (58-படங்களுடன்) ... | 1 | 4 | 0 |
| தனபாக்கியம் அல்லது அதிர்ஷ்டவதியின் சரித்திரம்... | 2 | 0 | 0 |
| தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை ... | 1 | 0 | 0 |
| பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி ... | 0 | 12 | 0 |
| ருக்குமிணி அல்லது பதி பக்தி ... | 0 | 8 | 0 |
| விஜய பாஸ்கரன் ... | 2 | 0 | 0 |
| கந்தாலங்காரம், கந்தானுபூதி (புது முறையில்) ... | 0 | 3 | 0 |
| திருப்புகழ் ரத்தினமாலை ... | 0 | 3 | 0 |
| அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி (1 & 2) ... | 3 | 0 | 0 |
| ஷேக்ஸ்பியர் சரிதையும், பெரும்புயலும் ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீ பால ராமாயணம் (போடோ படங்களுடன்) ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீ பால பாரதம் ,, ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீ பால பாகவதம் ,, ... | 0 | 8 | 0 |
| சிவகுமாரன் அல்லது கொலைஞன் யார்? ... | 1 | 0 | 0 |
| மோகனாங்கி அல்லது காணமற்போன பெண்மணி ... | 1 | 4 | 0 |
| சுகுமார சரித்திரம் ... | 0 | 6 | 0 |
| பத்மினி அல்லது தீர ரமணியின் சரித்திரம் ... | 0 | 3 | 0 |
| பாதாள வாசி ... | 0 | 6 | 0 |
| மூர்த்தி நாயனார் சரித்திரம் ... | 0 | 3 | 0 |
| தேடாத செல்வம் ... | 0 | 3 | 0 |
| கமலாகாந்தன் அல்லது பித்தன் ... | 0 | 2 | 0 |
| திருமயிலைச் சிறப்பு ... | 0 | 2 | 0 |
| அறநூல் ... | 0 | 12 | 0 |
| பீஷ்மர் சரித்திரம் ... | [illegible] | 6 | 0 |
| குஹன் சரித்திரம் ... | [illegible] | 4 | 0 |
| திருக்குறள் நீதிக் கதைகள் ... | 0 | 10 | 0 |
| கன்றுங் கனியுதவும் ... | 0 | 7 | 0 |
| குண்டலகேசி அல்லது தற்கொலையின் [illegible] நாவல் | 0 | 6 | 0 |
| விசாரசன்மர் (சண்டேசுர நாயனார் சரித்திரம்) ... | 0 | 4 | 0 |
| **விவேக போதினி**, அழகாய் கலிகோ பயிண்ட் செய்த வருஷத் தொகுதிகள்—ஒவ்வொன்றின் விலை ... | 4 | 8 | 0 |

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

600 009

## :: அறிவைப் பெருக்கும் அரிய நூல்கள் ::

| | | | |
|---|---|---|---|
| திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை, 10-படங்களுடன் | ... | 1 | 0 |
| ஆரியமத உபாக்கியானம், முதற் பாகம், 20-ம் பதிப்பு | ... | 0 | 8 |
| ஷை இரண்டாம் பாகம், 13-ம் பதிப்பு | ... | 0 | 10 |
| பஞ்ச ரத்தினம், 9-ம் பதிப்பு, படங்களுடன் | ... | 0 | 12 |
| மாகதவல்லி, 6-ம் பதிப்பு, படங்களுடன் | ... | 0 | 12 |
| ஸ்ரீமத் ராமாயண ஸாரம், 1-ம் பாகம், படங்களுடன் | ... | 1 | 0 |
| ஸ்ரீமத் ராமாயண ஸாரம், 2-ம் பாகம், படங்களுடன் | ... | 1 | 0 |
| ஸ்ரீமத் பாரத ஸாரம், 3-ம் பதிப்பு, படங்களுடன் | ... | 1 | 2 |
| ஸ்ரீமத் பாகவத ஸாரம், 3-ம் பதிப்பு, படங்களுடன் | ... | 1 | 0 |
| இயற்கை அற்புதங்கள், 4-ம் பதிப்பு | ... | 0 | 10 |
| ஸ்ரீ பால ஷண்முக விஜயம், படங்களுடன் | ... | 0 | 8 |
| ஸ்ரீ பால ராமாயணம், அழகிய படங்களுடன் | ... | 0 | 8 |
| ஸ்ரீ பால பாகவதம், அழகிய படங்களுடன் | ... | 0 | 8 |
| ஸ்ரீ கிருஷ்ணாவதார சரித்திரம், படங்களுடன் | ... | 0 | 8 |
| ராஜம் ஐயர் சரிதை, படங்களுடன் | ... | 0 | 8 |
| முரளீதரன், (மலைமகள் எனும் மாது எழுதியது) | ... | 0 | 10 |
| வியாஸ விதானம், (மொழி பெயர்ப்பு விளக்கமும்) | ... | 0 | 12 |
| ஐரோப்பிய மஹா யுத்தம், 58-படங்களுடன் | ... | 1 | 4 |
| விக்ரமசிங்கன் கோட்டை மர்மம், 3-ம் பதிப்பு | ... | 1 | 0 |
| தனபாக்கியம் எனும் அதிருஷ்டவதியின் சரித்திரம் | ... | 2 | 0 |
| ஷண்முக சுந்தரம் அல்லது காதல் திறம் | ... | 2 | 0 |
| தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை | ... | 1 | 0 |
| பாதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி, 4-ம் பதிப்பு | ... | 0 | 12 |
| ருக்மிணி அல்லது பதி பக்தி | ... | 0 | 8 |
| விஜய பாஸ்கரன், ஓர் அருமையான நாவல் | ... | 2 | 0 |
| திராவிட வேதத் திரட்டு | ... | 3 | 8 |
| திருப்புகழ் விருத்தியுரை, கிளேஸ் பதிப்பு | ... | 6 | 0 |
| திருப்புகழ் விருத்தியுரை, பெதர் வெயிட் பதிப்பு | ... | 8 | 0 |
| பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம் | ... | 2 | 4 |
| சிவகுமாரன் அல்லது கொலைஞன் யார்? | ... | 1 | 0 |
| மோகனாங்கி அல்லது காணாமற்போன பெண்மணி | ... | 1 | 4 |
| மனுநீதிச் சோழன், (மனுமுறைகண்ட வாசகம்) | ... | 0 | 8 |

மானேஜர், விவேக போதினி ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

606